விலை: 30.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

டிஸ் அன்ரனா
மற்றும் கேபிள் TV
உதிரிப்பாகங்கள்
நியாயமான விலையில்
கிடைக்கும்
dishtv
SATS-TECH
(C-4179)
Phone: 021 222 8812, Mob:- 076 886 1160

சங்கு 19 வள்ளுவர் ஆண்டு 2049 ஐப்பசி 06 செவ்வாய்க்கிழமை (23.10.2018) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 308

## வவுனியாவில் ஆயுதங்கள் மீட்பு

(பனிக்கன்குளம்)

வவுனியா கனகராயன்குளம் பகுதியிலிருந்து நேற்று இரவு ஆயுதங்கள் சிலவற்றை மீட்டுள்ளதாக கனகராயன்குளம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவ்விடயம் குறித்து 24☛

## போதைப்பொருள் கடத்தலை அறிவிக்க விசேட இலக்கம்

(கொழும்பு)

நாட்டில் இடம்பெறும் போதைப் பொருள் பாவனை, போதைப் பொருள் கடத்தல் போன்ற போதைப் பொருளுடன் சம்பந்தப்பட்ட அனைத்து விடயங்களையும் 24☛

எதிர்வரும் வியாழக்கிழமை

## அரசியலமைப்பு சபை கூடுகின்றது

(கொழும்பு)

சபாநாயகர் கரு ஜயசூரிய தலைமையில் நாளை மறுதினம் வியாழக்கிழமை அரசியலமைப்புச் சபை கூடவுள்ளது.

நாடாளுமன்ற ஊடக செயலாளர் சமிந்த கமகே இத 24☛

## நல்லூரில் நாளை மாபெரும் எழுச்சிக்கூட்டம்

# தென்பகுதி ஊடகவியலாளர்கள் யாழ். நோக்கி படையெடுப்பு

**(யாழ்ப்பாணம்) தமிழ் மக்கள் பேரவையின் ஏற்பாட்டில் நாளை நடைபெறவுள்ள மாபெரும் மக்கள் எழுச்சிக் கூட்டத்தில் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் அறிவிக்கவுள்ள அவரின் எதிர்கால அரசியல் நிலைப்பாட்டை அறிந்து கொள்வதற்காக தென்பகுதி ஊடகவியலாளர்கள் யாழ்ப்பாணத்தை நோக்கி படையெடுக்கத் தொடங்கியுள்ளனர்.**

நாளை மறுதினம் 25-ம் திகதியுடன் வடக்கு மாகாண சபையின் ஆட்சிக் காலம் முடிவுக்கு வருகின்ற நிலையில் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தனது எதிர்கால அரசியல் நிலைப்பாட்டை தமிழ் மக்களுக்கு தெளிவுபடுத்தவுள்ளார்.

இதற்காக நாளை 24- ம் திகதி புதன்கிழமை காலை 9.30 மணியளவில் நல்லூர் வடக்கு வீதியில் அமைந்துள்ள நடராசா பரமேஸ்வரி மண்டபத்தில் மாபெரும் மக்கள் எழுச்சிக்கூட்டம் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் முதலமைச்சர் விக்னேஸ்வரன் முக்கிய உரையை ஆற்றவுள்ள நிலையில்,

நாடு முழுமையும் அவரின் உரை மீது கவனம் செலுத்தத் தலைப்பட்டுள்ளது.

இந்நிலையில் தென்பகுதி ஊடகவியலாளர்கள் யாழ்ப்பாணத்தை நோக்கி படையெடுக்கத் தொடங்கியுள்ளனர்.

இதேவேளை முதலமைச்சரின் நாளைய உரை தொடர்பில் தென்பகுதி ஊடகங்கள் முதன்மைப்படுத்தி செய்தி வெளியிட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. (ம)

## கணவன், மனைவியை தாக்கிவிட்டு வீடு புகுந்து கொள்ளையிட்ட இருவருக்கு கடூழிய சிறை

### யாழ்ப்பாண நீதிமன்றம் தீர்ப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் செப்பல் வீதியில் உள்ள வீடொன்றுக்குள் புகுந்து அங்குள்ளவர்களைத் தாக்கிவிட்டு நகை மற்றும் பணத்தைக் கொள்ளையிட்ட குற்றவாளிகளில் ஒருவருக்கு இரண்டு வருடங்கள் கடூழியச் சிறைத் தண்டனையும் மற்றொருவருக்கு 10 ஆண்டுகள் ஒத்திவைக்கப்பட்ட ஒரு வருட கடூழியச் சிறைத் தண்டனையும் விதித்து யாழ்ப்பாணம் நீதமன்ற நீதிவான் 24☛

## வட மாகாண சபையின் இறுதி அமர்வு இன்று

### முதல்வர் விக்னேஸ்வரன் பிறந்த தினம்; தேநீர் உபசாரத்துடன் நிறைவடைகிறது

(யாழ்ப்பாணம்)

முதலாவது வடக்கு மாகாண சபையின் இறுதி அமர்வு இன்று காலை 9.30 மணிக்கு கைதடியில் உள்ள வடக்கு மாகாணசபை பேரவை அலுவலகத்தில் வடக்கு மாகாண அவைத்தலைவர் சீ.வீ. கே.சிவஞானம் தலைமையில் நடைபெறவுள்ளது.

வடக்கு மாகாண சபையின் ஆட்சிக்காலம் நாளை 24-ம் திகதி புதன்கிழமை நள்ளிரவு 24☛

## மாமியார் உயிரிழந்த தகவலை அறிந்த மருமகள் மரணம்

(பனிக்கன்குளம்)

வவுனியாவில் மாமியார் உயிரிழந்து 24மணி நேரத்திற்குள் மருமகள் உயிரிழந்த சம்பவம் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

இவ்விடயம் குறித்து மேலும் தெரியவருகையில், வவுனியா தரணிக்குளம், சாஸ்திரிகூழாங்குளம் பகுதியில் கடந்த 18ஆம் திகதி 84 வயதுடைய மாமியார் 24☛

## அன்பு வாசகர்களே!



வடக்கு மாகாண சபையின் இறுதி அமர்வு இன்று நடைபெறுவதையொட்டி முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் ஆற்றிய உரையின் சாராம்சம் உள்ளே...

## வடக்கு காணிகளை வருட இறுதிக்குள் விடுவிக்க நடவடிக்கை எடுங்கள்

### ஜனாதிபதி மைத்திரி ஆளுநருக்கு பணிப்பு

(கொழும்பு)

வடக்கு, கிழக்கு பிரதேசங்களில் பாதுகாப்பு படையினரின் வசமுள்ள காணிகளை அதன் உரிமையாளர்களிடம் கையளிக்கும் நடவடிக்கையினை இவ்வருடம் டிசம்பர் 31ஆம் திகதிக்கு முன்னர் நிறைவு செய்ய தேவையான பங்களிப்பினை வழங்குமாறு ஜனாதிபதி, மாகாண ஆளுநர்களுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

2018ஆம் ஆண்டிற்கான மாகாண சபை செயற்பாடுகள் மற்றும் அவற்றின் முன்னே 24☛



## மரபணு இரசாயன ஆய்வுகூடத்தை ஆரம்பிக்கிறது அரசு

(கொழும்பு)

இலங்கையில் முதலாவது மரபணு இரசாயன ஆய்வு கூடத்தை அமைக்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

இதுவரை ஜின் டெக் என்ற தனியார் நிறுவனம் ஒன்றினால் மரபணு ஆய்வறிக்கை வழங்கப்பட்டு வந்தநிலையில் அரசால் 24☛

## 150 கிலோ கேரள கஞ்சாவுடன் யாழ். மாதகல் கடற்பரப்பில் இரு சந்தேக நபர்கள் கைது



23☛

## இந்தியாவிலிருந்து நாடு திரும்பியதும் ரணிலை அவசரமாக சந்தித்த மைத்திரி

(கொழும்பு)

இந்திய விஜயத்தை முடித்துக் கொண்டு நாடு திரும்பியுள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை சந்தித்துள்ளார்.

அவசர அவசரமாக ஏற்பாடு செய்யப்பட்ட இந்த சந்திப்பு ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்றுள்ளது.

இந்த சந்திப்பின்போது 24☛

## அநாமதேய துண்டுப்பிரசுரம் தமிழ் மக்கள் பேரவை மறுப்பு

(யாழ்ப்பாணம்).

தமிழ் மக்கள் பேரவையின் பெயரில் விடுதலைப்புலிகளின் இலச்சினையுடன் அநாமதேய துண்டுப்பிரசுரமொன்று வெளியிடப்பட்டுள்ளதாக அறியமுடிகின்றது.

இத்துண்டுப் பிரசுரத்திற்கும் தமிழ் மக்கள் பேரவைக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என பேரவை விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

இவ்வாறு வெளியிடப்பட்ட இத் துண்டுப் பிரசுரமானது மக்கள் மத்தியில் சலசலப்பை ஏற்படுத்தி, நாளை 24-ம் திகதி புதன்கிழமை தமிழ் மக்கள் பேரவையின் ஏற்பாட்டில் நடைபெறவிருக்கின்ற மாபெரும் மக்கள் கூட்டத்தைக் 24☛

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# பாதீட்டுக்கு ஆதரவளிப்பது குறித்து தமிழ்த் தலைமைகள் தீர்மானிக்க வேண்டும்

## வியாழேந்திரன் எம்.பி தெரிவிப்பு

(மட்டக்களப்பு)

வடக்கு-கிழக்கு மக்களின் பிரச்சினைகளை தீர்க்காவிட்டால் வரவு-செலவு திட்டத்திற்கு ஆதரவளிக்க முடியாது என தமிழ் தலைமைகள் தீர்மானிக்க வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.வியாழேந்திரன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாநகரசபைக்குட்பட்ட திராய்மடு ஸ்ரீகிருஸ்ணா விளையாட்டு மைதானத்தின் புனரமைப்பு பணிகள் நேற்று திங்கட்கிழமை மாலை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் குறிப்பிடுகையில்.

"மலையக மக்களின் சம்பளப் பிரச்சினையை தீர்க்காவிட்டால் வரவு-செலவு திட்டத்திற்கு ஆதரவாக வாக்களிக்க மாட்டோம் என தமிழ் முற்போக்குக் கூட்டணி தீர்மானம் எடுத்துள்ளது.

இதைப்போன்று வடகிழக்கு மக்களின் பிரச்சினைகளை தீர்க்காவிட்டால் ஆதரவளிக்க முடியாது என தமிழ் தலைமைகள் தீர்மானிக்க வேண்டும்.

கடந்த மூன்று வரவு-செலவு திட்டத்திற்கு தமிழ்த் தேசிய கூட்டமைப்பு ஆதரவாக கையை உயர்த்தியுள்ளது.

இந்த அரசாங்கம் தமிழ் மக்களுக்கு நிரந்தரத் தீர்வினைத் தரவேண்டும் என்பதற்காகவே அந்த ஆதரவினை வழங்கியது.

இந்த ஆண்டு முடிவதற்குள் காணிகள் விடுவிப்புத் தொடர்பாக ஜனாதிபதி வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டும். அதற்கான அழுத்தங்களை தமிழ்த் தேசிய கூட்டமைப்பு தொடர்ந்து வழங்கிவரும் என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை.

அதேபோன்று தமிழ் அரசியல் கைதிகள் விடயத்திலும் இந்த அரசாங்கம் உடனடியாக தீர்வொன்றினை வழங்கவேண்டும். வரவு செலவுத் திட்டத்திற்கு வாக்களிக்கும்போது ஒரு நிரந்தரத் தீர்வினை நோக்கியதாக தமது ஆதரவினை வழங்கவேண்டும் என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ம)


### வேலையாள் தேவை

புதுக்குடியிருப்பு பகுதியில் இயங்கி வரும் கணினி நிறுவனம் ஒன்றிற்கு கணினி அறிவு நிரம்பிய சரளமாக ஆங்கில அறிவுடைய ஆண்/பெண் தேவை. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்புக்கு:
00447469209270, 0776344960

(4116)


## மரண அறிவித்தல்

### செல்வி புஷ்பம் விசுவலிங்கம்

(முன்னாள் மேற்பார்வையாளர், அச்சுவேலி கிராம அபிவிருத்தி பயிற்சி நிலையம், கெருடாவில் அம்பிகை முன்பள்ளி முன்னாள் ஆசிரியர்)



ஊரிக்காட்டை பிறப்பிடமாகவும், கெருடாவிலை வசிப்பிடமாகவும் கொண்ட புஷ்பம் விசுவலிங்கம் அவர்கள் நேற்று (22.10.2018) திங்கட்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற விசுவலிங்கம்-நாகமுத்து தம்பதியினரின் கனிஷ்ட புதல்வியும், காலஞ்சென்றவர்களான விஜயரட்ணம் இராசமணி, கனகரட்ணம் தம்பி ஆகியோரின் சகோதரியும், தேவசிரோன்மணி முத்துராசாவின் சிறியதாயாரும், மலேசியாவை சேர்ந்த தர்மரட்ணம், ஜெயரட்ணம், தம்பிரட்ணம் தவரட்ணம், விமலாதேவி, விஜயாதேவி, லண்டனை சேர்ந்த கௌசலாதேவி, அவுஸ்திரேலியாவை சேர்ந்த கமலாதேவி ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நேற்று (22.10.2018) திங்கட்கிழமை பிற்பகல் 5 மணியளவில் காட்டுப்புலம் மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

காளி கோவிலடி,
கெருடாவில்,
தொண்டைமானாறு.

தகவல்:
திருமதி தே.முத்துராசா
0212055711

(சி-4222)

## மூன்றாம் ஆண்டு நினைவு தினம்

### அமரர் கதிர்காமு ஆனந்தராசா (மேத்திரியார்)

(திதி:பூர்வபக்க சதுர்த்தசி)



அவையத்துள் எம்மை
முந்தியிருக்க வைத்த
அப்பாவே-ஆலவிருட்சமாய்
அருகிருந்து அறிவுரைகள் பலகூறி
எம் வாழ்வின் உயர்வுக்காய்
எந்நாளும் உழைத்தவரே
ஊர் போற்றிய உத்தமரே
பார் போற்றிய பண்பாளரே
நீவிர் எமைப் பிரிந்து
ஆண்டுகள் மூன்று ஆனபோதும்
என்றும் எம் மனங்களில்
வாழ்ந்திருப்பீர்....

தோற்றம் 12.07.1942 | மறைவு 26.10.2015

(சி-4221)

"ஆனந்தமலர்" அல்வாய்.
23.10.2018

என்றென்றும் உங்கள்
நினைவுகளுடனேயே வாழும் குடும்பத்தினர்

## அறிவித்தல்

### பூநகரி பல நோக்கு கூட்டுறவுச் சங்கம் வாக்காளர் இடாப்பு காட்சிப்படுத்தல்

30.09.2018 உடன் முடிவுறுத்தப்பட்ட வாக்களிக்கத் தகுதியுடைய வாக்காளர் இடாப்பின் பிரதி 22.10.2018 தொடக்கம் 06.11.2018ஆம் திகதி வரை கிளை நிலையங்களிலும், தலைமை அலுவலகங்களிலும், இயங்காத நிலையிலுள்ள கிளைகளின் வாக்காளர் பட்டியல்கள் குறித்த கிராம சேவையாளர் அலுவலகத்திலும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

இதில் ஆட்சேபனைகள், திருத்தங்கள் இருப்பின் 06.11. 2018ஆம் திகதிக்கு முன்னர் சங்கச் செயலாளருக்கு எழுத்து மூலம் அறியத்தருமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

சி.தாரணி
செயலாளர்

(சி-4218)

2018.10.14ஆம் திகதிய மோட்டார் சைக்கிள் விற்பனை என்ற வலம்புரி பத்திரிகை விளம்பரம்

### சிறுமாற்றம்

முல்லை மாவட்ட சிக்கனக்கடனுதவுக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம், முகவரி:-வித்தியாபுரம், ஒட்டுசுட்டான் என்ற முகவரியுடன் மேற்கொள்ளப்பட்ட மூடிய கூறு விலையில் நான்கு மோட்டார் சைக்கிள் மூடிய கூறுவிலையில் ஏல விற்பனை 2018.10.19 என்றிருந்த காலவகாசம் 2018.10.24-2018.11.07ஆம் திகதிவரை அலுவலகத்தில் பார்வையிடலாமென்றும் 2018.11.09ஆம் திகதி 10.00 மணிக்கு கூறுவிலை உடைத்து மோட்டார் சைக்கிள் ஏல விற்பனை செய்யப்படும் என திருத்தி வாசிக்கவும்.

தகவல்:
தலைவர், சிகசூ சமாசம்,
முல்லை மாவட்டம்.

(சி-4219)


வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532


## முதலாமாண்டு நினைவஞ்சலி

### திருமதி கடோற்கஜன் ராஜினிதேவி



இவ்வுலகப் பெண்ணாய்:02.11.1972
மறு உலகக் கண்ணாய்:03.11.2017

ஆண்டொன்றைக் கடத்திய
அகத்து மனப் புலம்பல்

ஆண்டொன்று கடந்ததம்மா உன்
அரிய முகம் காணாமல்
நீண்டு நெட்டுயிர்க்கும் நேரமதில்
நிதம் நிதம் உன் நிழல் படம் பார்த்து
ஏங்குகின்றோம்.
மாண்ட உன் மாளிகையின் மணிக்கதவாம்
தான் திறக்கும் உன் மலர்க்கரத்தை
எண்ணி எண்ணி புலம்புகின்றோம்
எங்குடும்ப வாரிசாய் எண்ணிவரும்
வருடத்துள் இங்கு வந்து உதித்திடம்மா

அன்புக் கணவன், பெற்றவயிறும்,
உற்றார், உறவினர்கள், நண்பர்கள்.
பிள்ளையார் கோவில் வீதி, தும்பளை, பருத்தித்துறை

(சி-4220)

# போர்க்குற்றவாளிகள் இனிமேலும் ஐ.நாவின் கௌரவமான பதவிகளை வகிக்க முடியாது!



## இலங்கைக்கு யஸ்மின் சூகா எச்சரிக்கை

**(ஜெனிவா)**

**போர்க்குற்றங்களில் ஈடுபட்டவர்கள் இனிமேல் ஐ.நாவின் கௌரவமான பதவிகளை வகிக்க முடியாது என்ற வலுவான செய்தியை இலங்கை இராணுவ அதிகாரியான லெப்.கேணல் அமுனுபுரவை மாலியிலிருந்து திருப்பி அனுப்ப ஐ.நா. எடுத்துள்ள முடிவு தெரிவிக்கிறது என்பது குறித்து எந்தவித சந்தேகமும் இல்லை என அனைத்துலக மனித உரிமை செயற்பாட்டாளரான யஸ்மின் சூகா தெரிவித்துள்ளார்.**

அனைத்துலக உண்மை மற்றும் நீதி திட்டத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளரான யஸ்மின் சூகா இது தொடர்பாக அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

"ஐ.நா அமைதிப்படை தொடர்பான திணைக்களத்திற்கு இலங்கை இராணுவ அதிகாரி அமுனுபுர தொடர்பாக நாங்கள் சமர்ப்பித்த ஆவணங்கள், அவருக்கு எதிராக ஐ.நா. நடவடிக்கை எடுப்பதற்கு காரணமாக அமைந்துள்ளமை குறித்து நாங்கள் மகிழ்ச்சியடைந்துள்ளோம்.

2009 ஆம் ஆண்டு இறுதிப் போரில் எத்தனை தமிழர்கள் கொல்லப்பட்டனர் என்பது குறித்து இன்னமும் தெரியாத நிலை காணப்படுகின்றது. இதுவரை எவரும் இதற்காக பொறுப்புக்கூறச் செய்யப்படவில்லை.

ஐ.நாவின் இந்த சிறிய நடவடிக்கை போரில் பாதிக்கப்பட்டவர்களுக்கு என்றோ ஒருநாள் தமக்கு நீதி கிடைக்கும் என்ற சிறிய நம்பிக்கையை ஏற்படுத்தும்.



போர்க்குற்றங்களில் ஈடுபட்டவர்கள் இனிமேலும் ஐ.நாவின் கௌரவமான பதவிகளை வகிக்க முடியாது என்ற வலுவான செய்தியை இந்த நடவடிக்கை தெரிவிக்கிறது என்பது குறித்து எந்தவித சந்தேகமும் இல்லை.

போர்க்குற்றவாளிகள் எதிர்காலத்தில் ஐ.நாவின் கடுமையான கண்காணிப்பிலிருந்து தப்ப முடியாது என்ற செய்தியையும், இந்த நடவடிக்கை எடுத்துக் கூறியுள்ளது. 2009 இல் இடம்பெற்ற வைகளில் இருந்து தான் விடுவிக்கப்பட்டுள்ளதாக நாடகமாடுவதற்காக, ஐ.நா அமைதிப்படை நடவடிக் கைகளை இலங்கை பயன் படுத்துவதற்கு அனுமதிக் கக்கூடாது.

மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் ஐ.நா. மனித உரிமை பேரவையில் தீர்மானம் ஒன்றுக்கு இலங்கை இணை அனுசரணை வழங்கியதுடன் கலப்பு நீதிமன்றமொன்றை உருவாக்குவதாகவும், பாதுகாப்பு அதிகாரிகள் மற்றும் ஏனைய அதிகாரிகளை போர்க்குற்றங்களுக்காக விசாரணை செய்வதாகவும் வாக்குறுதி வழங்கியது. எனினும், இலங்கை அரசாங்கம் தனது வாக்குறுதி களை இன்னமும் நிறைவேற்றவில்லை.

2009 இல் லெப். கேணல் அமுனுபுரவின் கட்டளை அதிகாரியாக பணியாற்றிய மேஜர் ஜெனரல் சவீந்திர டி சில்வா தற்போது இலங்கை இராணுவத்தின் மனித உரிமை விவகாரங்களுக்குப் பொறுப்பாக செயற்படுவதும் ஏற்றுக் கொள்ள முடியாத விடயம் .

இவரே இலங்கைப் படையினர் வெளிநாடுகளில் மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டால் அது குறித்து விசாரணை செய்கின்றார்." என்றும் யஸ்மின் சூகா தெரிவித்துள்ளார். (இ-7)

# "அரசாங்கம் சர்வதேச நீதிமன்றில் அமுனுபுரவை நிறுத்தப் போகிறது"

## ஜி.எல்.பீரிஸ் தெரிவிப்பு



(கொழும்பு)

லெப்.கோணல் அமுனுபுரவை சர்வதேச நீதிமன்றில் நிறுத்துவதற்கான வழிவகைகளை அரசாங்கம் ஏற்படுத்திக் கொடுத்துவிட்டதாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தெரிவித்துள்ளது. மாலியிலுள்ள ஐ.நா. அமைதிப்படையில் பணியாற்றி வரும், லெப்டினன் கேர்ணல் கலன அமுனுபுர மீதான குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் எந்தவிதமான விசாரணைகளுமின்றி அவரை நாட்டுக்கு திருப்பியனுப்பும் ஐ.நாவின் கோரிக்கையை இலங்கை அரசாங்கம் ஏற்றுக்கொண்டதன் மூலம் அவரை சர்வதேச நீதிமன்றில் நிறுத்துவதற்கான வழிவகைகளை அரசாங்கம் மேற்கொண்டுள்ளதாக அக்கட்சியின் தலைவர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார். பத்தரமுல்லை - நெளும் மாவத்தையில் அமைந்துள்ள அக்கட்சியின் தலைமையகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இதன்போது மேலும் தெரிவித்த அவர், "அரசாங்கத்தின் இந்த முடிவு பாரதூரமானது. தமிழீழ விடுதலை புலிகளுடனான இறுதி யுத்தத்தின்போது கேர்ணல் அமுனுபுர இராணுவத்தின் 58 ஆவது படையணியை வழிநடத்தியிருந்தார்.

இந்தப் படையணியின் மீது, வைத்தியசாலைகள் மீது குண்டுத் தாக்குதல் நடத்தியதாகவும், சரணடைந்த விடுதலை புலிகளின் உறுப்பினர்களை சித்திரவதை செய்து படுகொலை செய்ததாகவும் சர்வதேச உண்மைகள் மற்றும் நீதிக்கான திட்டத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் யாஸ்மீன் சூகாவின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், ஐ.நா. சபை இந்த அறிக்கையை சுட்டிக்காட்டியே கேர்ணல் அமுனுபுரவை திருப்பியழைக்க அரசாங்கத்திடம் கோரியுள்ளது. இது இலங்கை இராணுவத்துக்கு ஏற்பட்ட பாரிய அழுத்தம்" எனவும் அவர் இதன்போது தெரிவித்தார். (இ-7)

# இலங்கைத் தமிழர்கள் 30 பேர் நாடு திரும்பினர்

யுத்தம் காரணமாக இந்தியாவில் அகதிகளாக தஞ்சமடைந்திருந்த இலங்கை தமிழர்கள் 30 பேர் நாடு திரும்பியுள்ளனர்.

குறித்த இலங்கை தமிழர்கள் 30 பேரும் நேற்று திங்கட்கிழமை காலை கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளனர்.

வவுனியா, மன்னார், யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 15 குடும்பங்களைச் சேர்ந்த 30 பேரே வருகை தந்துள்ளனர்.

நாட்டில் இடம்பெற்ற யுத்தம் காரணமாக வெளிநாடுகளுக்கு அகதிகளாக சென்று நாடு திரும்புகின்ற அனைத்து மக்களுக்கும் வேண்டிய அடிப்படை வசதிகள் செய்துகொடுக்கப்படுமென இலங்கை அரசாங்கம் உறுதியளித்துள்ளது.

இந்நிலையில் வெளிநாடுகளில் அகதிகளாக இருந்து நாடு திரும்புபவர்களின் எண்ணிக்கையும் அண் மைகாலமாக அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

### நாட்டில் குழப்பத்தை தோற்றுவிக்கும் நோக்கில்

# ஐக்கிய தேசியக் கட்சியால் உருவாக்கப்பட்டதே 'றோ' புரளி

## எஸ்.பி.திஸாநாயக்க குற்றச்சாட்டு



(கொழும்பு)

அண்மையில் வெளியான "றோ" உளவுப்பிரிவு தொடர்பான செய்திகள் ஐக்கிய தேசியக் கட்சியால் உருவாக்கப்பட்டவை என முன்னாள் அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

கண்டியில் நேற்றுத் திங்கட்கிழமை இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், "ஜனாதிபதி மற்றும் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் ஆகியோர் கொலைச் சதி தொடர்பில் இந்திய உளவுப்பிரிவான "றோ" தொடர்பிலும் பல செய்திகள் வெளிவந்திருந்தன.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இந்திய உளவுப்பிரிவான "றோ" குறித்து கருத்து வெளியிட்டிருந்ததுடன், அவ்விடயம் தொடர்பில் ஜனாதிபதி மறுப்பும் தெரிவித்திருந்தார்.

ஆனால் ஜனாதிபதி கொலைச்சதி தொடர்பில் இந்திய உளவுப்பிரிவான றோவினை இணைத்து ஐக்கிய தேசிய கட்சியினர் செய்திகளைக் கூறிவந்துள்ளனர்.

அத்துடன், இந்தியாவிற்கும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிற்கும் இடையில் பிரிவினை ஏற்படுத்தி நாட்டில் குழப்பத்தினைத் தோற்றுவிக்க ஐக்கிய தேசிய கட்சி திட்டமிட்டு வருகின்றது என எஸ்.பி. திஸாநாயக்க எம்.பி.மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான அரச அலுவலர் உயிரிழப்பு!

### மாத்தறையில் நேற்றுக்காலை சம்பவம்

மாத்தறை, ஊருபொக்க பிரதேசத்தில் நேற்றுக் காலை இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் அரச அலுவலர் ஒருவர் பரிதாபமாக பலியாகியுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் காரியாலயம் தெரிவித்துள்ளது.

பஸ்கொட பிரதேச செயலாளர் காரியாலயத்தில் கடமையாற்றும் 44 வயதுடைய ஈ.எச்.சமிந்த தயாரத்ன என்பவரே இவ்வாறு துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி மரணித்துள்ளார்.

இவர் நேற்றுக்காலை 9.25 மணியளவில் அகுரஸ்ஸ தோட்டம் வலஸ்முல்ல பகுதியிலுள்ள தனது வீட்டிலிருந்து அலுவலகம் நோக்கி மோட்டார் சைக்கிளில் பயணமாகியுள்ளார். இவ்வாறு சென்றவர் மீது ஊருபொக்க பொலிஸ் பிரிவுக்குட்பட்ட உலங்கந்த தம்பஹல வீதியில் வைத்து பிறிதொரு மோட்டார் சைக்கிளில் வந்தவர்களால் துப்பாக்கிச் சூடு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதில் காயமடைந்தவரை பிரதேசவாசிகள் ஹீகொட ஆதார வைத்தியசாலையில் அனுமதித்த நிலையில் அவர் சிகிச்சை பலனின்றி மரணித்துள்ளார்.

இதனையடுத்து அவரது சடலம் பிரேத பரிசோதனைகளுக்காக வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

மேலும் மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாதவர்கள் இவ்வாறு துப்பாக்கிச் சூடு மேற்கொண்டு விட்டு தப்பிச் சென்றுள்ள நிலையில் எவரும் கைது செய்யப்படவில்லை என்பதால் துப்பாக்கிச் சூட்டுக்கான காரணமும் இதுவரையில் கண்டறியப்படவில்லை. எனினும் குறித்த சம்பவம் தொடர்பான விசாரணைகளை ஊருபொக்க பொலிஸார் ஆரம்பித்துள்ளனர். (இ-7)

# ஹெரத் ஓய்வு

இங்கிலாந்துக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியுடன், இலங்கையின் ரங்கன ஹெரத் சர்வதேச கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெறுகிறார்.

இலங்கை சுழற்பந்துவீச்சாளர் ரங்கன ஹெரத் (வயது 40). கடந்த 1999ல் காலியில் நடந்த அவுஸ்திரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் அறிமுகமான இவர், இதுவரை 92 டெஸ்ட் (430 விக்கெட்), 71 ஒருநாள் (74), 17 சர்வதேச 'ரி20' (18) போட்டிகளில் பங்கேற்றுள்ளார்.

இவர், எதிர்வரும் நவ. 6ல் காலியில் நடைபெறும் இங்கிலாந்துடனான முதல் டெஸ்ட் போட்டியுடன் சர்வதேச கிரிக்கெட்டில் இருந்து விடைபெறுகிறார்.

இதுகுறித்து இலங்கை கிரிக்கெட் சபை சார்பில் வெளியிட்ட செய்தியில் "ஹெரத்தின் ஓய்வு முடிவை ஏற்றுக் கொள்கிறோம். இருப்பினும் இது, இலங்கை கிரிக்கெட்டுக்கு மிகப் பெரிய இழப்பு. இலங்கை அணிக்காக இவரது பங்களிப்பு மகத்தானது," என தெரிவிக்கப்பட்டிருந்தது.



ரங்கன ஹெரத்

# முத்திரை பதிக்கும் மூவர்

## இந்திய அணியின் வெற்றி ரகசியம்

ரோகித் சர்மா, ஷிகர் தவான், அணித் தலைவர் ஹோலி என 'ரொப் 3' துடுப்பாட்ட வீரர்கள் வியக்கத்தக்க ஆட்டத்தை வெளிப்படுத்தி வருகின்றனர். இது, இந்திய அணியின் வெற்றிக்கு பெரிதும் கைகொடுக்கிறது.

இந்தியா சென்றுள்ள மே.தீவுகள் அணி, அங்கு 5 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் பங்கேற்கிறது.

முதல் போட்டியில் 323 ஓட்டங்கள் என்ற இலக்கை விரட்டிய இந்திய அணி கிட்டத்தட்ட எட்டு ஓவர்கள் மீதம் இருக்கும்போது, எட்டு விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

36வது சதம் எட்டிய ஹோலி (9,919), சச்சினின் 10,000 ஓட்டங்கள் சாதனையை அதிவேகமாக நெருங்கி வருகிறார்.

ரோகித் சர்மா தன் பங்கிற்கு 6 ஆவது முறையாக 150 ஓட்டங் களுக்கும் மேல் எடுத்த முதல் இந்திய வீரர் (சச்சின் 5) ஆனார். தற்போதைய நிலையில் ஒரு நாள் போட்டியில் இருவரும் அஞ்சத்தக்க வீரர்களாக உள்ளனர்.

தவிர இந்திய அணியின் சமீபத்திய வெற்றிகளில் ஷிகர் தவானும் முக்கிய பங்கு வகித்துள்ளார்.

### 18 முறை

இந்த மூவரும் இணைந்து ஒருநாள் அரங்கில் தங்களது 'இணைப்பாட்டத்தில்' 18 முறை 150 ஓட்டங்களுக்கும் மேல் எடுத்துள்ளனர். அவுஸ்திரேலியாவின் 'ரொப் 3' துடுப்பாட்ட வீரர்களாக வலம் வந்த முன்னாள் வீரர்கள் அணித் தலைவர் பொன்ரிங், ஹைடன், கில்கிறிஸ்ட் கூட்டணி கூட 7 முறைதான் இதுபோல ஓட்டங்கள் சேர்த்தனர்.

### எளிதாகும் இலக்கு

இவர்களது சிறப்பான ஆட்டம் காரணமாக இந்திய அணிக்கு எவ்வித இலக்கும் எளிதாகிறது. கடந்த 2015 உலக கிண்ண (அரையிறுதி), 2017 சம்பியன்ஸ் டிராபி (இறுதி) என இரண்டு முக்கிய தொடர்களிலும் இந்த மூவர் கூட்டணியின் ஓட்டக் குவிப்பு இந்திய அணியின் முன்னேற்றத்திற்கு கைகொடுத்தது.

இந்த 'ரொப் 3' வீரர்கள் விரைவில் வீழ்ந்து விடும் பட்சத்தில் இந்திய அணி தடுமாறுகிறது. இந்த குறையை சரி செய்வது அவசியம். பின் வரிசை வீரர்களும் பொறுப்பாக ஆடினால், அசைக்க முடியாத சக்தியாக இந்திய அணி உருவெடுக்கும்.



ஹோலி

தவான்

ரோகித்

# ஆஸி வெற்றி

ஐக்கிய அரபு எமிரேட்ஸ் அணிக்கு எதிரான 'ரி20' போட்டியில் ஷோர்ட் அரைச்சதம் கடந்து கைகொடுக்க, அவுஸ்திரேலிய அணி 7 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது.

ஐக்கிய அரபு எமிரேட்ஷ் (யு.ஏ.இ.), அவுஸ்திரேலியா அணிகள் மோதிய ஒரேயொரு 'ரி20' போட்டி அபு தாபியில் நடந்தது.

நாணயச்சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய யு.ஏ.இ., அணிக்கு ஆஷ்பக் அகமுட் (0), அணித் தலைவர் ரோகன் முஸ்தபா (0) ஏமாற்றினர். சிராக் சூரி (13) நிலைக்கவில்லை. ஷாய்மன் அன்வர் (41), ரமீஸ் ஷஜாத் (22), மொஹமட் நவீத் (22*) ஓரளவு கைகொடுக்க யு.ஏ.இ., அணி 20 ஓவர்களில் 6 விக்கெட்டுக்களை இழந்து 117 ஓட்டங்கள் எடுத்தது.

சுலப இலக்கை விரட்டிய அவுஸ்திரேலிய அணிக்கு அணித் தலைவர் ஆரோன் பின்ச் (1) ஏமாற்றினார். கிறிஸ் லின் (20), மக்ஸ்வெல் (18) பெரிய அளவில் சோபிக்கவில்லை. அபாரமாக ஆடிய ஷோர்ட் அரைச்சதம் கடந்து வெற்றிக்கு உதவினார்.

அவுஸ்திரேலிய அணி 16.1 ஓவர்களில் 3 விக்கெட்டுக்களை இழந்து 119 ஓட்டங்கள் எடுத்து வெற்றி பெற்றது. ஷோர்ட் (68), மெக்டெர்மட் (10) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.



# அரசியல் களத்தில் தோனி, கம்பீர்

## பா.ஜ.,வில் சேரும் வாய்ப்பு

இந்திய பாராளுமன்றத் தேர்தலில் பா.ஜ., சார்பில் தோனி, கம்பிர் போட்டியிடுவர் எனத் தெரிகிறது.

இந்திய அணி முன்னாள் கேப்டன் தோனி (வயது - 37). இவர், 'ரி20' (2007), ஒரு நாள் (2011) என இந்தியாவுக்கு இரண்டு உலக கிண்ணம் வென்று கொடுத்தார். தற்போது வீரராக அணியில் தொடர்கிறார். வரும் பாராளுமன்றத் தேர்தலில்(2019) இவரை ஜார்க்கண்டில் இருந்து போட்டியிட வைக்க முயற்சிகள் நடக்கின்றன.

இதுகுறித்து 'தி சண்டே கார்டியன்' என்ற பத்திரிகையில் வெளியான செய்தியில்,'

தோனி தற்போது ஐ.பி.எல்., தொடரில் சென்னை அணியின் தலைவராக உள்ளார்.

இவருக்கு தென் இந்தியாவில் செல்வாக்கு உள்ளது. தோனி, கம்பிர் இருவரும் தங்களது மாநிலம் மட்டுமன்றி நாடு முழுவதும் நன்மதிப்பை பெற்றுள்ளனர். இவர்கள் விரைவில் பா.ஜ.,வில் சேருவர் எனத் தெரிகிறது,' என, கூறப்பட்டுள்ளது.

டில்லி பாராளுமன்ற உறுப்பினராக தற்போது மீனாட்சி லேக்கி உள்ளார். இவரது செயற்பாடு சரியில்லை என்பதால் மீண்டும் இவருக்கு சீட் கொடுக்க பா.ஜ., விரும்பவில்லையாம். இவருக்குப் பதில் கம்பிர் போட்டியிட அதிக வாய்ப்புள்ளதாக கூறப்படுகிறது.

# வங்கம் வாகை



சதமடித்து அசத்திய பங்களாதேஷின் இம்ருல் கெய்ஸ்

இம்ருல் கெய்ஸ் சதம் விளாசி அசத்த, சிம்பாப்வே அணியுடனான முதலாவது ஒருநாள் போட்டியில் 28 ஓட்டங்களால் பங்களாதேஷ் அணி வெற்றி பெற்றது.

பங்களாதேசுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள சிம்பாப்வே அணி, அங்கு 3 ஒருநாள் போட்டிகள், 2 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடுகிறது.

இரு அணிகளுக்கும் இடையிலான முதலாவது ஒரு நாள் கிரிக்கெட் போட்டி நேற்று முன்தினம் டாக்காவில் நடைபெற்றது.

நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற பங்களாதேஷ் அணி துடுப்பாட்டத்தை தேர்வு செய்தது. அந்த அணியின் தொடக்க ஆட்டக்காரரான இம்ருல் கெய்ஸ் சிறப்பாக ஆடி சதம் (144 ஓட்.,) அடித்தார். மொகமட் சைபுதின் (50) அரைச்சதமடித்தார். மொகமட் மிதுன் 37 ஓட்டங்கள் எடுத்தார்.

பங்களாதேஷ் அணி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்களில் 8 விக்கெட்டுக்களை இழந்து 271 ஓட்டங்களை எடுத்தது.

பந்துவீச்சில் சிம்பாப்வே அணி சார்பில் கைல் ஜார்விஸ் 4, சடாரா 3 விக்கெட்டுக்களை கைப்பற்றினர்.

பின், களமிறங்கிய சிம்பாப்வே அணிக்கு சேன் வில்லியம்ஸ் அரைச்சதமடித்தார். செபாஸ் சுவாயோ 35, பின்வரிசை வீரர் கைல் ஜார்விஸ் 37 ஓட்டங்கள் எடுத்தார். மற்றைய வீரர் கள் பிரகாசிக்கவில்லை.

இறுதியில், சிம்பாப்வே அணி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்களில் 9 விக்கெட்டுக்களை இழந்து 243 ஓட்டங்கள் மட்டுமே எடுத்து, 28 ஓட்டங்களால் தோல்வி அடைந்தது.

பந்துவீச்சில் பங்களாதேஷ் அணி சார்பில் மெஹிடி ஹசன் 3, நஸ்புல் இஸ்லாம் 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினர். ஆட்ட நாயகனாக சதமடித்து அசத்திய இம்ருல் கெய்ஸ் தெரிவானார். இரு அணிகளுக்கு இடையிலான 2ஆவது போட்டி நாளை நடைபெறுகிறது.



கோண்டாவில் தென்மேற்கு J/116 முதியோர் சங்க வருடாந்த ஒன்றுகூடலும் முதியோர் கௌரவிப்பும்தரம்5புலமைப்பரிசில்பரீட்சையில்சித்தியடைந்தமாணவர்கள்கௌரவிப்பும் 07.10.2018 அன்று வேதபாராயண சனசமூக நிலையத்தில் விமரிசையாக கொண்டாடப்பட்டது.

இவ்விழாவுக்கு பிரதம விருந்தினராக கந்தையா தேவராஜா (தலைவர் சுற்றுலா பணியகம் வடக்கு மாகாணம், முன்னாள் பீடாதிபதி வணிகத்துறை முகாமைத்துவ கற்கைகள் பீடம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்) அவர்கள் கலந்து சிறப்பித்தார்.

# ரவி கருணாநாயக்கவின் வழக்கு பிற்போடப்பட்டது

(கொழும்பு)

முன்னாள் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்கவிற்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்டிருந்த வழக்கு கொழும்பு நீதவான் நீதிமன்றத்தினால் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

குறித்த வழக்கு நேற்று திங்கட்கிழமை கொழும்பு பிரதான நீதவான் ரங்க திஸாநாயக்க முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்பட இருந்த நிலையில், அவர் நீதிமன்றிற்குச் சமுகமளித்திருக்கவில்லை.

இதனால் குறித்த வழக்கை எதிர்வரும் நவம்பர் மாதம் 5 ஆம் திகதி விசாரணைக்கு எடுக்குமாறு பதில் நீதவான் பிரியந்த லியனகே உத்தரவிட்டுள்ளார்.

பிணைமுறி ஆணைக் குழுவின் முன்னிலையில் முன்னாள் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க பொய்ச் சாட்சி கூறியதாக இரகசிய பொலிஸாரால், கொழும்பு நீதவான் நீதிமன்றத்தில் குறித்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# அறநெறிப் பாடசாலை 3 ஆவது ஆண்டு விழா

நீர்வேலி ஸ்ரீ செல்லக்கதிர்காம சுவாமி அறநெறிப் பாடசாலையின் 3 ஆவது ஆண்டு விழாவும் பரிசில் நாளும் நாளை 24 ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அறநெறிப் பாடசாலை முன்றலில் அறநெறிப் பாடசாலை அதிபர் க.ஸ்ரீகானந்தன் தலைமையில் நடைபெறும்.

இதில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா, சிறப்பு விருந்தினர்களாக வடக்கு மாகாண சமூக சேவை திணைக்கள உத்தியோகத்தர் திருமதி வனஜா செல்வரட்ணம், கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை பிரதி அதிபர் ச.லலீசன், கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை சிரேஷ்ட விரிவுரையாளர் பொ.சற்குணநாதன் ஆகியோர் கலந்து கொள்வர். (இ)

# எழுச்சியை ஆதரித்து கூட்டம்

யாழ்ப்பாணம் சர்வதேச மார்க்சியக்குழு ஏற்பாட்டில் நாளை 24 ஆம் திகதி புதன்கிழமை மாலை 4 மணியளவில் 361 ஸ்ரான்லி வீதியில் அமைந்துள்ள (D.M.I) தனியார் கல்வி நிறுவனத்தில் மலையக பட்டாளி வர்க்க எழுச்சியை ஆதரித்தும் நிபந்தனையற்ற வர்க்க ஒற்றுமையை வலியுறுத்தியும் சொ.சிவபாலன் தலைமையில் கூட்டம் நடைபெறும். (இ)


**வைத்தியம்**

தலைமுடி உதிர்தல், உடல் பருமன் கூட்டுதல்/ குறைத்தல் (வயிறு/மார்பு/கை) முள்ளந்தண்டு பிரச்சினைகள், ஆண்மை குறைபாடுகள், குழந்தையின்மை போன்ற சகலவித நோய்களுக்கும் பக்க விளைவின்றி சிகிச்சை வழங்கப்படும். தொடர்பு:-Shan's Health Care, 255,K.K.S.Rd,Kokuvil. T.P:077 035 7307 (6073)


## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.
## திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம்

### அறிவித்தல்

எதிர்வரும் 25.10.2018 (வியாழக்கிழமை) மற்றும் 26.10.2018 (வெள்ளிக்கிழமை ஆகிய தினங்களில் மதியம் 01.00 மணிக்கு நடைபெற இருந்த ஆங்கில இலக்கியம் பாடத்திற்கான பரீட்சைகள் (EX.ENG2.1, EX.ENG2.2) தவிர்க்க முடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டுள்ளது. இப் பாடங்களுக்கான மறு பரீட்சை நேர அட்டவணை பின்னர் அறிவிக்கப்படும்.

மேலதிக விபரங்களுக்கு 021 222 3612 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளலாம்.

(வி-4217) பதிவாளர் 22.10.2018

## வெற்றிடங்களுக்கு விண்ணப்பம் கோரல்

ஜெயந்தி நகர், கிளிநொச்சியில் அமைந்துள்ள மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லத்தில் கீழ்வரும் பணிநிலை வெற்றிடங்கள் காணப்படுகின்றன. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் கீழ்க்குறிப்பிட்ட பாடங்களில் பட்டத்தினைப் பூர்த்தி செய்த ஆண், பெண் பட்டதாரிகள் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். தங்கள் விண்ணப்பங்கள் 31.10.2018 இற்கு முன்பதாக பதிவுத் தபால் மூலமாக எமக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

**பாடங்கள்**

**நடனம், தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம், சங்கீதம்**

**குறிப்பு:**

- ஆறுமாத காலத்திற்கு தகுதிகாண் காலத்துள் வைக்கப்படுவர். அதன் பின்பே நிரந்தரமாக்கப்படுவர்.
- இல்லத்தில் தங்கியிருந்து கல்வி பயிற்றுவித்தல் வேண்டும்.
- உணவு, தங்குமிடம் என்பன இலவசமாக வழங்கப்படும்.
- சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
- கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் எந்த பதவிக்கான விண்ணப்பம் என்பதைத் தவறாது குறிப்பிட்டு சகல சான்றுப் பத்திரங்களின் நிழற் பிரதிகளுடன் 31.10.2018 இற்கு முன்னர் பதிவுத் தபாலில் எமக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

மேலும் கிராம சேவையாளர், உதவி அரச அதிபர், குணநல நற்சான்றிதழ், வேறு இரு பிரமுகர்களது நற்சான்றிதழின் பிரதி இணைக்க வேண்டும்.

அனுப்பி வைக்க வேண்டிய முகவரி:

பொன்.நித்தியானந்தம், தலைவர், மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லம், ஜெயந்திநகர், கிளிநொச்சி.

தொலைபேசி இல: 021 492 3118

மின்னஞ்சல் முகவரி: rasa46@yahoo.com

# முதலாம் ஆண்டு நினைவு தினம்



## திருமதி சரசரத்தினம் புலேந்திரலிங்கம்

(ஓய்வுபெற்ற கணித ஆசிரியர், உப அதிபர், வல்வை சிவகுரு வித்தியாசாலை)

மண்ணில்:- 02.04.1953
விண்ணில்:- 04.11.2017

ஈராறு மாதங்கள் ஆனதே- நீ இன்றி
நம் வாழ்வில் நிம்மதி போனதே
நாமாக நலம் இல்லை இங்கு-நீ போனதால்
உன் நினைவு தரும் வேதனை நாளானது
காலன் உன்னை கயவன் வடிவில் கவர்ந்த நாள் முதல்
தாயின்றி தங்கிய குழந்தைகளாய்
அழுதழுது அலைகின்றோம்-நீ இல்லாது
நகரும் ஒவ்வொரு நாளும்
நதி நீராய் ஓடும் நினைவுகள்-நம்முன்
வேதனை தருகிறதம்மா
உரமிட்டாய் எம்வாழ்வு சரியாது நிற்பதற்கு -நீ மட்டும்
ஏன் சரிந்தாய் எம்மோடு வாழாமல்!





24.10.2018
புதன்கிழமை
நடைபெறும்
கிரியைகளிலும்
அதனைத் தொடர்ந்து
நடைபெறும்
மதிய போசனத்திலும்
கலந்து சிறப்பிக்குமாறு
அன்புடன்
அழைக்கின்றோம்.

இங்ஙனம்
மகள்: புவிதா
கணவர்: புலேந்திரன்
சகோதரி: கனகி

வெள்ளைச்சி வளவு
கம்பர்மலை, வல்வெட்டித்துறை.

(C-4206)

## இராசி பலன்

**மீனம்:** பக்குவமாக நடந்து பாராட்டுப் பெறுவீர்கள், புதியவர்களின் நட்பு கிடைக்கும், குடும்ப இரகசியங்களை மற்றவர்களிடம் சொல்லாதிருப்பது நல்லது.

**மேடம்:** தொழில் ரீதியாகப் புதிய பொறுப்புக்கள் வந்து சேரலாம், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

**இடபம்:** வளர்ச்சி பாதைக்கு வித்திட்டவர்களை சந்தித்து மகிழ்வீர்கள், பொதுவாழ்வில் பாராட்டும் புகழும் கூடும் நாள், கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம்.

**மிதுனம்:** தொழில் வளர்ச்சி கூடும் நாள், மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், கொள்கைப்பிடிப்போடு செயற்படுவீர்கள், அரசு வழியில் அனுகூலமுண்டு, போசன சுகமுண்டு.

**கும்பம்:** ஆரோக்கியம் சம்பந்தப்பட்ட வகையில் இருந்த கவலைகள் தீரும், கோரிக்கைகள் நிறைவேறும் வாய்ப்புண்டு, நண்பர்களால் வளர்ச்சி கூடும் நாள்.

| | | | |
|---|---|---|---|
| சந் | | | |
| | இராசி பலன்<br>கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>உத்தராடம் | | ராகு |
| செவ், கேது. | | | |
| சனி | குரு, புத | சூரி, சுக் | |

23.10.2018

ஐப்பசி 06, செவ்வாய்க்கிழமை

சூரிய உதயம் காலை 6.02 மணிக்கு

சதுர்த்தசி முன்னிரவு 10.56 மணிவரை

உத்தரட்டாதி முற்பகல் 9.33 மணிவரை

சுபநேரம் 10.32-12.02 மணிவரை

இராகுகாலம் 3.02-4.32 மணிவரை

வளவன்

**கடகம்:** வம்பு வழக்குகளைச் சமாளித்து வளம் காணும் நாள், நல்லவர்களைச் சந்தித்து நலம் காணும் நாள், சுப நிகழ்வுகளில் கலந்து கொண்டு மகிழ்வீர்கள்.

**மகரம்:** கேட்ட இடத்தில் உதவிகள் கிடைக்கும், சகோதர வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கலாம், கனிவாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள், பயணங்களால் பலனுண்டு.

**சிம்மம்:** வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள், உதவி செய்த சிலரே உதாசினப் படுத்துவது கண்டு வருத்த மடையலாம், இனம் புரியாத கவலைகள் தோன்றி மறையும்.

**தனுசு:** பெற்றோர் மீது பிரியம் கூடும், மனதில் இனம் புரியாத சந்தோசம் ஏற்படும் நாள், அரசியல் செல்வாக்கு மேலோங்கும் நாள்.

**விருச்சிகம்:** சொல்லைச் செயலாக்கிக் காட்டுவீர்கள், தொலைபேசி வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம், விருந்து விழாக்களில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு.

**துலாம்:** நன்மைகள் நடைபெறும் நாள், தலைமைப் பதவிகள் உங்களைத் தேடி வரலாம், தொழில் முன்னேற்றத்தில் அதிக அக்கறை காட்டுவீர்கள், போசன சுகமுண்டு.

**கன்னி:** சுற்றத்தார் வரவால் சுகம் கூடும் நாள், குதூகலம் தரும் பயணங்கள் இடம் பெறலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையலாம்.

## கந்தபுராண விரிவுரை

(யாழ்ப்பாணம்)

வாரந்தோறும் செவ்வாய்க்கிழமைகளில் கந்த புராண விரிவுரை மாலை 6.30 மணி முதல் 7.30 மணிவரை சின்மயா மிஷன் ஞானவேல் ஆச்சிரமத்தில் நடைபெறும். இன்று, "உடன் கட்டை ஏறல்"என்ற தலைப்பில் விரிவுரை இடம்பெறும். (இ-7)

## பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை காந்தி சேவா சங்க வருடாந்தப் பொதுக்கூட்டமும், புதிய அங்கத்தவமும் நிகழ்வு நாளை 24 ஆம் திகதி பதன் கிழமை முற்பகல் 10 மணியளவில் யாழ்.கந்தர்மடத்திலுள்ள குமாரசுவாமி வீதி இல. 18 இல் சிவகுருநாத பீடத்தில் (வேதாந்தமடம்) தலைவர் ந.சிவகரன் தலைமையில் நடைபெறும்.(இ)

## சாவகச்சேரி நகரசபையில் தற்போது சுகாதார தொழிலாளர்கள் பற்றாக்குறை

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரசபையில் தற்போது சுகாதாரத் தொழிலாளிகள் பற்றாக்குறை நிலவி வருகிறது. சுகாதாரத் தொழிலாளிகளை அலுவலக உதவியாளர்களாகக் கடமையில் அமர்த்தியமை நிர்வாகம் செய்த தவறு என சாவகச்சேரி நகரசபை உறுப்பினர் நடனதேவன் குற்றஞ்சாட்டியுள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த காலத்தில் சுகாதாரத் தொழிலாளிகளாக உள்வாங்கப்பட்ட பலர் தற்போது நகரசபையில் அலுவலக உதவியாளராக பணியாற்றி வருகின்றனர். இந் நிலையில் தற்போது சுகாதாரத் தொழி




லாளிகளுக்கு பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. சுகாதாரத் தொழிலாளிகளாக உள்ளீர்க்கப்பட்டு அலுவலக உதவியாளர்களாக பணியாற்றுபவர்கள் இனி சுகாதாரத் தொழிலாளிகளாக கடமையாற்ற தயார் நிலையில் இல்லை.

இது நிர்வாகம் செய்த தவறு. சுகாதாரத் தொழிலாளர்களாக உள்ளீர்க்கப்படுபவர்கள் அதற்கான வேலைகளைச் செய்ய தயாராக இருக்க வேண்டும். அவர்களை அலுவலகத்திற்குள் அனுமதிக்கக் கூடாது.

இனிவரும் காலங்களில் சுகாதாரத் தொழிலாளிகளை உள்ளீர்க்கும் போது இதில் கவனம் செலுத்த வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

இதற்கு சாவகச்சேரி நகரசபை செயலாளர் விளக்கமளிக்கையில், இதுவரை காலமும் சுகாதாரத் தொழிலாளிகளாக உள்ளீர்க்கப்பட்டாலும் அவர்கள் அந்தச் சமூகத்தைச் சாராதவர்களாக இருந்தால் அவர்களை நாம் அலுவலகப் பணியாளர்களாகவே கடமையில் அமர்த்தினோம். அத்துடன் குடும்ப வறுமை காரணமாக சுகாதாரத் தொழிலாளியாக வரும் இளம் யுவதிகளையும் அலுவலக கடமைகளிலே அமர்த்தியுள்ளோம். தற்போது நிலவுகின்ற சுகாதாரத் தொழிலாளர் பற்றாக்குறைக்கு உடனடியாக நடவடிக்கை மேற்கொள்வோம் என விளக்கமளித்தார்.(இ-30)

## மாணவர்களின் கல்விக்கு உதவி



(கரணவாய்)

பொற்பதி குடத்தனை மக்கள் நலன்புரிச் சங்கத்தினர் வெளிமாவட்ட பாடசாலைக்கு கல்வி கற்கச் செல்லும் 16 மாணவர்களுக்கு போக்குவரத்து சீசன் டிக்கெட் (ஒருவருட காலம் சென்று வருவதற்கு) வழங்கினர். (இ-60)

### நில அபகரிப்பைத் தடுக்கத் தவறினால்

# செவ்விந்தியர்களுக்கு ஏற்பட்ட கதிதான் ஈழத்தமிழர்களுக்கும் விரைவில் ஏற்படும்

## ஐங்கரநேசன் எச்சரிக்கை



(யாழ்ப்பாணம்)

கொடூரமான முறையில் ஆயுத ரீதியாக முன்னெடுத்த யுத்தத்தை நிறுத்திக் கொண்ட அரசு இப்போது யுத்தத்தை வேறு வடிவங்களில் முன்னெடுக்க ஆரம்பித்திருக்கிறது. சூழல் பாதுகாப்பு என்ற போர்வையில் அரசு சத்தம் இல்லாத யுத்தம் ஒன்றை எம்மீது தொடுத்திருக்கிறது. வனங்களைப் பாதுகாத்தல், வன ஜீவராசிகளைப் பாதுகாத்தல் என்று சொல்ல ஏராளமாக எமது நிலங்களைக் கையகப்படுத்தி வருகிறது. இந்த நில அபகரிப்பைத் தடுக்கத்தவறினால் அமெரிக்காவில் அதன் பூர்வ குடிகளான செவ்விந்தியர்களுக்கு ஏற்பட்ட கதியே விரைவில் எமக்கும் ஏற்படும் என்று தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ.ஐங்கரநேசன் எச்சரித்துள்ளார்.

தமிழ்த் தேசிய பசுமை இயக்கத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி சபாலிங்கம் அரங்கில் நேற்று முன்தினம் சனிக்கிழமை சூழல் அரசியலும் நில அபகரிப்பும் என்ற கருப்பொருளில் உரையரங்கு ஒன்று நடைபெற்றது. இங்கு உரையாற்றிய போதே பொ. ஐங்கரநேசன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில்,

ஆயுதப் போராட்டம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்ட பிறகு அரசு, வனவளத்திணைக்களத்தின் மூலமும் வன ஜீவராசிகள் திணைக்களத்தின் மூலமும் புதிது புதிதாக எமது பூர்வீக நிலங்களைக் கையகப்படுத்தி வருகிறது.

வனவளத் திணைக்களம் 2012 ஆம் ஆண்டுக்குப் பிறகு ஏறத்தாழ இரண்டு இலட்சம் ஹெக்டெயர் நிலப்பரப்பை இதுவரையில் அபகரித்து வைத்திருக்கிறது. இதேபோன்று வன ஜீவராசிகள் திணைக்களம் 2016 ஆம் ஆண்டு யாழ். மாவட்டத்தில் வடமராட்சி கிழக்கில் நாகர்கோவில் இயற்கை ஒதுக்கிடம் என்று 7882 ஹெக்டெயர் நிலத்தையும் மன்னார் மாவட்டத்தில் விடத்தல்தீவு இயற்கை ஒதுக்கிடம் என்று 29,180 ஹெக்டெயர் நிலத்தையும் பறித்து வைத்திருக்கிறது.

கடந்த 2017ஆம் ஆண்டு முல்லைத்தீவு மாவட்டத்தில் நந்திக் கடல் இயற்கை ஒதுக்கிடமாக 4141 ஹெக்டெயர் நிலப்பரப்பும் நாயாறு இயற்கை ஒதுக்கிடமாக 4464 ஹெக்டெயர் நிலப்பரப்பும் சுவீகரிக்கப்பட்டுள்ளது.

அரசின் இந்த நிலக் கையகப்படுத்தல்கள் எல்லாம் சுற்றுச் சூழலைக் காப்பாற்றுகின்ற பசுமை நடவடிக்கைகளாகவே உலகத்தின் கண்களுக்குத் தெரியும்.

ஆனால், இவை பச்சை முகமூடி அணிந்து கொண்டு அரசு தந்திரமாக எம் மீது தொடுத்திருக்கின்ற ஒரு பச்சையுத்தம். இராணுவ ஆக்கிரமிப்பின் கீழ் உள்ள எமது நிலங்களை விடுவிக்கக் கோரி நாங்கள் நடத்துகின்ற போராட்டங்களின் நியாயத்தை உலகம் ஏற்றுக் கொள்ளும்.

உலக நாடுகளின் அழுத்தம் காரணமாக இந்த நிலங்களை அரசாங்கம் விடுவிக்கவும் நேரும். இதனால் தான் எவரும் ஆட்சேபிக்காத இயற்கைப் பாதுகாப்பு என்றபோர்வையில் இப்படி ஒரு நில ஆக்கிரமிப்பை அரசு மேற்கொள்ள ஆரம்பித்திருக்கிறது.

வனவளத் திணைக்களமும் வன ஜீவராசிகள் திணைக்களமும் ஆக்கிரமித்துள்ள நிலங்கள் எமது மக்கள் பூர்வீகமாக வாழ்ந்த நிலங்கள். காலம் காலமாக இவர்கள் பயிர் செய்து வந்த நிலங்கள். இவர்கள் படித்த பாடசாலைகள் உள்ள இடங்கள். ஆனால், இனிமேல் இவர்கள் இங்கு இவை எவற்றையும் செய்ய முடியாது. செவ்விந்தியர்கள் பூர்வீகமாக வாழ்ந்த நிலங்களை அங்கு குடியேறிய ஐரோப்பியர்கள் தேசியப் பூங்காங்களாகப் பிரகடனப் படுத்தியே அவர்களை வலுக்கட்டாயமாக வெளியேற்றி அவர்களின் நிலங்களைப் பிடுங்கினார்கள்.

இன்று அமெரிக்கா செவ்விந்தியர்களின் நாடுஅல்ல. வந்தேறு குடிகளின் நாடு. இதே உத்தியைத்தான் இலங்கை அரசாங்கமும் கையில் எடுத்திருக்கிறது என்றும் தெரிவித்துள்ளார்.

யாழ்.பல்கலைக்கழக அரசறிவியல் துறைத் தலைவர் கலாநிதி கே.ரி. கணேசலிங்கம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் கலந்து கொண்டிருந்தார்.

அரசியல் ஆய்வாளர் நிலாந்தன் தொடக்க உரையாற்றினார். ஜெயராஜ், க.குருநாதன், ஐ.பி.ஏ. ரஞ்சித் குமார் ஆகியோர் கருப் பொருள் உரைகளை நிகழ்த்தியிருந்தனர். (இ-7)

# இராணுவம் தனது உற்பத்திகளை சந்தைப்படுத்தினால் நடவடிக்கை

## பிரதியமைச்சர் அங்கஜன் தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

வலி.வடக்கு உயர் பாதுகாப்பு வலயத்தினுள் இராணுவத்தினர் உற்பத்தி செய்யும் பொருட்கள் சந்தைக்கு விடப்படாது என பாதுகாப்பு படைகளின் யாழ்.மாவட்ட கட்டளைத்தளபதி தர்சன ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளதாக பிரதி அமைச்சர் அங்கஜன் இராமநாதன் தெரிவித்துள்ளார்.

இராணுவத்தினர் அவ்வாறு சந்தைப்படுத்தப்படுவது தொடர்பில் தகவல் கிடைத்தால் அது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அங்கஜன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் உள்ள அவரது இல்லத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். குறித்த சந்திப்பில் விவசாய பிரதி அமைச்சர் என்ற ரீதியில் வலி.வடக்கில் உள்ள விவசாய காணிகள் இராணுவத்தினரால் விடுவிக்கப்படாமல் இருப்பது தொடர்பில் எடுத்துவரும் நடவடிக்கைகள் தொடர்பாகவும், இராணுவத்தினர் உற்பத்தி செய்யும் மரக்கறிகள் சந்தைப்படுத்தப்படுவதால் உள்ளூர் விவசாயிகள் பாதிக்கப்படுவதாகவும் அது தொடர்பில் எடுத்துள்ள நடவடிக்கை என்ன என ஊடக வியலாளர்களால் கேட்கப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

பொதுமக்களின் காணிகள் விடுவிக்கப்பட வேண்டும் என்பது எமது கோரிக்கை. அது படிப்படியாக நடைபெற்று வருகிறது. மக்களுக்கு கொடுக்கப்பட வேண்டிய காணி தான் அவை. விடுவிக்கும் வரை மக்களின் காணிகளை பயன்படுத்தாமல் வைத்திருக்க முடியாது. இராணுவத்தினரால் விடுவிக்கப்படும் போது வளப்படுத்தப்பட்ட காணியாக மக்களுக்கு போய் சேரவுள்ளது. இராணுவத்தினர் உற்பத்தி செய்யும் பொருட்கள் சந்தைக்கு வருவதில்லை என கட்டளைத்தளபதி தெரிவித்திருந்தார்.

அவர்கள் உற்பத்தி செய்பவை தமது தேவைக்கு பயன்படுத்துகி றார்கள் என கூறியிருந்தார்.

இராணுவத்தினர் தமது உற்பத்திகளை சந்தைப் படுத்தினால் அதை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பேன். கட்டளை தளபதிக்கு இது குறித்து அறிவித்துள்ளேன்.

அது தொடர்பில் நடவடிக்கை எடுப்பதாக தெரி வித்துள்ளார் என மேலும் தெரிவித்தார்.

தமிழ் தரப்பில் புதிய கட்சிகள் உருவாக்கம் தொடர்பாக கருத்து கேட்ட போது, புதிய தமிழ்க் கட்சிகள் உருவாகுவது வரவேற்கத்தக்கது. தனியே ஒரு கட்சி இருந்தால் பயன் இல்லை. பல கட்சி இருந்தால், மக்கள் தெரிவு இலகுவானதாக இருக்கும். நல்ல கொள்கையை சொல்லும் கட்சி மற்றும் நேர்மையாக யார் நடக்கிறார்கள் என மக்கள் தெரிவு செய்யமுடியும்.

கடந்த காலத்தில் ஏகோபித்த பிரதிநிதிகள் என சொன்னவர்கள் மக்களை கைவிட்டுள்ளார்கள். எனவே புதிய கட்சிகள் உருவாகுவது மக்களுக்கான வாய்ப்பு என அங்கஜன் மேலும் தெரிவித்தார். (இ-9)

## சமாதான நீதவானாக சத்தியப் பிரமாணம்



தாளையடியைச் சேர்ந்த அல்போன்ஸ் ஜோன்ட்ஸ் இன்பராஜ் அகில இலங்கை சமாதான நீதவானாக நீதியமைச்சினால் நியமிக்கப்பட்டு பருத்தித்துறை மாவட்ட நீதிபதி பெருமாள் சிவகுமார் முன்னிலையில் அண்மையில் சத்தியப்பிரமாணம் செய்துள்ளார்.

இவர் மருதங்கேணி பிரதேச செயலகத்தில் அபிவிருத்தி உத்தியோகத்தராக திட்டமிடல் பகுதியில் கடமையாற்றுவதுடன் , தாளையடி சென்.அன்ரனிஸ் விளையாட்டு கழக உறுப்பினராகவும், சென்.அன்ரனிஸ் பொது நூலகத்தின் தலைவராகவும் பருத்தித்துறை கிழக்கு கிராம அபிவிருத்திச்சங்க நிர்வாக உறுப்பினராக வும் இருந்து வருகிறார்.(இ-60)



கிறீன் பீல்ட் சனசமூக நிலையத்தின் 60 ஆவது ஆண்டு பூர்த்தியை முன்னிட்டு கிறீன்பீல்ட் சனசமூக நிலையத்தில் நடைபெற்ற குருதி கொடை முகாமின் போது...

## நான்கு நூல்களின் அறிமுகம்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேச கலாசாரப் பேரவை நடத்தும் கரவை மு.தயாளனின் நான்கு நூல்களின் அறிமுகவிழா நாளை 24 ஆம் திகதி புதன்கிழமை காலை 9.30 மணியளவில் பிரதேச செயலக மாநாட்டு மணடபத்தில் பிரதேச செயலாளர் மற்றும் கரவெட்டி பிரதேச கலாசாரப் பேரவைத் தலைவர் ஈ.தயாளருபன் தலைமையில் நடைபெறும். (இ)

# இணுவிலில் நேற்று மௌனப் போராட்டம்





(யாழ்ப்பாணம்)

இணுவில் கிராமத்தின் இரு பகுதிகளை கோண்டாவிலுடன் இணைப்பதற்கு மேற்கொள்ளப்பட்டுவரும் முயற்சிகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து அப்பிரதேச மக்களால் நேற்று இணுவிலில் மௌனப் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

இணுவில் கிராமம் பாரம்பரியமும் தொன்மையும் மிக்க கிராமம் ஆகும்.

பரராஜசேகர, செகராஜசேகர மன்னர்கள் ஆட்சி செய்த பிரதேசம் என்று போற்றப்படும் இணுவில் கிராமத்தில் அம்மன்னர்களின் பெயரிலாக ஆலயங்கள் இன்று வரலாற்றுப் புகழுடன் திகழ்கின்றன.

உலகப் புகழ்பெற்ற மஞ்சம் உள்ளிட்ட பல்வேறு பிரசித்தி பெற்ற ஆலயங்களைக் கொண்டு விளங்குகிறது இணுவில் கிராமம்.

இந்நிலையில் அரசியல் சுயநலன்களுக்காக எல்லை மீள் நிர்ணயத்தின் போது இணுவில் கிராமத்தின் இரு பகுதிகளை கோண்டாவிலுடன் இணைத்து தொன்மைமிகு இணுவிலை துண்டு போடும் கைங்கரியம் இணுவிலிலுள்ள சிலரால் திரைமறைவில் செயற்பட்டு வருவதாக இணுவில் கிராம மக்களால் குற்றஞ்சாட்டப்பட்டது.

இது தொடர்பில் ஆராயும் மக்கள் ஒன்றுகூடல் ஒன்று நேற்று முன்தினம் இணுவில் சிவகாமி அம்மன் மண்டபத்தில் நடைபெற்றது.

அங்கு மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்களின் அடிப்படையில் இணுவிலைத் துண்டாடும் குறித்த முயற்சிக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் விதமாகவும் இணுவில் நிலத்தை மீட்பதற்குமான மௌன ஊர்வலம் இணுவில் கந்தசுவாமி கோவில் முன்பாக நேற்றுக் காலை 9 மணிக்கு ஆரம்பமானது.

குறித்த மௌன ஊர்வலம் உடுவில் பிரதேச செயலக அலுவலகத்தை அடைந்து அங்கு உடுவில் பிரதேச செயலரிடம் மனு கையளிக்கப்பட்டதுடன் ஊர்வலம் நிறைவுபெற்றது. (இ-9)

# சிறுபான்மையின மக்களின் அனைத்து உரிமைகளையும் அரசாங்கம் சீரழித்துள்ளது

## கோத்தபாய கூறுகிறார்

(கொழும்பு)

சிறுபான்மையின மக்களுக்கு எதுவுமே செய்யவில்லை என எம்மீது குற்றம் சுமத்தி ஆட்சி அதிகாரத்திற்கு வந்தவர்கள் இன்று அந்த மக்களின் அபிவிருத்தி மற்றும் ஜனநாயக உரிமைகள் என அனைத்தையும் சீரழித்துள்ளதாக குற்றம் சுமத்தியுள்ள முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ, அன்று மகிந்த ராஜபக்ஷவிற்கு எதிராக போலியான பிரசாரங்கள் தமிழ் - முஸ்லிம் மக்கள் மத்தியில் பரப்பப்பட்டதாகவும் தெரிவித்தார்.

கொழும்பு கோட்டையில் இடம்பெற்ற எலிய அமைப்பின் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே கோத்தபாய ராஜபக்ஷ மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். (இ-7)

# பூங்கா புனரமைப்புக்கு நிதியுதவி



(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அமைந்துள்ள சிறுவர் பூங்கா புனரமைப்பிற்கு தொழிலதிபர் மா.பிரபாகர் ஒரு இலட்சம் ரூபாய் வழங்கினார்.

இப்பூங்கா நீண்டகாலமாக புனரமைப்பு இல்லாமல் இருப்பதனை அவதானித்த வடமாகாண சபை உறுப்பினர் சி.அகிலதாஸ் தொழிலதிபர் பிரபாகரிடம் விடுத்த கோரிக்கைக்கு அமைவாக இந்த நிதியுதவி செய்யப்பட்டுள்ளது. (இ-60)

# பொலிஸாரின் அசமந்த போக்கை கண்டித்து தென்கிழக்குப் பல்கலை. சமூகம் கவனயீர்ப்பு


(ஏறாவூர்)



தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் நிர்வாகத்தினால் மேற்கொள்ளப்பட்ட சட்ட நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்துவதில், பொலிஸார் அசமந்தமாக இருந்து வருவதனைக் கண்டித்து பல்கலைக்கழக சமூகத்தினால் நேற்று பாரிய கவனயீர்ப்புப் போராட்டமொன்று நடத்தப்பட்டது. பல்கலைக்கழக நுழைவாயில் முன்பாக இடம்பெற்ற இக்கவனயீர்ப்புப் போராட்டத்தில் பல்கலைக்கழக சமூகத்தைச் சேர்ந்த மாணவர்கள், கல்விசார், கல்வி சாரா ஊழியர்கள், உத்தியோகத்தர்கள், பல்கலைக்கழக நிர்வாக உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

தென்கிழக்குப் பல்கலைக்கழக நிர்வாகக் கட்டடத் தொகுதியை ஆக்கிரமித்து பல்கலைக்கழகத்தின் நிர்வாக செயற்பாட்டிற்கு தடையாக இருந்துவரும் மாணவர்களுக்கெதிராக பல்வேறுபட்ட சட்ட நடவடிக்கைகள் பல்கலைக்கழக நிர்வாகத்தினால் எடுக்கப்பட்ட போதிலும் அதனை நடைமுறைப்படுத்துவதில் பொலிஸார் அசமந்தமாக இருந்து வருவதனைக் கண்டித்தே குறித்த கவனயீர்ப்புப் போராட்டம் நடத்தப்படுவதாக ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டவர்கள் தெரிவித்தனர்.(இ-7)

# சர்வதேச சமுத்திர மாநாடு ஜனாதிபதி தலைமையில் ஆரம்பம்



(கொழும்பு)

காலி உரையாடல் - 2018 சர்வதேச சமுத்திர மாநாடு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தலைமையில் நேற்று முற்பகல் கொழும்பில் ஆரம்பமானது.

பாதுகாப்பு அமைச்சும் இலங்கைக் கடற்படையும் இணைந்து ஒன்பதாவது தடவையாக ஏற்பாடு செய்திருக்கும் இம்மாநாடு "சமுத்திர முகாமைத்துவத்திற்கு ஒன்றிணைந்து பணியாற்றுதல்" என்ற கருப்பொருளின் கீழ் (Synergizing for collaborative maritime management) இன்றும் கொழும்பில் இடம்பெறுகின்றது.

ஐம்பது நாடுகள் மற்றும் 17 சர்வதேச அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் சமுத்திர பாதுகாப்பு தொடர்பான உள்நாட்டு, வெளிநாட்டு நிபுணர்கள் பலரும் இம்மாநாட்டில் கலந்து கொண்டுள்ளனர். வலய மற்றும் வலயம் சாராத கடற்படையினர் பாதுகாப்பு மற்றும் சமுத்திர அமைப்புக்களின் தொழில் வல்லுநர்கள் தமது கருத்துக்களை பரிமாறிக்கொள்வதற்கான தளத்தை இம்மாநாடு வழங்குகின்றது.

சமுத்திர வளங்களை உரிய முறையிலும் அனைத்து நாடுகளினதும் தேவைக்கேற்பவும் பயன்படுத்துதல், வலய பாதுகாப்புக்கான அதன் முக்கியத்துவம், எமது நாட்டின் பொருளாதார இருப்பு, உலக சமாதானத்திற்கான அதன் பயன்பாடு மற்றும் அனைத்து தரப்பினரும் ஒன்றிணைந்து செயற்படுவதற்கான இருதரப்பு, பல்தரப்பு உறவுகளை பலப்படுத்துதல் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் குறித்து இம்மாநாட்டில் கலந்துரையாடப்படவுள்ளது.

தற்போதைய சமுத்திர சவால்களை வெற்றிகொள்வதற்கு வினைத்திறன்மிக்க பொறிமுறையொன்றை தாபிப்பதற்கும் வலய நிபுணர்களின் சமுத்திர பிரச்சினைகள் பலவற்றிற்கு தீர்வுகளை கண்டறிவதற்கும் இம்மாநாட்டின் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது.

அங்குரார்ப்பண நிகழ்வில் கலந்துகொண்ட ஜனாதிபதிக்கு கடற்படை தளபதி வைஸ் அட்மிரல் சிறிமெவன் ரணசிங்கவினால் விசேட நினைவுச் சின்னமொன்று வழங்கி வைக்கப்பட்டது.

அமைச்சர் மகிந்த சமரசிங்க, பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜேவர்த்தன, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கபில வைத்தியரத்ன, பாதுகாப்பு பதவிநிலை பிரதானி உள்ளிட்ட முப்படைகளின் தளபதிகள், பொலிஸ்மா அதிபர் மற்றும் பாதுகாப்புத் துறை முக்கியஸ்தர்கள் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர். (இ-7)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்:A/L/தொழில்நுட்ப உதவியாளர்<br>தொ.இ: B/8917 | பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: பூராடம்<br>கி.பா: 87 சூரிசெவ் 12 இல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்:பொறியியலாளர்/ கனடா<br>தொ.இ: G/8924 |
| பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை<br>தகைமை/தொழில்:BSc/ பொறியியலாளர் சிங்கப்பூர்<br>தொ.இ: B/8918 | பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: உத்தராடம்<br>கி.பா: செவ் 1 இல்<br>தகைமை/தொழில்:A/L/அரச தொழில்<br>எதிர்பார்ப்பு: வெளிநாடுமட்டும்<br>தொ.இ: G/8925 |
| பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: உத்திரட்டாதி<br>கி.பா: 12 செவ் 4 இல்<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்:A/L/ முகாமையாளர்<br>தொ.இ: B/8919 | பிறப்பு: 1993 இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம்<br>கி.பா: 16 செவ் 12 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்:BSc/தனியார் தொழில்<br>தொ.இ: G/8927 |
| பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: பூரம்<br>கி.பா: செவ் 2 இல்<br>உயரம்: 173cm<br>தகைமை/தொழில்:A/L/அரச தொழில்<br>தொ.இ: B/8920 | பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: உத்திரட்டாதி<br>கி.பா: 26 செவ் 4 இல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்:MBA, CIMA/ கணக்காளர்<br>தொ.இ: G/8931 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

## முழங்காவில் ஆதார வைத்தியசாலைக்கு முழங்காவில் சந்தியிலிருந்து பேருந்து சேவையை ஆரம்பிக்குக!



(கண்டாவளை)

கிளிநொச்சி முழங்காவில் ஆதார வைத்தியசாலை வரையானபேருந்துசேவையை மேற்கொள்ள வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கிளிநொச்சி ஜெயபுரம், வன்னேரிக்குளம், பல்லவராயன்கட்டு, கிராஞ்சி, வேரவில் போன்ற பின்தங்கிய கிராமங்களுக்கான மருத்துவ சேவையை வழங்கும் வைத்தியசாலையாக காணப்படும் முழங்காவில் ஆதார வைத்தியசாலை பூநகரி- மன்னார் ஏ-32 வீதியின் முழங்காவில் சந்தியிலிருந்து 600 மீற்றர் தூரத்திற்கு அப்பால் அமைந்துள்ளது.

இந்த நிலையில் மேற்படி கிராமங்களிலிருந்து வைத்திய தேவைகளுக்காக வைத்தியசாலைக்கு செல்லும் நோயாளர்கள், மாற்றுத் திறனாளிகள், முதியவர்கள், கர்ப்பவதிகள் ஏ-32 பிரதான வீதியிலிருந்து கால் நடையாக அதிக பணத்தை செலவு செய்து அல்லது ஆட்டோக்களில்பயணிக்க வேண்டிய நிலை காணப்படுகின்றது.எனவே வன்னேரிக்குளம்,கிராஞ்சி,வலைப்பாடு, வெள்ளாங்குளம் ஆகிய பகுதிகளில் இருந்து செல்லும் உள்ளூர் பேருந்து சேவைகள் முழங்காவில் ஆதார வைத்தியசாலை வரை மேற்கொள்ளப்பட வேண்டும் என்று பொது மக்கள் மற்றும் பல்வேறு தரப்பினரும் கோரிக்கை விடுத்துள்ளனர். (2-315)

## வன்னேரிக்குளம் சுற்றுலா மைய வளாகத்தினுள் சமூக சீர்கேடுகள்



(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தின் வன்னேரிக்குளம் பகுதியில் சுமார் ஆறு மில்லியன் ரூபாய் செலவில் நிர்மாணிக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்ட சுற்றுலா மையம் எதுவித பயன்பாடுகளும் இன்றி தற்போது சமூக சீர்கேடுகள் இடம்பெறும் இடமாக காணப்படுவதாக பிரதேச மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

வன்னேரிக்குளம் பகுதியில் வடக்கு மாகாண முதலமைச்சரின் அமைச்சின் கீழுள்ள மாகாண குறித்தொதுக்கப்பட்ட நிதியின் கீழ் சுமார் ஆறு மில்லியன் ரூபாய் செலவில் கரைச்சி பிரதேச சபையினால் நிர்மாணிக்கப்பட்ட கடந்தாண்டு மே மாதம் 27 ஆம் திகதி குறித்த சுற்றுலா மையம் திறந்து வைக்கப்பட்டது. இவ்வாறு திறந்து வைக்கப்பட்ட சுற்றுலா மையத்தின் கட்டடத்தின் மின் இணைப்புக்கள், கதவுகள் என்பன களவாடப்பட்டுள்ளதுடன்கட்டடங்களும் வெடிப்புக்கள் ஏற்பட்டும் சேதமடைந்தும்காணப்படுகின்றன.

அத்துடன் இப்பகுதியில் இரவு-பகல் வேளைகளில் மது அருந்துதல் மற்றும் சமூகவிரோத செயல்கள் இடம்பெறும் இடமாகக் காணப்படுவதாகவும் தொடர்ந்தும் இந்த சுற்றுலா மையம் இவ்வாறு காணப்படுமாயின் தமது கிராமம் பாதிக்கப்படும் அபாய நிலை காணப்படுவதாகவும் இதனை உரிய அதிகாரிகள், கிராம மட்ட அமைப்புக்கள் ஊடாகவோ அல்லது வேறு அமைப்புக்களின் மூலமோ இயங்க வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (2-315)

## இளைஞன் மீது கத்திக்குத்து

வவுனியா மாவட்டத்தில் ஆச்சிபுரம் பகுதியில் நேற்று முன்தினம் இரவு 9 மணியளவில் இளைஞன் ஒருவர் மீது கத்தி குத்து தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் படுகாயமடைந்த இளைஞன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது,

இரவு ஆச்சிபுரம் பகுதியில் வசித்து வரும் குணலிங்கம் ஜோன்சன் (வயது-28) என்ற இளைஞன் மீது இனந்தெரியாதவர்கள் மேற்கொண்ட கத்தி குத்து தாக்குதலில் காயமடைந்த இளைஞன் வவுனியா பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்துள்ளனர்.

தாக்குதல் நடத்தியவர்கள் தப்பிச் சென்ற நிலையில் அவர்களைக் கைது செய்வதற்கான நடவடிக்கையை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர் (2-250)

## பயிற்சிநெறி பூர்த்தி; சான்றிதழ் வழங்கல்

(குருமன்காடு)

வவுனியா திறந்த பல்கலைக்கழகத்தில் குறுகிய கால பயிற்சிநெறியை பூர்த்தி செய்த 82 பேருக்கு சான்றிதழ்கள் வழங்கி வைக்கப்பட்டன.

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் வவுனியா கிளையினால் நடத்தப்பட்ட ஆங்கிலம், மனிதவளமுகாமைத்துவம் உள்ளிட்ட குறுகிய கால சான்றிதழ் கற்கை நெறிகளைப் பூர்த்தி செய்த 82 மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்வு இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின், வவுனியா கற்கை நிலைய உதவிப் பணிப்பாளர் வ.திவாஸ்கர் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் மீள்குடியேற்றம், புனர்வாழ்வு மற்றும் வடக்கின் அபிவிருத்தி பிரதி அமைச்சர் காதர் மஸ்தான், யாழ்.பல்கலைக்கழகத்தின் வவுனியா வளாக முதல்வர் மங்களேஸ்வரன் உள்ளிட்ட கல்வித்துறை சார்ந்த பலரும்கலந்து கொண்டிருந்தனர். (2-250)

## தமிழீழ விடுதலைப் போராட்ட காலத்தில் இந்த மண்ணில் கலைஞர்கள் உருவாக்கப்பட்டனர்

### சிறிதரன் எம்.பி.பெருமை





(கண்டாவளை)

தமிழீழ விடுதலைப் போராட்டம் நடைபெற்ற காலத்தில் பல்வேறுபட்ட கலைஞர்கள் இந்த மண்ணில் உருவாக்கப்பட்டார்கள் என பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி பவர் மீடியாவின் ஏற்பாட்டில் தாயகக் கலைஞர்களை கௌரவிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் பிற்பகல் 5 மணிக்கு கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச சபை மண்டபத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் இந்த மண்ணில் இருந்த காலப்பகுதியில் பல்வேறுபட்ட கலைஞர்கள் இந்த மண்ணில் உருவாக்கப்பட்டார்கள். கலை என்பது மனிதனது உள்ளத்தில் இருந்து வருகின்ற ஒருவகையான உணர்வுகள்.

நம்பிக்கையும் எண்ணங்களும் ஒவ்வொரு மனிதர்களிடமும் இருந்தால் தான் அவர்களால் சாதிக்க முடியும். ஒரு காலம் எங்கள் கலைகள் பேணப்பட்டன, கௌரவிக்கப்பட்டன, கலைஞர்கள் வளர்க்கப்பட்டனர். ஆனால் இன்று அந்த கலைகள் மறைக்கப்பட்டன.

எங்களுடைய கலைகளை நாங்கள் நேசிக்கின்ற, கௌரவிக்கின்ற நிகழ்வாக இதுபோன்ற நிகழ்வுகள் அமையவேண்டும்.

இந்த மண்ணில் பிறந்து வளர்ந்த டேவிற் யுவராஜன் தென்னிந்திய சினிமாவில் வில்லன் கதாபாத்திரத்தில் தோன்றி தனக்கென தடம்பதித்து சர்வதேச விருதுகளைப்பெற்று பெருமை சேர்த்திருக்கின்றார் என்றார். சிறப்பு விருந்தினராக வடக்கு மாகாண சபை உறுப்பினர் த.குருகுலராஜா, கரைச்சிப் பிரதேச சபை தவிசாளர் அ.வேழமாலிகிதன், கரைச்சிப் பிரதேச சபையின் உறுப்பினர்களான ச.ஜீவராசா, ப.குமாரசிங்கம், கரைச்சிப்பிரதேச சபை செயலாளர் க.கம்சநாதன் உள்ளிட்டோர் கலந்து கொண்டிருந்தனர். இதில் தாயகக் கலைஞர் டேவிற் யுவராஜன் உட்பட பதினேழு கலைஞர்கள் விருதுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர். இந்நிகழ்வில் கலைஞர்கள், படைப்பாளிகள் எனப்பலர் கலந்து கொண்டிருந்தனர்.(2-315)

வன்னி வலம்

## சர்வதேச நல்லொழுக்க தினமும் சர்வதேச சிறுவர் தினமும்





(கண்டாவளை)

கிளிநொச்சி பூநகரி பிரதேச செயலகமும் ரகமா நிறுவனமும் இணைந்து ஏற்பாடு செய்த சர்வதேச சிறுவர் தினம் மற்றும் சர்வதேச நல்லொழுக்க தினம் கிளிநொச்சி முழங்காவில் பகுதியில் வெகு சிறப்பாக நடைபெற்றது.

சர்வதேச சிறுவர்தினத்தையும்சர்வதேச நல்லொழுக்க தினத்தையும் ஒட்டி ஏற்பாடு செய்த நிகழ்வு நேற்று முன்தினம் காலை 9.30 மணிக்கு ஆரம்பமாகி பிற்பகல் 3 மணி வரை நடைபெற்றது.

இதேவேளை காலை 9.30 மணிக்கு கிளிநொச்சி பூநகரி பல்லவராயன் கட்டுப்பகுதியில் சுமார் ஆயிரம் சிறுவர்கள் இணைந்து மூவாயிரம் பனை விதைகளை நாட்டி வைத் தனர்.

தொடர்ந்து முற்பகல் 10 மணிக்கு முழங்காவில் தேசிய பாடசாலையில் நடைபெற்ற நிகழ்வில் சிறுவர்களின் கலை நிகழ்வும் சிறுவர்களின் ஆக்கங்களைத்தாங்கிய மலரும் மொட்டுக்கள் எனும் சஞ்சிகையும் வெளியிட்டு வைக்கப்பட்டது.

இதில் சிறுவர்நன்னடத்தை அதிகாரி மற்றும் பொலிஸ் பொறுப்பதிகாரி,பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் எனப்பலர் கலந்து கொண்டிருந்தனர். (2-315)

### நவம்பர் 2016-ஒக்டோபர் 2018 வரை

## 11 ஆயிரத்து 85 அபாயகரமான வெடிபொருட்கள் அகற்றப்பட்டன

### ஸார்ப் நிறுவனம் தெரிவிப்பு



வடபகுதியில் ஜப்பான் நாட்டு நிதியுதவியுடன் ஈடுபடும் ஸார்ப் மனிதாபிமானக் கண்ணிவெடியகற்றும் அரச சார்பற்ற நிறுவனமானது 2016 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் தொடக்கம் 2018 ஒக்டோபர் மாதம் 15 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்திற்குட்பட்ட அம்பகாமம் மற்றும் தச்சடம்பன் பகுதியிலும், கிளிநொச்சி மாவட்டத்தில் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத்திற்குட்பட்ட முகமாலையிலும் ஆறு இலட்சத்து நாற்பத்தொன்பதாயிரத்து அறுநூற்று பதின்மூன்று சதுர மீற்றர் பரப்பளவில் இருந்து பதினொராயிரத்து எண்பத்து ஆறு அபாயகரமான வெடிபொருட்களை அகற்றியுள்ளதாக ஸார்ப் நிறுவனத்தின் நடவடிக்கை முகாமையாளர் ஓய்வுபெற்ற கப்டன் பிரபாத் நாரம்பனவ தெரிவித்துள்ளார்.

இதேவேளை தொடர்ந்து இந்நிறுவனம் கண்ணிவெடியகற்றும் பணிகளை முகமாலை பகுதியில் துரித கதியில் முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்நிறுவனத்தில் மொத்தம் 118 பணியாளர்கள் கண்ணிவெடியகற்றும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.இதில் 11 பெண் பணியாளர்கள் அடங்குகின்றனர். மேலும்இந்நிறுவனம்நான்கு இலட்சத்து இருபத்து இரண்டாயிரத்து எண்ணூற்று இருபத்து எட்டு நிலப் பரப்பை மக்களின் பயன்பாட்டிற்காக அரசாங்கத்திடம் கையளித்துள்ளது. (2-312-315)


# மன்னார் நகரசபை அமர்வில் சலசலப்பு எட்டு உறுப்பினர்கள் வெளிநடப்பு

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் நடைபெறும் அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாக சபை உறுப்பினர்களிடம் தெரிவிக்கப்படுவதில்லை. திட்டங்கள் தொடர்பான தீர்மானங்கள் தன்னிச்சையாக எடுக்கப்படுவதாகவும் நகர சபையின் பொது நூலகத்திற்கு அருகாமையில் அமையவிருக்கும் அம்மாச்சி உணவகமானது பொருத்தமான இடத்தில் அமையவில்லை.

அவ் உணவகமானது அமையும் பட்சத்தில் பொது மக்கள் பல்வேறு சிரமங்களுக்கு முகம்கொடுக்க வேண்டிய நிலை ஏற்படும். பொருத்தமான இடத்தில் இவ் உணவகத்தை மாற்றி அமைக்க வேண்டும் எனவும் தெரிவித்து 8 உறுப்பினர்கள் சபை அமர்வில் இருந்து வெளிநடப்பு செய்துள்ளனர்.

மன்னார் நகர சபையின் 8 ஆவது அமர்வு நேற்று முற்பகல் 10.30 மணியளவில் நகரசபை மண்டபத்தில் நகரசபை தவிசாளர் அன்ரனி டேவிட்சன் தலைமையில் இடம்பெற்றது. குறித்த அமர்வின்போது பல்வேறு அபிவிருத்தி திட்டங்கள் மற்றும்



மக்கள் பிரச்சினைகள் தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டது.

குறித்த அமர்வின் போது மன்னார் மாவட்டத்தின் பொது நூலகத்திற்கு அருகாமையில் அம்மாச்சி உணவகம் அமைவதற்கான வேலைகள் இடம் பெறுவதாகவும் அவ் வேலைத்திட்டத்திற்கான அனுமதியை யார் வழங்கியது. மக்களுக்கு பல்வேறு இடையூறை ஏற்படுத்தக் கூடிய பிரதான வீதியின் அருகில் நகரசபை உறுப் பினர்களிடம் கலந்தாலேசிக் காது எந்த அடிப்படையில் அனுமதி வழங்கப்பட்டது.

குறிப்பிட்ட கட்டடத்தை கட்டுவதற்காண ஒப்பந்தம் தொடர்பான விடயங்கள் உறுப்பினர்களுக்கு ஏன் அறிவிக்கப்படவில்லை எனவும் நகர சபை உறுப்பினர் ஜோசப் தர்மனால் கேள்வி எழுப்பப்பட்டது.

குறித்த கேள்விக்கு பதில் அளித்த தவிசாளர். குறிப்பிட்ட பிரதான வீதிக்கு அருகாமையில் உள்ள காணி நகர சபைக்கு சொந்தமான காணி இல்லை. அக் கட்டடம் தொடர்பான செயற்பாடுகள் மாவட்ட மற்றும் பிரதேச செயலகத்தின் மூலமே முன்னெடுக்கப்படுகின்றது எனவும் தெரிவித்தார்.

தவிசாளருடைய கூற்றானது ஏற்றுக்கொள்ள முடியாது. உப தவிசாளர் உட்பட பல்வேறு உறுப்பினர்கள் தெரிவித்திருந்தனர்.

குறித்த பணியை நிறுத்தி விட்டு மக்களுக்கு இடையூறை ஏற்படுத்தாத வேறு மத்திய பகுதியில் அமைப்பதற்கான தீர்மானம் ஒன்றை ஏற்படுத்த வேண்டும் என கோரிக்கை முன்வைக்கப் பட்டது. ஆனாலும் குறித்த தீர்மானத்தை ஆளும் கட்சியை சேர்ந்த சில உறுப்பினர்கள் வேறு காணிகள் மன்னார் நகரசபைக்கு அண்மையில் இல்லை. எனவே நிதியானது திரும்பி போய் விடும் என்ற பொருத்தம ற்ற காரணங்களை கூற முடியாது எனவும் தெரிவித்தனர். இதனை அடுத்து சபையில் சலசலப்பு ஏற்பட்டது.

நிதி திரும்பிவிடும் என்பதற்காக மக்களுக்கு பொருந்தாத அபிவிருத்தி திட்டங்களை ஒருபோதும் மக்கள் பிரதிநிதிகளான நாங்கள் ஆதரிக்கப் போவதில்லை. அமர்வில் இருந்து 8 உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்துள்ளனர். (2-285)




## முல்லை மாவட்ட அபிவிருத்திக் குழுக்கூட்டம்





(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டம் நேற்று முற்பகல் 10 மணியளவில் இணைத் தலைவர்கள் தலைமையில் நடைபெற்றது.

இணைத்தலைவர்களான மீள்குடியேற்ற பிரதி அமைச்சர் காதர் மஸ்தான், பாராளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகன் மற்றும் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் ஆகியோரது தலைமையில் நடைபெற்றது.

இந்த கலந்துரையாடலில் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் திருமதி சாந்தி சிறிஸ்கந்தராஜா, வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ஞா.குணசீலன் வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான து.ரவிகரன், ஆ புவனேஸ்வரன், ஐனோபர் பிரதேச சபை தவிசாளர்கள் உள்ளிட்ட பிரதிநிதிகள் மற்றும் திணைக்கள தலைவர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டிருந்தனர்.

இந்த கலந்துரையாடலில் வீட்டுத்திட்டம் மற்றும் காணி அபகரிப்புக்கள் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (2-281)

# விவசாயக் காணியில் கைக்குண்டுகள் இன்று பொலிஸாரால் மீட்கப்படும்



(கிளிநொச்சி )

கிளிநொச்சி அம்பாள் நகர் பகுதியில் தனியார் காணியில் காணப்பட்ட கைக்குண்டுகள் நீதிமன்ற கண்காணிப்பின் கீழ் இன்று மீட்கப்படும் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தனியார் ஒருவருக்கு சொந்தமான குடியிருக்கும் விவசாய காணியில் கைக்குண்டுகள் அடையாளம் காணப்பட்டு அகற்றும் நடவடிக்கைகள் பொலிஸாரால் முன்னெடுக்கப்படவுள்ளன.

விவசாயம் செய்வதற்காக தான் குடியிருக்கும் காணியை தனியார் ஒருவர் சுத்திகரிப்பில் ஈடுபட்டபோது வெடிக்காத நிலையில் கைக்குண்டுகள் காணப்படுவது தொடர்பில் பொலிஸாருக்கு தகவல் வழங்கியுள்ளனர்.

குறித்த சம்பவம் தொடர்பில் விசாரணை மேற்கொண்ட பொலிஸார் கைக்குண்டுகளை அகற்ற நீதிமன்றின் அனுமதியை கோரியிருந்த நிலையில்அனுமதி கிடைத்தது.

இதேவேளை குறித்த பகுதியில் வேறு வெடிபொருட்கள் உள்ளதா என்பது தொடர்பிலும் பொலிஸார் நீதிமன்றின் கண்காணிப்பில் சோதனையிட உள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

குறித்த கைக்குண்டுகள் நேற்றைய தினம் அகற்றப்பட இருந்த போதிலும், நீதிமன்ற கண்காணிப்பின் கீழ் அகற்றப்பட வேண்டும் என்பதால் இன்றைய தினம் கைக்குண்டுகள் அகற்றப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.(2)

# சாரதி பயிற்சி ஆட்டோ -கார் தாண்டிக்குளத்தில் விபத்து




(பனிக்கன்குளம்)

வவுனியா மாவட்டத்தின் தாண்டிக்குளத்தில் சாரதி பயிற்சி வழங்கும் ஆட்டோவும் காரும் மோதி விபத்துக்குள்ளாகியதில் இருவர் படுகாயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இவ்விபத்து பற்றி தெரிய வருவதாவது.

வவுனியா நொச்சிமோட்டையில் இருந்து தாண்டிக்குளம் நோக்கி பயணித்துக் கொண்டிருந்த சாரதி பயிற்சி நிறுவனம் ஒன்றுக்கு சொந்தமான ஆட்டோ தாண்டிக்குளம் பகுதியில் வவுனியா நகரில் இருந்து பயணித்த காரும் மோதி விபத்துக்குள்ளாகியதில் ஆட்டோவில் பயிற்சியில் ஈடுபட்ட பூனாவையை சேர்ந்த பிரேமவங்ச (வயது 40), இரங்க (வயது 24) ஆகிய இருவருமே படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இவ்விபத்து தொடர்பான மேலதிக விசாரணையை வவுனியா பொலிஸார் மேற்கொண்டனர். (2-281)

# முதியோர்களுக்கான மாவட்டமட்ட விளையாட்டுப் போட்டிகள் கிளிநொச்சியில்



(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட சமூக சேவைகள் அலுவலகத்தின் ஏற்பாட்டில் முதியோர்களுக்கான மாவட்டமட்ட விளையாட்டுப் போட்டிகள் நேற்று திங்கட்கிழமை காலை 9 மணியளவில் மாவட்ட கூட்டுறவாளர் மண்டப வளாகத்தில் நடைபெற்றது.

மாவட்ட சமூக சேவைகள் அலுவலர் வே.தபேந்திரன் தலைமையில் நடைபெற்ற இந்த விளையாட்டுப் போட்டிகளில் பிரதேச செயலகப் பிரிவு மட்டத்தில் ஏற்கனவே நடைபெற்ற போட்டிகளில் முதல் 3 இடங்களைப் பெற்றவர்கள் பங்கேற்றிருந்தனர்.



ஆண் முதியோர்கள் வேக நடை,கூடைக்குள் பந்து போடுதல்,சங்கீதக் கதிரை ஆகிய போட்டிகளிலும், பெண் முதியோர்கள் கிடுகு பின்னுதல், கூடைக்குள் பந்துபோடுதல், சங்கீதக் கதிரை ஆகிய போட்டிகளிலும் பங்கேற்றனர்.

இப் போட்டிகளில் முதல் 3 இடங்களைப் பெற்றோர் எதிர்வரும் 26 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாவட்ட கூட்டுறவாளர் மண்டபத்தில் நடைபெற உள்ள மாவட்ட முதியோர் தினவிழாவில் பரிசில்கள் வழங்கி கௌரவிக்கப்பட உள்ளனர்.

அத்துடன் எதிர்வரும் 29.10.2018 திங்கட்கிழமை முல்லைத்தீவு புதுக்குடியிருப்பில் நடைபெற உள்ள மாகாண முதியோர் தின விழாவிலும் பெறுமதி வாய்ந்த பரிசில்கள் வழங்கி கௌரவிக்கப்பட உள்ளனர். (2)

# 43 ஆயிரத்து 766 குடும்பங்கள் முல்லை.மாவட்டத்தில் மீள்குடியேற்றம்

(கண்டாவளை)


முல்லைத்தீவு மாவட்டத்தின் ஆறு பிரதேச செயலர் பிரிவுகளிலும் 43ஆயிரத்து 766குடும்பங்கள் மீள்குடியேறியுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டம்நேற்று காலை 9 மணியளவில் மாவட்ட மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இக் கூட்டத்தில் மீள்குடியேற்றம் தொடர்பில் வெளியிடப்பட்ட புள்ளிவிபரத்தில் கடந்த 2009ஆம் ஆண்டு யுத்தத்தின் பின்னரான மீள்குடியமர்வைத்தொடர்ந்து முல்லைத்தீவு மாவட்டத்தின் துணுக்காய் மாந்தை கிழக்கு, ஒட்டுசுட்டான், கரைதுறைப் பற்று, புதுக்குடியிருப்பு, வெலிஓயா ஆகிய ஆறு பிரதேச செயலர் பிரிவுகளிலும் இதுவரை 43 ஆயிரத்து 766 குடும்பங்களைச் சேர்ந்த ஒரு இலட்சத்து 36ஆயிரத்து 149 பேர் மீள்குடியிருப்பதாக தெரிவிக்கப்பட்டது. (2-315)

# ஐப்பசி மாத இராசி பலன்கள்

## 18.10.2018-16.11.2018



விளம்பிவருடம்ஐப்பசி மாதக்கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் வியாழன் விரய ஸ்தானத்தில் வீற்றிருக்கிறார். அதே நேரத்தில் தன சகாய ஸ்தானாதிபதி சனி, உங்கள்இராசியிலேயே சஞ்சரிக்கிறார். எனவே இரண்டும் சமநிலையில் இருப்பதால் செலவிற்கேற்ற வரவு வந்து கொண்டேயிருக்கும். செயற்பாடுகளில் வெற்றி கிடைக்கும். புதிய திருப்பங்கள் பலவற்றையும் சந்திக்கப் போகிறீர்கள். புகழ்மிக்கவர்கள் உங்களுக்குப் பின்னணியாக இருந்து பல நல்ல வாய்ப்புகளை வரவழைத்துக் கொடுப்பர்.

வியாபார விரோதங்கள் அகலும். வீடு மாற்றங்கள், இடமாற்றங்கள் வந்து சேரும். தொழில்புரிவோர்கள் பங்குதாரர்களில் புதியவர்களை சேர்த்துக்கொள்ள முன்வருவர். சென்ற மாதத்தில் செலவுகள் திணறடித்திருக்கலாம். சிக்கல்களுக்கும், பகைவர்களின் தொல்லைகளுக்கும் ஆளாகி இருக்கலாம். இனி மறைமுக எதிர்ப்புகள் மாறும். மக்கள் செல்வங்களால் ஏற்பட்ட பிரச்சினைகள் அகலும். தனவரவு திருப்திகரமாக இருக்கும். இந்த நேரத்தில் தைரியமும், தன்னம்பிக்கையும் பிறக்கும். இதைச் செய்வோமா, அதைச் செய்வோமா என்று முடிவெடுக்க முடியாமல் திணறுவீர்கள். புதிய நண்பர்களின் அறிமுகம் கிடைக்கும். பொதுநலத்தில் இருப்பவர்களுக்கு பொறுப்புகள் மாற்றப்படலாம்.

இலாப ஸ்தானத்தில் மூன்று கிரகங்களின் சஞ்சாரம் இருக்கிறது. அதுமட்டுமல்லாமல் அது யோகம் தரும் விதத்திலும் சஞ்சரிக்கின்றது. சூரியன் புதனோடு இணைந்திருப்பதால் புத-ஆதித்ய யோகம் ஏற்படுகிறது. புதன் சுக்கிரனோடு இணைந்திருப்பதால் புத-சுக்கிர யோகமும் உருவாகின்றது. மேலும் தொடக்கநாளில் சந்திரன் செவ்வாயோடு இணைந்து சந்திர-மங்கள யோகத்தையும் உருவாக்குகிறார். இத்தனை யோகங்களுக்கு மத்தியில் இம்மாதப் பிறப்பு அமைவதால், அதிகபட்ச அனுகூலம் கிடைக்கும் மாதமாகவே இதைக் கருதலாம்.

என்றாலும் ராகு-கேதுக்களுக்குள் அல்லவா அனைத்து கிரகங்களும் சிக்கியிருக்கின்றன. எனவே சர்ப்பதோஷ ஆதிக்கத்தில் இம்மாத கிரகநிலைகள் இருக்கின்றன. ஒக்டோபர் 27 ஆம் திகதி வரை யோசித்து செயற்பட்டால் தான் யோகங்களும், நன்மைகளும்வந்து சேரும். சர்ப்ப சாந்திப் பரிகாரங்களை முறையாக செய்து கொள்வது நல்லது. அதுமட்டுமல்லாமல் வியாழக்கிழமைதோறும் குருவை வழிபடுவதன் மூலம், அதன் பார்வை பலத்தால் மிகுந்த நற்பலன்களை நீங்கள் பெறமுடியும். திருச்செந்தூர், ஆலங் குடி, பட்டமங்கலம், திட்டை, திருவாலிதாயம் போன்ற சிறப்பு தலங்களுக்கும் சென்று வழிபட்டு வரலாம். உள்ளூரில் உள்ள குரு பகவானையும் வழிபட்டு வரலாம். கந்தசஷ்டியன்று

## புதிய பாதை புலப்படும்!

முருகப்பெருமான் வழிபாட்டையும் முறையாக மேற்கொள்வது நல்லது.

**விருச்சிக புதன் சஞ்சாரம்!**

ஒக்டோபர் 24ஆம் திகதி விருச்சிக இராசிக்குப் புதன் செல்கிறார். உங்கள் இராசிக்கு 7, 10இற்கு அதிபதியான புதன், விரயஸ்தானத்திற்கு வரும் பொழுது களத்திர வழியிலும், தொழில் வழியிலும் சில மாற்றங்களைக் கொடுப்பார். கேந்திராதிபத்திய தோஷம் பெற்ற கிரகம் மறைவிடத்திற்கு வரும்பொழுது யோகத்தை வழங்குவார் என்பது பொது விதி. எனவே கல்யாண வாய்ப்புகள் கைகூடும். கெட்டி மேளம் கொட்டும் வாய்ப்பு ஏற்பட, குருவின்அருட்பார்வையும்புதனின்விருச்சிக சஞ்சாரமும் இணைந்து செயற்படும். மாமன், மைத்துனர் வழியில் ஏற்பட்ட மனக்கசப்பு மாறும். உறவினர்களின் இல்லத்தில் நடைபெறும் சுப நிகழ்ச்சிகளை முன்னின்று நடத்தி




வைப்பீர்கள். பணி நிறுத் தம் செய்யப்பட்டிருந்த உத்தியோகத்தர்களு க்கு மீண்டும் பணியில் சேரும் வாய்ப்பு கிட்டும்.

**கும்பச் செவ்வாய் சஞ்சாரம்!**

ஒக்டோபர் 27ஆம் திகதி உங்கள் இராசிக்கு பஞ்சம விரயாதிபதியாக விளங்கும் செவ்வாய், சகாய ஸ்தானத்திற்குச் செல்கிறார். இது ஒரு அற்புதமானநேரம் பிள்ளைகளின் சுபகாரியங்கள் திருப்திகரமாக நடைபெறும். மேற்படிப்பை முன்னிட்டு வெளிநாடு செல்லத் திட்டம் தீட்டியிருந்தால் அது கைகூடும். பூர்வீகச் சொத்துத் தகராறுகள் அகலும். பஞ்சாயத்துகள் மூலம் பாகப்பிரிவினைகள் சுமுகமாக முடியும். வந்த சொத்துகளை விற்பனை செய்துவிட்டு, அருகில் உள்ள நகரங்களில்புதிய சொத்துகள் வாங்கும் வாய்ப்பு உருவாகும். பயணங்கள் பலன் தருவதாக அமையும். நீண்டதூரப் பயணங்கள் ஒரு சிலருக்கு ஏற்படும். இடமாற்றம்பற்றி பயப்பட வேண்டியதில்லை. நல்ல மாற்றமாகவே அமையும்.

**வக்கிர புதன் சஞ்சாரம்!**

நவம்பர் 13ஆம் திகதி துலாம் இராசியில் புதன் வக்கிரம்பெறுகிறார். அந்த வக்கிர இயக்கம்நன்மை தரும் விதத்திலேயே இருக்கிறது. தொழில் வளர்ச்சி சிறப்பாக இருக்கும். பெண்வழிப் பிரச்சினைகள் அகலும். பூமியோகம் முதல் பொன், பொருள், ஆடை, ஆபரண சேர்க்கை வரை வந்து சேரும். குடும்பப் பெரியவர்கள் உங்கள் குணமறிந்து நடந்து கொள்வார்கள். சண்முகநாதன் வழிபாடு கனிவான வாழ்க்கையை அமைத்துக்கொடுக்கும்.

**பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்!**

இம்மாதம் இராசிநாதன் விரய ஸ்தானத்தில் இருப்பதால் விரயங்களை அதிகம் சந்திக்கக்கூடிய வாய்ப்பு உருவாகும். குடும்பச் சுமை கூடும். எதையும் ஒரு முறைக்குப் பல முறை யோசித்துச் செய்வது நல்லது. குடும்பப் பெரியவர்களையும் கலந்து ஆலோசித்துச் செயற்படுங்கள். கணவன்-மனைவிக்குள் ஒற்றுமை ஏற்பட, விட்டுக்கொடுத்துச் செல்வது நல்லது.

இதுவரை பாசம் காட்டாத பெற்றோர், இப்பொழுதுஉங்கள் மீது பாசத்தைக் கொட்டுவார்கள். உடன் பிறப்புகளின் ஆதரவு ஓரளவே கிடைக்கும். பிள்ளைகளின் எதிர்கால நலன்கருதி ஒருபெரும் தொகையைச் செலவிடும் சூழ்நிலை உண்டு.

அதுமட்டுமல்லாமல் வீட்டிற்குத் தேவையான விலையுயர்ந்த பொருட்கள், மின் சாதனப் பொருட்களை வாங்குவதன் மூலம் வீண் விரயங்களை சுப விரயங்களாக மாற்றிக் கொள்ள இயலும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு கேட்ட இடத்திற்கு மாற்றம் கிடைக்கும். சண்முகநாதர் வழிபாடு நன்மையைத் தரும்.

**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**



விளம்பி வருடம் ஐப்பசி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் சனி விரய ஸ்தானத்தில் வீற்றிருந்து ஏழரைச் சனியில் விரயச் சனியாக சஞ்சரிக்கிறார். அதே நேரத்தில் விரயாதிபதி குரு பகவான் லாபஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். எனவே வரவும், செலவும் உங்களுக்குச் சமமாகவே இருக்கும். வருமானம் வந்து கொண்டே இருக்கும். ஆயினும் ஜென் மத்தில் கேது இருப்பதால் மன குழப்பங்களும், அடிக்கடி சங்கடமான சூழ்நிலைகளும் உருவாகும்.

ஜென்மத்தில் கேதுவும், 7இல் ராகுவும் இருப்பதால் கால சர்ப்ப தோஷத்தின் பின்னணியில் இருக்கிறீர்கள். எனவே சர்ப்ப சாந்திப் பரிகாரங்களை முறையாகச் செய்வது நல்லது. ராகு பகவானுக்கு உளுந்தும், கேது பகவானுக்கு கொள்ளும் தானியமாக கருதப்படுவதால், அதை வாங்கித் தானமாக கொடுப்பது நல்லது.

இம்மாதம் அனைத்து கிரகங்களையும் பார்க்கும் பொழுது தொழில் முன்னேற்றம் சிறப் பாகவே உள்ளது. உழைப்பிற்கேற்ற பலன் கிடைக்கும். உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள்.

செயல் ஸ்தானத்தில் சூரியன், புதன், சுக்கிரன் ஆகிய மூன்று கிரகங்களும் இருக்கின்றன. அதில் சொந்த வீட்டில் சஞ்சரிக்கும் சுக்கிரனோடு நீச்சம் பெற்ற சூரியன் இணைந்திருப்பதால் நீச்ச பங்க ராஜயோகம் உருவாகின்றது. மேலும் புத-ஆதித்ய யோகமும், புத-சுக்கிர யோகமும் உள்ளது. மாதத் தொடக்கநாளில் சந்திரனோடு செவ்வாய் இணைந்து சந்திர- மங்கள யோகத்தை உருவாக்குகிறார். இத்தனை விதமான யோகங்களுக்கு மத்தியில் மாதப்பிறப்பு நடப்பதால் மங்கல ஓசை மனையில் கேட்பதற்கான வாய்ப்பு உருவாகும். தங்கு தடைகள் அகலும் விதத்தில் உறவினர்களின் ஒத்துழைப்பும் கிடைக்கும். இதுவரை புத்திரப் பேறுக்காகக் காத்திருப்பவர்களுக்கு இப்பொழுது செய்யும் பரிகாரங்கள் பலன் தரும். குருவின் பார்வை 3இல் பதிவதால் வழக்குகள் சாதகமாக அமையும். உடன்பிறப்புகள் உங்கள் குணமறிந்து நடந்து கொள்வர்.

சூரபத்மனை வென்ற சுப்பிரமணியருக்குரிய கந்தசஷ்டி வருவதால் அன்றைய தினம் முருகப்பெருமான் வழிபாட்டையும் மேற்கொள்வது நல்லது.

**விருச்சிக புதன் சஞ்சாரம்!**

ஒக்டோபர் 24ஆம் திகதி விருச்சிக இராசிக்குப் புதன் செல்கிறார். உங்கள் இராசிக்கு 6, 9 இற்கு அதிபதியானவர் புதன். அவர்

## முட்டுக்கட்டைகள் அகலும்!

லாபஸ்தானத்தில் வரும் பொழுது தைரியமும், தன்னம்பிக்கையும் கூடும். தடைக்கற்கள் படிக்கற்களாக மாறும். உத்தியோகத்தில் இதுவரை கிடைக்காத உயர்வு கிடைக்கும். வராத சம்பளப் பாக்கிகள் வந்துசேரும். பெற்றோர் வழியில் வந்த பிரச்சினைகள் அகலும்.

அவர்கள் மூலம் சொத்துகள் கிடைப்பதற்கான அறிகுறிகள் தென்படும். நம்பிக்கைக்குரியவர்களை கலந்தாலோசித்து நல்ல முடிவெடுப்பீர்கள். புதிய ஆடை, ஆபரணங்களும் வந்து சேரும் நேரமிது.

**கும்பச் செவ்வாய் சஞ்சாரம்!**

உங்கள் இராசிக்கு 4, 11 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் செவ்வாய். அவர் தன ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் பொழுது மிகுந்த நற்பலன்கள் உங்களுக்கு கிடைக்கும். வீடு கட்டும் யோகம் அல்லது வாங்கும் யோகம் உண்டு.

சொந்தங்களாலும் நன்மை, சொத்து




களாலும் நன்மை கிடைக்கும் நேரமிது. உத்தியோகத்தில் உங்கள் கை ஓங்கும். புகழ், கீர்த்தி, கௌரவம் அதிகரிக்கும். மக்கள் செல்வாக்கு உயரும். நினைத்ததை நினைத்த நேரத்தில் செய்து முடிப்பீர்கள். அந்நிய தேசத்தில் உள்ளவர்களால் ஆதாயம் உண்டு. எண்ணிய காரியங்களை எளிதில் முடித்து வைப்பீர்கள். சிலர் உங்களை நம்பி ஒப்படைத்த பொறுப்புகளை முடித்து ஆதாயமும் பெறுவீர்கள்.

**வக்கிர புதன் சஞ்சாரம்!**

நவம்பர் 13ஆம் திகதி புதன் துலாம் இராசியில் வக்கிரம் பெறுகிறார். இதன் விளைவாக நன்மையும், தீமையும் கலந்தே நடைபெறும். குறிப்பாக 6, 9 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் புதன். எனவே உத்தியோகத்தில் திடீர் மாற்றங்கள் உருவாகலாம். உடன்பிறப்புகள் உங்களை விட்டு விலகலாம். தந்தை வழி உறவில் விரிசல் ஏற்படும். சொத்துத் தகராறுகளால் சொந்தங்களின் பகை அதிகரிக்கும். வழக்குகளில் திசை திருப்பங்கள் ஏற்படும். பணியாளர்களின் ஒத்துழைப்பு குறையும். பாடுபட்டதற்கு பலன் கிடைக்காது.

இம்மாதம் சனிக்கிழமை அனுமனை வழிபடுவது நல்லது. ஆதியந்தப் பிரபு வழிபாடும், கந்தப் பெருமான் வழிபாடும் நன்மைகளை வரவழைக்கும்.

**பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்!**

இம்மாதம் இலாப ஸ்தானத்தில் குரு இருப்பதால் யோகம் தான். பணவரவு திருப்திகரமாகவே இருக்கும். பக்கபலமாக இருப்பவர்கள் உங்கள் சிக்கல்கள் தீர வழிவகுத்துக் கொடுப்பர்.

கணவன்-மனைவிக்குள் ஒற்றுமை பலப்படும் என்றாலும் ராகு-கேதுக்களின் ஆதிக்கம் இருப்பதால் மனக்குழப்பம் வந்து அலைமோதும். கணவன்-மனைவி இருவரும் விட்டுக் கொடுத்து நடந்தால், பிரச்சினை ஏற்படாது.

குழந்தைகளை உங்கள் மேற்பார்வையில் வைத்துக்கொள்வது நல்லது. தாய் வழி ஆதரவு திருப்தி தரும். சகோதர வழியில் பிரச்சினைகள் தலைதூக்கலாம். உடன்பிறப்புகளின் பகை வளராமல் பார்த்துக் கொள்வது நல்லது.

புதனின் வக்கிர காலத்தில் நிறைய மாற்றங்கள் ஏற்படும். சக பணியாளர்களின் ஆதரவு குறையும். குல தெய்வ வழிபாடும், முருகப்பெருமான் வழிபாடும் தடைகளை அகற்றும்.


(தொடரும்)

# தென்னங்கன்றுகளை பொது நிகழ்வுகளில் வழங்குவதைத் தவிர்த்துக்கொள்ளுங்கள்

தென்னையானது நீண்டு வளரக்கூடிய ஓர் பல்லாண்டுத் தாவரமாகும். இது சராசரியாக 60 வருடங்கள் வரை உயிர் வாழக்கூடியது. தென்னையினது 80 வீதம் ஆன அகத்துறிஞ்சலிற்குப் பொறுப்பான வேர்த்தொகுதியானது 6 அடி ஆரையுள்ள சுற்றுவட்டத்திற்குளும் 3-4 அடி ஆழத்திற்குமே பரந்திருக்கும். இதனால் தான் தென்னை ஆராய்ச்சி நிலையமானது மணல் பாங்கான இடம் எனில் 3 அடி நீளமும் 3 அடி அகலமும் 3 அடி ஆழமும் உள்ள குழியையும் கிரவல் அல்லது களிமண் உள்ள இடம் எனில் 4 அடி நீளமும் 4 அடி அகலமும் 4 அடி ஆழமும் உள்ள குழியையும் அமைத்தல் சாலச் சிறந்தது என்று குறிப்பிட்டுள்ளது.

ஆரோக்கியமான தென்னையானது பென்சில் வடிவில் சீரான உருவமுடையதாகவும் 30-35 ஓலைகளையும் தன்னகத்தே கொண்டதாக இருக்கும். இவ் ஓலைகள் சராசரியாக 12 அடி நீளமுள்ளதாக இருக்கும். தென்னை ஆராய்ச்சி நிலையமானது இரு தென்னைகளுக்கான இடைவெளியினை பல்வேறு ஆராய்ச்சிகளின் முடிவின் அடிப்படையில் 26 அடியாக இருக்க வேண்டும் என்று தீர்மானித்துள்ளது.

ஒரு தென்னையின் ஓலையும் மறு தென்னையின் ஓலையும் ஒன்றுடனொன்று முட்டக்கூடாது அவ்வாறு ஓலைகள் ஒன்றுடனொன்று முட்டப்படுவதனால் அவ் ஓலைகள் சூரிய ஒளியினைப் பெறுவதில் கடும் போட்டி நிலவும். அத்துடன் ஓலைகள் மேல் நோக்கி வளரவும் ஆரம்பிக்கும் "தக்கண பிழைக்கும் அல்லன மடியும்" என்ற டார்வினுடைய கூர்ப்புக் கொள்கைக்கு அமைவாக இவ்வாறான 10 வருடாங்கள் நிறைந்த தென்னைகளை உற்று நோக்கினால் அவற்றில் குறிப்பிட்டளவு எண்ணிக்கையான தென்னைகள் வட்டுச் சிறுத்தும் அவற்றின் உற்பத்தி குறைவு பட்டும் காணப்படும். இது காலப்போக்கில் அத்தென்னைகள் சோடைத்தன்மை ஏற்பட



வழிசமைக்கும். அத்துடன் 26 அடி இடைவெளியினைக் கருத்திலெடுக்காமல் நடுகை செய்யும் தென்னைகளின் அடிப்பகுதிக்குச் சூரிய ஒளி கிடைப்பது தவிர்க்கப்படுவதனால் அங்கு தென்னையைத் தாக்கும் பீடைகள் குடிகொள்ளும் வாய்ப்புகள் அதிகரிக்கும். நெருக்கமாக நடுகை செய்யப்படும் தென்னைகளினால் ஒரு தென்னையிலிருந்து மற்றைய தென்னைக்கு அணில் மற்றும் வட்டெலிகள் தாவுவது இலகுவாக இருப்பதனால் அவற்றினால் இளம் தேங்காய்களுக்கு ஏற்படும் சேதம் கூடுதலாக இருக்கும் "ஆயிரம் அணில் தாவாத் தென்னைகள் ஒரு அரசனிற்குச் சமம்" என்று பொதுவாகக் கூறுவார்கள். இதிலிருந்து தென்னைக்கான இடைவெளியின் முக்கியத்துவம் பற்றி நன்கு தெரிந்திருக்கும்.

தென்னைப் பயிர்ச்செய்கை சபையினரால் ஒவ்வொரு பிரதேசத்திற்கும் தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள். அவர்களினால் காணிகள் பரிசீலிக்கப்பட்ட பின்னரேயே (?) மானியத்திற்குரிய தென்னங்கன்றுகள் ஏக்கருக்கு 64 படி விநியோகிக்கப்படுகின்றன. அவ்வாறிருக்கையில் அமைப்புக்கள், நிறுவனாங்கள், திணைக்களங்கள் விசேட வைபவங்களிலோ அல்லது விழாக்களிலோ, நினைவுகூரல்களிலோ, நடமாடும் சேவைகளிலோ இலவசமாகத் தென்னங்கன்றுகளை மக்களுக்கு விநியோகிக்கின்றன. மக்களும் முண்டியடித்துக்கொண்டு இவற்றினைப்பெற்று தென்னைகளுக்கிடையிலான இடைவெளிகளையும் பசளை வட்டத்தினது போக்கினையும் கருத்திலெடுக்காமல் நடுகை செய்கிறார்கள்.

வெளிநாடுகளுக்குச்சென்று வரும் உறவுகள் தாம் அங்கு போய் வந்ததற்கு சான்றாக வெளிநாட்டுச் சொக்கலேட்டுக்களை தமது உறவினர், நண்பர்களுக்கு விநியோகிக்கின்றனர். அவர்களும் "இனிப்புப்பண்டாங்கள் உடல் நலத்திற்கு கேடு விளைவிக்கும்" என்று சொல்லிச்சொல்லியே சாப்பிடுகிறார்கள். குறிப்பிட்ட காலத்துக்குப் பின்னர் தான் அதன் தார்ப்பரியத்தினை உணர்கிறார்கள். இதேபோல இடைவெளியினைக் கருத்திலெடுக்காமல் இலவசமாகக் கிடைக்கின்றது என்று வாங்கி வந்து நடுகை செய்யும் தென்னைகளில் சோடைத்தன்மையடைகின்ற வாய்ப்பு அதிகமாக உள்ளது.

தென்னம்பிள்ளைகளை பொது நிகழ்வுகளில் வழங்குபவர்களின் நோக்கம், சிந்தனை, எண்ணப்பாடு சிறந்ததாகும். வரவேற்கத்தக்கதாகும். அவர்கள் அவற்றினை வழங்கும் போது அதைப் பெறுபவர்களின் வாழ்க்கைத்தரத்தினை மேம்படுத்துவதில் தாம் கணிசமான பங்கினைச் செய்கின்றோம் என உளப்பூரிப்படைகிறார்கள். ஆனால் அதனைப்பெறுபவர்களோ இலவசமாக கிடைத்துவிட்டது. இதனை அநியாயமாக்கக் கூடாது என்ற எண்ணப்பாட்டுடன் ஏற்கனவே நடப்பட்ட தென்னைகளுக்கிடையில் நடுகை செய்கிறார்கள். இனிப்புப்பண்டங்களை மிகையாக உண்பவர்கள் நீண்ட காலத்தின் பின்னர் அனுபவிக்கும் வேதனையைப் போல நெருக்கமாக நட்டவர்களின் தென்னைகள் ஏறத்தாழ 10 ஆண்டுகளின் பின்னர் சோடையடையும் தன்மைகள் அவதானிக்கப்படுகின்றன. கடந்த 10 வருடங்களாக அவர்கள் செலவழித்த பணம், நேரம் போன்றன வீண்விரயமாக்கப்படுகின்றன. இவர்கள் தங்களுக்கு இலவசமாக தென்னங்கன்றுகளை வழங்கியவர்களைத் தரங்குறைந்த தென்னைகளைத் தந்துள்ளார்கள் என்று குறைபட்டுக் கொள்வார்கள். வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்காக தென்னங்கன்றுகளை வழங்கியவர்களுக்கோ பிள்ளையார் பிடிக்க குரங்காகிய கதைதான் ஏற்படும்.

அரச நிறுவனாங்கள், ஏனைய நிறுவனங்கள் தென்னங்கன்றுகளை இலவசமாக மக்களுக்கு விநியோகிக்கும் போது தென்னைப்பயிர்ச்செய்கை சபையுடன் கலந்தாலோசித்து பயனாளிகளைத் தெரிதல் சிறந்தது. அதனைத்தவிர்த்து இரண்டு தென்னைகள் தானே வழங்குகின்றோம். அதனால் ஒன்றும் நிகழாது என நினைத்து வழங்கும் போது அது கடைசியில் "வந்த வெள்ளம் நின்ற வெள்ளத்தை கொண்டு போன" கதையாய்ப் போய்விடக் கூடாதல்லவா? சரி, நிறுவனாங்கள் ஓரளவு கட்டுப்பாட்டுடன் நடந்தாலும் பிறந்தநாள் கொண்டாட்டங்கள், திருமண வைபவங்கள், புதுமனைப்புகுவிழா நிகழ்வுகள், அந்தியேட்டிகள் போன்ற நிகழ்வுகளில் தென்னங்கன்றுகளை வழங்குபவர்களை என்ன செய்வது? நீங்கள் என்ன பொருளை யாவது இலவசமாக வழங்கும் போது அதனை முண்டியடித்து வாங்கும் மக்கள் அதிலிருந்து பயன் கிடைக்காது போகுமிடத்து இறுதியில் வழங்குபவர் மீது தான் பழி சுமத்துவார்கள். ஆகையால் தென்னங்கன்றுகள் வழங்குவதனைத்தவிர்த்து குறுகிய காலத்தில் தொடர்ச்சியாக பயன் தரக்கூடிய மர இனாங்களை அல்லது நிழல் மரங்களை வழங்குவது சிறப்பானதாக அமையும்.

**ஈஸ்வரன் சற்குணன்,**
**பண்ணைத்திட்டமிடல் அதிகாரி,**
**தென்னைப்பயிர்ச்செய்கை சபை, யாழ்ப்பாணம்.**

## லத்து ரொஷான் கைது 3000 ரவைகள் மீட்பு!

(கொழும்பு)

சியம்பலாண்டுவ பொலிஸ்க்கு கிடைத்த இரகசிய தகவல் ஒன்றின் பேரில் வான் ஒன்றை சோதனையிட்ட போது அதிலிருந்து ரி-56 ரக துப்பாக்கிக்குப் பயன்படுத்தும் 3000 ரவைகள் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவன் குணசேகர தெரிவித்துள்ளார்.

லத்து ரொஷான் எனும் பெயருடைய ஒருவர் இதன்போது கைது செய்யப்பட்டுள்ளார். இவர் காலி சிறையிலுள்ள ஜயலத் சுத்தா எனும் குற்றவாளியின் உறவினர் என தெரியவந்துள்ளது.

ஜயலத் சுத்தா என்பவர் பல்வேறு குற்றச் செயல்களில் குற்றவாளியாகவுள்ளார். இவர் கொஸ்கொட சுஜி என்பவரின் திட்டமிட்ட குற்றச் செயல்களில் ஈடுபடும் சகா எனக் கூறப்படுகின்றது.

லத்து ரொஷான் பயணித்த வானில் இருந்த மேலும் நான்கு பேர் பொலிஸ் காவலில் வைத்து விசாரணை செய்யப்பட்டு வருவதாகவும் பொலிஸ் ஊடகப் பிரிவு மேலும் தெரிவித்துள்ளது. (இ-7)

## அரசு வருவாயை ஈட்டவே எரிபொருள் சூத்திரம்

## கூட்டு எதிரணி எதிர்ப்பு

(கொழும்பு)

எரிபொருள் விலையினை மீள் பரிசீலனை செய்யும் முகமாக நிதிய மைச்சர் மங்கள சமரவீரவினால் வெளியிடப்பட்ட விலைச்சூத்திரத்தின் ஊடாக பொதுமக்களுக்கு எவ்விதமான நன்மையும் கிடைக்கப் பெறாது. அரசாங்கம் வருவாயினை மேலும் ஈட்டிக் கொள்வதற்காகவே குறித்த விலைச் சூத்திரம் தயாரிக்கப்பட்டுள்ளது எனத் தெரிவித்த கூட்டு எதிர்க்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் செஹான் சேமசிங்ஹ, முறையற்ற விதத்தில் அரசாங்கம் அறவிடும் வரிகளுக்கு மேலும் வலுச்சேர்ப்பதாகவே குறித்த விலைச் சூத்திரம் காணபபடுகின்றது எனவும் தெரிவித்தார். (இ-7)

## ஆட்டோ விபத்து மூவர் படுகாயம்

(லிந்துலை)

லிந்துலை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பகுதியில் ஆட்டோ ஒன்று வீதியை விட்டு விலகி சுமார் 100 அடி பள்ளத்தில் பாய்ந்து விபத்துக்குள்ளானதில் மூவர் படுகாயமடைந்துள்ளனர்.

நாகசேனை நகரத்திலிருந்து தலவாக்கலை பகுதியை நோக்கி சென்றுகொண்டிருந்த குறித்த ஆட்டோ நேற்று முன்தினம் இரவு தலவாக்கலை டயகம பிரதான வீதியில் நாகசேனை நகரப் பகுதியில் வீதியை விட்டு விலகி இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளது.

ஆட்டோவில் சாரதி உட்பட மூவர் பயணித்துள்ளதாகவும், மூவரும் பலத்த காயங்களுக்குள்ளாகி லிந்துலை பிரதேச வைததிய சாலையில் சேர்க்கப் பட்டு சிகிச்சை பெற்று வருவதாகவும், அதில் ஒருவர் மேலதிக சிகிச்சைக்காக நுவரெலியா மாவட்ட வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (இ-7)

## அடுத்த ஜனாதிபதி வேட்பாளரும் மைத்திரியே - அமரதுங்க உறுதி

(கொழும்பு)

நல்லாட்சியின் அடுத்த ஜனாதிபதி வேட்பாளர் தற்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவே என அமைச்சர் ஜோன் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

கம்பஹா பிரதேசத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்ட போதே அவர்



இதனைத் தெரிவித்துள்ளார்.

தொடர்ந்தும் கருத்து தெரிவித்துள்ள அவர், தேர்தலுக்கு பயப்பட முடியாது. தேர்தல் நடத்தப்பட வேண்டும்.

எனவே அடுத்த ஜனாதிபதி வேட்பாளராக தற்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவே களமிறங்குவார். அத்துடன் பொது மக்களின் அபிப்பிராயங்களுக்கு முகங்கொடுக்க நாம் பழ கிக்கொள்ள வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார். (இ-7)

## நீதவான் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரல்

(கொழும்பு)

இலங்கை நீதிச் சேவையின் 2 ஆம் வகுப்பின் 1 ஆம் தரத்திற்குரிய (நீதவான்) பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

பின்வரும் தகைமைகளை உடையவர்கள் விண்ணப்பிக்கலாம். இவ்வறித்தல் (கடந்த 19 ஆம் திகதி வெளியாண) வர்த்தமானிப் பத்திரிகையில் பிரசுரமான தியதியன்று தொழில் நியாய சபையின் தலைவராக இரண்டு வருடாங்களுக்கு குறையாத சேவைக்காலத்ததை கொண்டிருத்தல் வேண்டும்.

அல்லது இவ்வறிவித்தல் வர்த்தமானிப் பத்திரிகையில் பிரசுரமான திகதியன்று நான்கு வருடங்களுக்கு குறையாமல் செயற்றிறன் மிக்கவாறு சட்டத்தரணி தொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் அல்லது சட்டத்தரணியாக இருத்தல் அல்லது இவ்வறிவித்தல் வர்த்தமானிப்பத்திரிகையில் பிரசுரமான திகதியன்று ஏதேனுமொரு அமைச்சில் அல்லது அரச திணைக்களம் ஒன்றில் அல்லது அரச கூட்டுத்தாபனம் ஒன்றில் சட்ட அதிகாரியாக நான்கு வருடங்களுக்கு குறையாத சேவைக் காலத்தைக் கொண்ட சட்டத்தரணியாக இருத்தல் வேண்டும்.

மற்றும் விண்ணப்பதாரி இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும். விண்ணப்பப் படிவங்களை "செயலாளர், நீதிச்சேவை ஆணைக்குழு, நீதிச்சேவை ஆணைக்குழுச்செயலகம், கொழும்பு 12 எனும் முகவரிக்கு அனுப்ப வேண்டும் என நீதிச் சேவை ஆணைக்குழு அறிவித்துள்ளது. (இ)

# தமிழ் மக்களின்
# முதலமைச்சர் சி.வி.
## மன்னார் ஆயர் இராய

**மக்களின் தேவைகள் நிறைவேற்ற முடியாமல் கண்ணீர் வடிக்க வேண்டிய நிலை ஏற்படுகிறது**

மக்களின் தேவைகளை நிறைவேற்ற முடியாமல் திண்டாடிக் கொண்டிருக்கும் போது எமது போதாமையை நினைத்து கண்ணீர் வடிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

10.01.2016

**அரசு மீது கடும் சாடல்**

**ரணில், சந்திரிகா, பிரிட்டன் அமைச்சர் முன் முதலமைச்சர் விக்னேஸ்வரன் எடுத்துரைப்பு**

போரில் பாதிக்கப்பட்ட வடக்கு மாகாணத்தில் தமிழ் மக்கள் தைப்பொங்கலைக் கொண்டாடும் மனநிலையில் இல்லை. அரசியல் கைதிகள் இன்னமும் விடுவிக்கப்பட வில்லை. பயங்கர வாதத் தடைச்சட்டம் நீங்கவில்லை, இராணுவப் பிரசன்னம் குறையவில்லை, முன்னாள் போராளிகள் இயல்பு வாழ்க்கைக்கு திரும்பவில்லை, தனியார் காணிகள் ஒப்படைக்கப்பட்டவில்லை.

15.01.2016

**தமிழ் மக்களின் உரிமைக்காகக் குரல் கொடுக்கவே பேரவை**

20.01.2016

**சமஷ்டி உள்ள நாடுகள் பிரிந்து செல்லவில்லை**

சமஷ்டி ஆட்சிமுறை நடைமுறையில் உள்ள நாடுகள் தமக்கிடையில் பிரிந்து செல்லவில்லை என்று தெரிவித்த வடமாகாண முதலமைச்சர் அரசியல்வாதிகளே சமஷ்டி என்றால் பிரிவினை என அர்த்தப்படுத்தி வைத்துள்ளார்கள்.

21.01.2016

**முதலில் உரிமைகளைக் கொடுங்கள் கலப்பு திருமணங்கள் பிறகு நடைபெறட்டும்**

**ஆளுநர் கூற்றுக்கு முதல்வர் பதில்**

தமிழ் மக்களுக்கு சட்டபூர்வமாக வழங்கப்பட வேண்டிய அனைத்தையும் வழங்குங்கள். அதன் பின்பு சிங்கள-தமிழ் கலப்பு திருமணங்கள் நடைபெறட்டும் என ஆளுநர் கூற்றுக்கு முதல்வர் பதிலடி கொடுத்தார்.

22.01.2016

**சுய நிர்ணய உரிமையையே கோருகின்றோம்**

வடக்கும் தெற்கும் ஒத்திசைவானவர்களாக செயற்பட முடியாது என்பதால்தான் நாங்கள் சுயநிர்ணய உரிமையைக் கோருகின்றோம்.

25.01.2016

**மாற்றங்கள் பல ஏற்பட்டாலும் இராணுவம் இருப்பது பிரச்சினையே**

அவுஸ்திரேலிய தூதுவரிடம் முதல்வர் எடுத்துரைப்பு

மாற்றங்கள் ஏற்பட்டாலும் தொடர்ந்தும் இராணுவம் வடக்கில் இருப்பது எமக்கும் எமது மக்களுக்கும் பிரச்சினை யாகவே இருக்கிறது.

17.01.2016

**முதல்வர் விக்னேஸ்வரனை நம்புகின்றோம் யாழ்.பல்கலை மாணவர்கள்**

18.05.2017

**சொந்த மூளையில் இயங்காது முதலமைச்சருடன் முட்டுவது அழகல்ல**

பிரதி அவைத்தலைவர் அன்ரனி ஜெகநாதன்

10.05.2016

**இலங்கைத் தமிழர் தீர்வு பெற விரைந்து நடவடிக்கை எடுப்பேன்**

விக்னேஸ்வரனுக்கு ஜெயலலிதா உறுதி

28.05.2016

**கட்சிகளைப் பொருட்படுத்தாது தகுதியானவர்களுக்கு வாக்களியுங்கள்**

17.12.2017

**தமிழ் அரசியல்வாதிகள் சிலர் வடக்கு முதல்வருக்கு எதிராக கூட்டுச்சதி**

திரைமறைவில் நடப்பதாக தகவல் கசிவு

01.10.2016 வலம்புரி



**"ஏக்கிய இராச்சிய" என்பது ஒற்றை ஆட்சியே**

**அரசு தரும் அதிகாரங்கள் தமிழ் மக்களுக்குப் போதாது**

**விக்னேஸ்வரன் எடுத்துரைப்பு**

08.11.2017

**தமிழ் மக்களின் நலனுக்காக த.தே.கூட்டமைப்பு மாற வேண்டும்**

தமிழ் மக்களின் நலனுக்காக தமிழ் தேசிய கூட்டமைப்பு தமது கொள்கையை மாற்ற வேண்டும். தமது சுயநலனுக்காக செயற்படக் கூடாது எனவும் அவர் வலியுறுத்தினார்.

08.12.2017

**நாகரிகமாக தருவோம் எனக் கூறி அலைக்கழிப்பதே சிங்கள இராஜதந்திரம்**

**தமிழர் ஒன்றுபடுவதே ஒரேவழி**

28.10.2017

உ

இல

மா

த


தமி
விடுவ
மக்கள்

த
சிங்

# ின் விடிவெள்ளி

# வி. விக்னேஸ்வரன்

## ராயப்பு யோசப் (முன்னாள்)



### தமிழ் மண்ணை காக்கத் துடிக்கிறார் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன்

காசி ஆனந்தன்

18.06.2017

### முதலமைச்சரை அவமதியாதீர் இளைஞன் அடையாள உண்ணாவிரதம்

22.01.2016

### வடக்கு முதலமைச்சர் சொற்படி செயற்படுங்கள்

அங்கஜன் இராமநாதன் கோரிக்கை

21.12.2017

### வடக்கு-கிழக்கு மாகாணங்களில் பௌத்தத்தைத் திணிப்பது தமிழர்களுக்கான துரோகம்

30.10.2017

### தமிழர்களுக்கு எதுவும் கொடுக்கக் கூடாது என சிங்களத் தலைவர்கள் கண்ணும் கருத்துமாக இருக்கிறார்கள்

விக்னேஸ்வரன் காட்டம்

21.10.2017

## உரிமைகளைப் பெறாவிடின் தமிழினம் விரைவில்

இலங்கையில் மறைந்து போகக்கூடும்

19.11.2017

மாவீரர் நாளில் மக்கள் எழுச்சிக்கு

## தமிழ் தலைவர்கள் மீதான அச்சமே காரணம்

தமிழ் தலைவர்கள் அரசுதரும் தீர்வை தமிழ் மக்கள் மீது திணித்து விடுவார்களோ என்று அஞ்சியே மாவீரர் நாள் நினைவேந்தலை தமிழ் மக்கள் எழுச்சியுடன் கடைப்பிடிக்கின்றார்கள்.

28.11.2017

## தமிழீழ விடுதலைப் புலிகளின் போர் சிங்கள மக்களுக்கு எதிரானது அல்ல

15.11.2017

## தமிழ் மக்களின் விழிப்பே பேரவை என்ற பேரலை

விக்னேஸ்வரன் உரை

10.04.2016

## தொடர்ந்து அடிமைப்பட்டிருக்க எந்த இனமும் விரும்பாது

அறிவுபூர்வமான தீர்வு தேவை–விக்னேஸ்வரன்

எந்த இனமும் தொடர்ந்து அடிமைப்பட்டிருக்க விரும்ப மாட்டாது. யார் மறுப்புத் தெரிவித்தாலும் நாங்கள் ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் இராணுவத்தினரின் மேலாண்மையின் கீழ் தான் வாழ்கின்றோம்.

22.04.2016

## இராணுவப் பிரசன்னம் நீடித்தால் பிரபாகரன் மீள அவதரிக்கலாம்

முதலமைச்சர் சி.வி. எச்சரிக்கை

வடக்கு தமிழ் சமூகத்தின் மீது நம்பிக்கையின்றி போரினால் பாதிக்கப்பட்டவர்கள் மத்தியில் இராணுவத்தினை தொடர்ந்து நிலைநிறுத்துவதற்கு அரசாங்கம் முயற்சிகளை மேற்கொண்டால் மற்றுமொரு பிரபாகரன் அவதாரம் எடுத்து வரலாம்.

13.05.2016

இராணுவத்தை முற்றாக வெளியேற்றி

## பொலிஸ் அதிகாரத்தை எம்மிடம் ஒப்படையுங்கள்

வன்முறையைக் கட்டுப்படுத்துகின்றோம்

15.05.2016

## காணிகளில் இராணுவம்; அகதிகளாக மக்கள்

ஐ.நாவிடம் முதலமைச்சர் எடுத்துரைப்பு

யாழ்.மாவட்டத்தில் அரச காணிகள் அதிகளவாக இல்லை. எனவே படையினர் மக்கள் காணிகளை விடுவித்தால் மாத்திரமே மீள்குடியேற்றம் சாத்தியமாகும் என ஐ.நா.அதிகாரிகளிடம் சி.வி.விக்னேஸ்வரன் எடுத்துரைப்பு

07.04.2017

காணாமல் ஆக்கப்பட்டோர் விடயத்தில்

## வாயைத் திறந்தால் அரசுக்கு சிக்கல்

அதனால் தான் மௌனம் காக்கிறது

20.04.2017

## ஜனாதிபதியைக் கொல்லச் சதி

# விமல் வீரவன்சவை கைது செய்யுங்கள்

# அல்லது விசாரணை செய்யுங்கள்

### -கூட்டு எதிரணி எம்.பி.சொய்சா-



(கொழும்பு)

பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச வெளிப்படுத்திய கருத்துக்கு ஒன்றில் அவரைக் கைது செய்திருக்க வேண்டும் அல்லது அவரிடம் சி.ஐ.டி. விசாரணை நடத்தியிருக்க வேண்டும் என கூட்டு எதிரணியின் பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்ஜித் சொய்சா தெரிவித்தார்.

இருப்பினும், இந்த இரண்டும் செய்யப்படாமல் அரசாங்கம் பொறுப்பற்று இருப்பதில் மர்மம் உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

ஜனாதிபதி மற்றும் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ ஆகியோரைக் கொலை செய்வதற்கு சதி செய்த சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டவர் இந்தியாவின் "றோ" உளவுப் பிரிவின் உறுப்பினர் ஆவார் எனவும் இவருடைய அங்கத்தவர் இலக்கமும் கண்டறியப்பட்டுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச தெரிவித்திருந்தார்.

இந்தக் கருத்து பொய்யாயின் விமல் வீரவன்சவை கைது செய்திருக்க வேண்டும். இல்லாவிடின், அவரிடம் விசாரணை மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டும். ஆனால்..இந்த இரண்டும் செய்யப்படவில்லையெனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

# இழப்பீடுகள் பற்றிய சட்டமூலத்தின் ஊடாக இனவாத அரசியல் செய்வதற்கு சிலர் முயற்சி

### நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் விசனம்



(கொழும்பு)

பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட இழப்பீடுகள் பற்றிய அலுவலக சட்டமூலம் முன்னாள் போராளிகளுக்கு மாத்திரம் உதவி வழங்கும் சட்டமூலம் எனக் கூறி இனவாத அரசியல் செய்வதற்கு சிலர் முயற்சிப்பதாக ஜே.வி.பி. தெரிவித்துள்ளது.

யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட சகல தரப்பினருக்கும் இழப்பீடுகள் வழங்கும் நோக்கிலேயே குறித்த சட்டமூலம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டிருப்பதாக ஜே.வி.பியின் பாராளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

ஜே.வி.பி. தலைமையகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே விஜித ஹேரத் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இழப்பீடுகள் பற்றிய அலுவலக சட்டமூலத்தால் முன்னாள் போராளிகளுக்கு அரசாங்கம் நிதியுதவி வழங்கப் போகிறதா? என எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கும் போதே விஜித ஹேரத் இவ்வாறு தெரிவித்தார். யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட சகல இனத்தவருக்கும் ஏற்பட்ட பௌதீக இழப்புக்கள் மற்றும் உள்ரீதியான பாதிப்புக்களுக்கும் நட்டஈடுகள் வழங்கப்பட வேண்டும். இதற்காகவே இச்சட்டமூலம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

எனினும், சிலர் இனவாத ரீதியான பிரசாரங்களை மேற்கொண்டு சுய அரசியல் இலாபம் தேடுவதற்கு முயற்சிப்பதாகவும் விஜித ஹேரத் குற்றஞ்சாட்டினார்.

2009ஆம் ஆண்டு மே மாதம் 19ஆம் திகதி யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது. நாம் அவ்வருடம் மே 26 ஆம் திகதி பாதிக்கப்பட்ட சகலருக்கும் நட்டஈடு வழங்கப்பட வேண்டும் என்ற யோசனையொன்றை அரசாங்கத்துக்கு வழங்கியிருந்தோம்.

குறிப்பாக யுத்தத்தினால் விதவைகளாக்கப்பட்ட 80 ஆயிரத்துக்கும் அதிகமான பெண்கள் இருக்கின்றனர்.

அவர்கள் உள்ளடங்கலாக சகல தரப்புக்கும் நட்டஈடு வழங்கப்பட வேண்டும் என அதில் வலியுறுத்தியிருந்தோம். பத்து வருடங்கள் ஆகியும் எவருக்கும் நட்டஈடுகள் வழங்கப்படவில்லை.

இவ்வாறான நிலையில் இழப்பீடுகளை வழங்குவது தொடர்பான சட்டமூலத்தை இன முரண்பாடுகளுக்குப் பயன்படுத்த முயல்பவர்கள் இன ரீதியான கருத்துக்களை முன்வைக்கின்றனர்.

அதிகாரத் தேவைகளுக்காகவே அவர்கள் இன ரீதியான பிரசாரங்களை முன்னெடுக்கின்றனர்.

மீண்டும் யுத்தம் ஏற்படாதிருப்பதை உறுதிப்படுத்த வேண்டியது சகல அரசியல் கட்சிகளினதும் பொறுப்பாகும்.

இதனை உறுதிப்படுத்த யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட சகல தரப்புக்கும் நட்டஈடு வழங்குவது அவசியமானதாகும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# 1000 ரூபாய் சம்பள உயர்வைக் கோரி தலவாக்கலையில் தனிமனித போராட்டம்





(கொழும்பு)

தோட்டத் தொழிலாளர்களுக்கான 1000 ரூபாய் சம்பள உயர்வை வலியுறுத்தி நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை தலவாக்கலை நகரில் தனிமனித போராட்டம் ஒன்று இடம்பெற்றது.

இதன்போது தேயிலை கூடைகளில் சுலோகங்களை எழுதிய வண்ணம் தனிநபர் ஒருவர் தலவாக்கலை நகர் சுற்று வட்டத்திலிருந்து பிரதான வீதியூடாக பயணித்து தனது எதிர்ப்பை வெளிப்படுத்தியுள்ளார்.

இந்நிலையில் குறித்த நபர் தனது முகத்தை கறுப்பு துணியால் மூடிக் கட்டிக் கொண்டு எதிர்ப்பு வாசகங்கள் எழுதிய கொழுந்து கூடைகளை இழுத்துச் சென்றமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## இன்று ஒரு தகவல்

### தூண்டுகோலாவோம்

ஒரு பேருந்தில் பயணம் செய்கிறீர்கள். முன் வரிசையில் அமர்ந்திருந்த ஒருவர் ஒரு வயதான பெண்மணிக்கு இடம் கொடுப்பதற்காக எழுந்திருக்கிறார். பெண்மணி அமர்கிறார். தான் செய்த இந்தச் சிறு நல்ல செயலைப் பேருந் தில் யாராவது கவனிக்கிறார்களா என்று பார்க்கிறார். – நிச்சயம் பார்ப்பார். காரணம் மனிதனுக்குள்ள இயல்பான ஏக்கம் இது.

பின் வரிசையில் இருக்கும் நீங்கள் இந்தச் செயலைப் பார்க்க நேரிடுகிறது என்று வைத்துக் கொள்வோம். அவர் நம்மை யாரும் பார்க்கிறார்களா என்று நோட்டம் விடும் போது நீங்கள் முகத்தை வேறு பக்கம் திருப்பிக் கொள்வீர்களா?

ஆம் என்றால் அது தவறு. அச் செய லைச் செய்தவரை நோக்கிப் புன்னகை செய்யலாம். இடந் தந்தவர் ஆணாயிருந்து பார்ப்பவர் பெண்ணாயிருந்தால் புன்னகை செய்வது சிரமம் தான். ஆனால் கண்டு கொள்ளலாம் இல்லையா?

மனித மனங்கள் சுருங்கி வருகின்றன. நல்ல பண்புகளை சுயநலப்பேய்கள் அடித்து சாய்த்து வீழ்த்தி வருகின்றன. இந்த வேகமான – நெரிசல் மிக்க உலகில் இது இயற்கையே. இதற்காக மனித இனத்தைக் குறை சொல்லுவது பொருத்தமல்ல.

நாம் நல்லது செய்கிறோமா இல்லையா என்பது அடுத்த கேள்வி.

முதல் கேள்வி. நல்லது செய்பவர்களை நாம் போற்றுகிறோமோ – தூண்டுகிறோமோ இல்லையா என்பதே.

நல்லது செய்பவர்களுக்கு பலனைப் பற்றி அதிகம் கவலைப்படாமல் பாடுபடுபவர்களுக்கு மரியாதைகளுடன் பிறரை நடத்துபவர்களுக்கு பாராட்டக்கூட மிஞ்சாவிட்டால் எப்படி?

அலையாய் அலைந்து வீட்டைக் கண்டு பிடிக்க முடியாமல் திணறுகிடுறோம். வழியில் எதிர்ப்படும் ஒருவரை வழி கேட்கிறோம். பொறுப்பாக பதில் சொல்கிறார் அவர். இனி நம் கவலையும் கவனமும் வேறாகி விடுகின்றன. நகர்ந்து விடுகிறோம்.

அந்த மனிதர் இப்படி நினைக்க ஆரம்பித்து விடுகிறார். சை! பொழப்பத்துப் போய் இந்த ஆளுக்குப் பொறுமையாய் வழி காண்பித்தோமே! ஒரு தாங்ஸ் கேவலம் ஒரு புன்னகை கூட இல்லை. இனி எவனுக்குமே வழிகாட்டக் கூடாது – என்று முடிவுக்கு வந்து விடுகிறார்.

பகலில் உங்கள் வண்டியில் விளக்கு எரிகிறது. எதிர்வரிசையில் போகிறவர் விளக்கை அணைக்கும் படி சைகை காண்பிக்கிறார். நீங்களோ நன்றிப் புன்னகை சிந்தாமல் விறைப்பாகப் போகிறீர்கள். இனி எவனுக்குமே விளக்கு அணைக்க சைகை காட்டக்கூடாது என்ற முடிவுக்கு வருகிறார்.

இது கூடாது.

ஒருவர் செய்யும் நல்ல காரியங்களிலிருந்து விலக நாம் காரணமாயிருக்கக் கூடாது.

நாம் தனிமனிதனாக இப்படி நடந்து உலகை மாற்றிவிட முடியுமா? என்று சிலர் கேட்கலாம். உலகை மாற்ற வேண்டிய அவசியம் நமக்கு இல்லை. ஆனால் நல்லவர்களின் மனம் உறைந்து போகாதபடி பார்த்துக் கொள்ள வேண்டிய கடமை நமக்கு இருக்கிறது.

இந்தத் தனிமனித இயக்கம் பரவுமா – பலன் அளிக்குமா என்பது பற்றி நாம் அதிகம் கவலை கொள்ளத்தேவையில்லை. நம் மனத் திருப்திக்கேனும் இதைச் செய்து வந்தால் போதும்.

நல்லதை –

நல்லவர்களை –

ஊக்குவிப்போம், பாராட்டுவோம்.

நாம் செய்யக்கூடிய மிகச் சிறந்த நல்ல காரியம் இதுவாகத்தான் இருக்க முடியும்.

**லேனா தமிழ்வாணன்**

# இன்று ஒரு சிறு பிள்ளைக்குக்கூட அரசியல் பற்றி தெரிந்திருக்கிறது

## வடக்கு முதலமைச்சர் விக்னேஸ்வரன் சுட்டிக்காட்டு

(யாழ்ப்பாணம்)

சிலகாலங்களுக்கு முன்னர் வரை அரசியல் என்பது ஒரு குறித்த வகுதியினருக்கானது எனவும் ஏனைய மக்கள் தேர்தல் காலங்களில் வாக்களிப்பதுடன் அவர்களின் அரசியல் பணிமுடிவடைந்து விட்டது என்ற கோட்பாட்டிலேயே மக்கள் வாழ்ந்து வந்தனர்.

ஆனால் இன்று ஒரு சிறு பிள்ளைக்குக்கூட அரசியல் பற்றி தெரிந்திருக்கின்றது. தலைவர்களின் மாயாஜாலப் பேச்சுக்களையும் பொய் வாக்குறுதிகளையும் அவர்கள் இலகுவில் அடையாளம் காணப்பழகிக் கொண்டுள்ளார்கள் என வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார். மூளாய் இந்து இளைஞர் மன்றத்தின் 75 ஆண்டுகள் பவள விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஒரு கிராமத்தின் வளர்ச்சிக்கு அப்பகுதியில் அமைந்துள்ள சனசமூக நிலையங்களும் அதனோடு இணைந்த வாலிபர் அமைப்புக்கள், பெண்கள் அமைப்புக்கள், பாலர் பாடசாலைகள், முதியோர் கல்வி நிலையங்கள் போன்ற பல்வேறு அலகுகளும் உதவுகின்றன. இவ்வாறான அபிவிருத்தி வளர்ச்சிகளுக்கு இளைஞர்களின் பங்கு முக்கியமானது. விசேடமாக எமது கிராமப் பகுதிகளில் காணப்படும் இளைஞர் அமைப்புக்களின் சமூக மேம்பாட்டுச் செயற்பாடுகள் முன்னிலை வகிப்பதை நாம் பல சந்தர்ப்பங்களில் அவதானித்திருக்கின்றோம்.

கிராம அபிவிருத்திக்கு துணை நிற்றல். இயற்கை அனர்த்தங்களின் போது விரைந்து செயற்பட்டு பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணப் பணிகளை அடுத்தகணமே வழங்குவதற்கு முன்வருதல்போன்ற உயரிய சிந்தனைகளையும் செயற்பாடுகளையும் இந்த இளைஞர் அமைப்புக்கள் கொண்டிருப்பதைக் கண்டு நாம் மகிழ்வுற்றதுடன் பல சந்தர்ப்பங்களில் இவர்களின் சேவைகளை மனமார வாழ்த்தியிருக்கின்றோம்.

அந்த வகையில் மூளாய் இந்து இளைஞர் மன்றத்தின் செயற்பாடுகள் போற்றப்பட வேண்டியவை. அவர்களின் உதவிகளைப் பெற்ற மக்களின் வாழ்த்துக்கள் அவர்களுக்கு என்றென்றும் கிட்டுவதாக! இவ் இளைஞர் மன்றத்தின் சேவைகள் பற்றி எனக்கு வழங்கப்பட்ட குறிப்புக்களில் பல்வேறு விடயங்கள் சுட்டிக் காட்டப்பட்டுள்ளன. அவற்றுள் சமயம் சார்ந்த நிகழ்வுகளாக வருடந்தோறும் வாணிவிழா நிகழ்வுகளை முன்னெடுப்பதுடன் உள்ளூர் கலைஞர்களை ஊக்குவிக்கும் நோக்கில் பல்வேறு இயல், இசை,நாடக நிகழ்வுகளை மேடையேற்றி, கலைஞர்களுக்கும், குழந்தைகளுக்கும் ஆக்கமும் ஊக்கமும் அளித்து வருவது பற்றி கூறப்பட்டிருந்தது.

அத்துடன் ஆண்டு 1 தொடக்கம் 5 வரையான மாணவர்களிடையே பண்ணிசைப் போட்டிகள், மனனப் போட்டிகள், அமைய எழுத்துப் போட்டி தேடல் வினா போன்ற பல்வேறு போட்டிகளை நடத்தி அவர்களை ஊக்குவிப்பதுடன் வெற்றி பெறுகின்ற மாணவர்களுக்கு பரிசில்களும் வழங்கி கௌரவிக்கப்படுகின்றது என அறிகின்றேன்.

இன்றைய குழந்தைகளுக்கு அறநெறிவகுப்புக்களை விடுமுறை நாட்களில் கோவில்களிலோ அல்லது இதுபோன்ற பொது அமைப்புக் கட்டடங்களிலோ நடத்துவது அவசியம். இன்று ஆலயங்களில் தேவாரம் பாட பிள்ளைகள் இல்லை. சிலகாலங்களுக்கு முன்னர் இளைஞர்களும், யுவதிகளும், முதியவர்கள் பலரும் பண்ணோடு இசைக்கக் கூடியவர்களாக இருந்தார்கள். கோவில்களில் என்றால் என்ன மற்றும் சிறப்பு நிகழ்வுகளில் எல்லாம் 'நான் முந்திநீமுந்தி' என்று தேவாரம்பாடி இசைப்பார்கள். ஆனால் இன்று கோவில்களில் தேவாரம் பாட முதியவர்கள் கூட இல்லை. இறுதியில் அர்ச்சகரே வசன நடையில் ஒரு தேவாரத்தை வெளியிட்டு பூஜைகளை நிறைவுசெய்ய வேண்டியுள்ளது.

எங்கோ ஒரு கோயிலில் பல வருடங்களுக்கு முன்னர் தேவாரம் பாடவேண்டிய நேரத்தில் பதிவு உபகரணத்ந்த அல்லது tape recorder ஐத் தட்டிவிடுவதைப் பார்த்தும் கேட்டும் இருக்கின்றேன். அதில் சிறந்த பாடகர்கள் அல்லது ஓதுவார்கள் பண்ணோடு தேவாரம் பாடுவது பதிவாகியிருக்கும். அவர்கள் பாடுவதைக் கேட்க மனம் நெகிழும். அத்துடன் தேவாரங்களை அழகாக எமக்குப் புரியும்படி பிரித்து சரியாகஉச்சரித்து பாடுவதைக் கேட்டுள்ளேன்.


இவ்வாறான பதிவுகள் கேட்டுக் கொண்டிருக்கும் குழந்தைகளையும் முதியோர்களையும் ஈர்க்குந் தன்மை வாய்ந்தன. வயது முதிர்ந்தவர்களை விடகுழந்தைகளுக்கு பாடம் கற்பித்தல் இலகுவானது. அவர்கள் எதையும் எளிதாகக் கற்றுக் கொண்டுவிடுவார்கள்.

ஆனால் அவர்கள் பாடமுன் வராதபோது ஈடுபாடு காட்டாது இருக்கும் போது இவ்வாறான பதிவு உபகரணங்களை உபயோகிப்பது காலாகாலத்தில் பக்தர்கள் தாமாகப் பாட வழிவகுக்கக் கூடும். கதிர்காமத்தில் தெய்வானை அம்மன் கோவிலில் பூஜை காலத்தில் பக்கவாத்தியங்கள் இசைக்க எவரும் இல்லாததால் ஒரு Switch ஐத் தட்டி விட்டதும் தானாகவே முரசு இசை ஒலிக்கும்.

ஆகவே தற்காலத்தில் பக்க இசையை, பண்ணிசையை உபகரணங்கள் ஊடாக வருவிக்க வேண்டியுள்ளது. எனினும் நல்ல இசையுடன் கலந்த பதிவுகள் மீண்டும் எம் மக்களைத் தாமாக இசைக்க வைக்க இடமுண்டு. தேவாரம் பாடுவதை, பக்க இசை இசைப்பதை ஒரு கட்டாயமாக்காமல் குழந்தைகளுக்கும் முதியவர்களுக்கும் பக்தி ஏற்படும் வகையான பதிவுகளை ஒலிப்பது அவர்களுடையே மாற்றத்தை ஏற்படுத்தக் கூடும் என்பதைச் சொல்ல வருகின்றேன்.

கட்டாயப்படுத்தி பாடத் தெரியாதவர்கள் முணுமுணுத்துவிட்டுச் செல்வதிலும் பார்க்க உபகரணங்கள் ஊடாகப் பிறக்கும் நல்லிசை பக்தியை உண்டு பண்ணும்.

இந்த இளைஞர் மன்றத்தின் பல்வேறு சமயம் சார்ந்த முன்னெடுப்புகளுக்கு மேலதிகமாக சமூகப் பணிகளிலும் இவர்கள் முனைப்புடன் செயற்படுவது முன்மாதிரியானது. உதாரணத்திற்கு இரத்ததான நிகழ்வுகளை வருடாந்தம் முன்னெடுத்து மருத்துவத்துறைக்கும் நோயாளர்களுக்கும் உதவி வழங்குதல், தொற்றாநோய்கள் தொடர்பான மருத்துவ விழிப்புணர்வுகளை மேற்கொள்ளல்,புதினப் பத்திரிகைகளை மக்கள் பார்வைக்காக மன்றத்தில் வைத்தல் போன்ற நிகழ்வுகளுடன் இலவச கண் பரிசோதனைகளையும் வருடாந்தம் மேற்கொண்டு மூக்குக் கண்ணாடிகளை இலவசமாக வழங்குதல் போன்ற பணிகளையும் செய்து வருகின்றார்கள் என்று அறிகின்றேன்.



இன்றைய காலகட்டத்தில் சமூக மேம்பாட்டிற்கும்அரசியல்முன்னெடுப்புக்களுக்கும் இளைஞர்களின் பங்கு முக்கியமானது. விரைந்து தீர்மானங்களை மேற்கொள்ளக் கூடிய திறன், அவற்றை நடைமுறைப்படுத்தக்கூடிய சக்தி ,பலம் ஆகியவை இளைஞர்களிடையே காணப்படுகின்றன.

சில காலங்களுக்கு முன்னர் வரை அரசியல் என்பது ஒரு குறித்த வகுதினருக்கானதுஎனவும்ஏனைய மக்கள் தேர்தல் காலங்களில் வாக்களிப்பதுடன் அவர்களின் அரசியல் பணி முடிவடைந்து விட்டது என்ற கோட்பாட்டிலேயே மக்கள் வாழ்ந்து வந்தனர். ஆனால் இன்று ஒரு சிறு பிள்ளைக்குக் கூட அரசியல் பற்றி தெரிந்திருக்கின்றது. தலைவர்களின் மாயாஜாலப் பேச்சுக்களையும் பொய் வாக்குறுதிகளையும் அவர்கள் இலகுவில் அடையாளம் காணப் பழகிக் கொண்டுள்ளார்கள். அவர்கள் சிலரின் சாதி ரீதியான சிந்தனைகளை அடையாளம்கண்டு கொண்டுள்ளார்கள். அத்துடன் தலைவர்களுக்கு எதிராகக் கேள்விகளைக் கேட்பதற்கும் அவர்களின் செயற்பாடுகள் குறித்து விமர்சிப்பதற்கும் இளைஞர்கள் குழாம் தயாராகி விட்டது. சென்ற வாரம் பல்கலைக்கழக மாணவர்கள் என்னைச் சந்தித்து கேள்வி மேல் கேள்விகளைக் கேட்டார்கள். நானும் உற்சாகத்துடன் அவர்கள் கேள்விகளுக்குப் பதில் அளித்தேன். ஆகவே இந்த நிலையில் அரசியல் அனுபவத்தைக் கொண்ட முதிர்ந்த அரசியல்தலைவர்கள் எமது இளைய சமுதாயத்திற்கு வழிகாட்டிகளாக இருந்து அவர்களையும் அரசியல் நீரோட்டத்தில் இணைத்துக் கொண்டு முன்னேற வேண்டும் என்பதே எனது அவா.

எமது தேவைகள், எமக்கு வழங்கப்பட வேண்டிய சேவைகள் அனைத்தும் அரசினால் வழங்கப்பட வேண்டும் என்ற சிந்தனை தற்போது மாறத் தொடங்கியுள்ளது. எமது நியாயமான தேவைகளை நாமே நிறைவேற்றிக் கொள்கின்ற ஒரு நிலைக்கு நாம் முன்னேறுகின்ற போது ஏனைய மக்களின் மேலாதிக்கங்களோ அல்லது அரசியல் தலையீடுகளோ எம் மீது பிரயோகிக்க முடியாது போய்விடும். எனவே தான் நான் ஒவ்வொரு கிராமங்களிலும் இயங்குகின்ற சனசமூக நிலையங்களை வலுப்பெற்றதாக மாற்றியமைக்கவேண்டும் என்று கூறி வருகின்றேன். இதற்காக இந்திய அரசாங்கத்திடம் இருந்து உதவிகளையும் கேட்டுள்ளேன். அவற்றினூடாக பல செயற்றிட்டங்களை முன்னெடுப்பதன் மூலம் இடைத்தரகர்களின் உள்ளீடுகளைத் தவிர்த்து எமது தேவைகள் அனைத்தையும் எமது சங்கங்களினூடாகவே நிறைவேற்றக் கூடிய ஒரு தன்மையை உருவாக்க முடியும் என்றும் கூறி வருகின்றேன். அவ்வாறு ஒரு நிலை ஏற்படும் போது எமது முன்னேற்றகரமான செயற்பாடுகள் சம்பந்தமாக தமது அவதானங்களைப் பலர் எம்மீது செலுத்துவார்கள். தாமும் அவ்வாறான செயற்பாடுகளில் இறங்க எத்தனிப்பார்கள். அப்போது அரசியல் அழுத்தங்கள் அற்ற சுயாதீன சமூகங்களாக அனைத்து சமூகங்களும் வாழத் தலைப்படலாம்.

1970களில் அரிமா சங்கங்களில் (Lions Clubs) ஒரு புதிய சிந்தனை உட்புகுத்தப்பட்டது. தேவை கொண்ட மக்களுக்கு வெறுமனே கொடைகளை ஈவது அவர்களைச் சோம்பேறிகள் ஆக்குகின்றது. ஆகவே நாங்கள். மக்கள் தமது சொந்தக்கால்களில் நின்று உழைத்து பயன் அடையும் விதத்தில் கொடைகளை வழங்க வேண்டும் என்றார்கள். உதாரணத்திற்கு ஒரு கிராமத்தைச் சுத்தப்படுத்த வேண்டும் என்றால் மண்வெட்டி, குப்பைவாரி போன்ற உபகரணங்களை அவ்வூர் மக்களுக்கு வழங்கி அவர்களே தமது ஊரைச் சுத்தமாக்கும் பணிகளில் ஈடுபட வழிவகுக்க வேண்டும் என்றார்கள்.

இவ்வாறான செயற்பாடுகள் அரசியல் தலைவர்களை பேருக்குத் தலைவர்களாக இல்லாது தொண்டர்களாக, பொதுமக்களின் சேவையாளர்களாக மக்களுக்கான சேவைகளை வழங்குபவர்களாக மாற்ற உதவி புரியும்.

எமது வடமாகாணசபையின் பதவிக்காலம் நிறைவுறுவதற்கு மூன்றே நாட்கள் உள்ள நிலையில் என்மீது அன்பு செலுத்துகின்ற பல இடங்களைச் சார்ந்த மக்கள் வெவ்வேறு நிகழ்வுகளில் என்னைக் கலந்து கொள்ளுமாறு அழைத்துக் கொண்டிருக்கின்றார்கள். எனது வயது மூப்புக் காரணமாக உடல் சற்று ஒத்துழைக்க மறுக்கின்ற போதும் நீங்கள் என்மீது காட்டுகின்ற அன்பு என்னை உங்கள்பால் நாடி வந்து இவ்வாறான நிகழ்வுகளில் கலந்து கொள்வதற்கு உதவி புரிகின்றது. இன்னும் சிறிது நேரத்தில் உங்களது இந்த நிகழ்வு நிறைவடைந்ததும் நான் பருத்தித்துறைப் பகுதியில் உள்ள ஐக்கிய விளையாட்டுக் கழகத்தின் ஒரு கூடைப்பந்தாட்ட மைதானத்தைத் திறந்து வைப்பதற்காக செல்ல வேண்டியிருக்கின்றது. என் வாஸஸ்தலம் திரும்பிய பின்னரே அங்கு செல்ல வேண்டியிருக் கின்றது. உங்கள் நிகழ்வு பற்றி அவர்களுக்குத் தெரிவித்தபோது "ஐயா! நீங்கள் என்ன நேரம் என்றாலும் பரவாயில்லை வாருங்கள். ஆனால் இந்த விளையாட்டுத்திடல் உங்கள் கைகளாலேயே திறக்கப்படவேண்டும்" என்று உறுதியாகக் கூறி விட்டார்கள். மறுக்க முடிய வில்லை. நான் அந்த நிகழ்விற்கு செல்ல வேண்டிய காரணத்தினால் எனது உரையை இந்தஅளவில் நிறைவு செய்து கொண்டு மீண்டும் உங்களை சந்திப்பதற்காக விரைவில் இப்பகுதிகளுக்கு விஜயம் செய்வேன் எனத் தெரிவித்து எனது உரையை இத்துடன் நிறைவு செய்கின்றேன் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | கொடிகாமம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 140 | 120 | 180 | 200 |
| உருளைக்கிழங்கு | 100 | 90 | 100 | 100 |
| பச்சைமிளகாய் | 140 | 130 | 150 | 200 |
| தக்காளி | 120 | 100 | 100 | 60 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 40 | 50 | 160 |
| கோவா | 120 | 60 | 120 | 200 |
| கரட் | 150 | 130 | 140 | 80 |
| பூசணி | 40 | 40 | 50 | 120 |
| புடோல் | 150 | 100 | 120 | 120 |
| வாழைக்காய் | 80 | 60 | 80 | 100 |
| சின்ன வெங்காயம் | 100 | 80 | 110 | 120 |
| பெரிய வெங்காயம் | 100 | 92 | 100 | 300 |
| பாகற்காய் | 250 | 280 | 240 | 120 |
| வெண்டிக்காய் | 150 | 80 | 80 | 80 |
| கருணைக் கிழங்கு | 80 | 50 | 60 | 200 |
| பயற்றங்காய் | 160 | 130 | 200 | 120 |
| லீக்ஸ் | 80 | 60 | 110 | 100 |
| பீற்றூட் | 80 | 50 | 80 | 200 |
| கறிமிளகாய் | 200 | 80 | 250 | 200 |
| முருங்கைக்காய் | 250 | 100 | 30 | 120 |
| போஞ்சி | 200 | 200 | 350 | 280 |
| கத்தரிதம்டுள்ளா | 120 | 100 | 200 | 160 |
| கீரை-1பிடி | 40 | 30 | 60 | 50 |
| தேசிக்காய் | 250 | 300 | 200 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 50 | 60 | 30-50 |
| இராசவள்ளி | 140 | 110 | 250 | 240 |
| வெங்காயப்பூ | 200 | 100 | 350 | 200 |
| முள்ளங்கி | 80 | 30 | 30 | 120 |
| பொன்னாங்காணி | 40 | 20 | 40 | 40 |
| வல்லாரை | 20 | 15 | 20 | 20 |
| ஈரப்பலா | 50 | 110 | 60 | 100 |



யாழ்.நவாலி ஸ்தான அமெரிக்கன் மிசன் தமிழ்க்கலவன் பாடசாலையின் ஆசிரியர் தினமும் சிறுவர் தினமும் அண்மையில் நடைபெற்றது.

## கலஹா சம்பவம்; மேலும் ஐவர் கைது

(கொழும்பு)

கடந்த ஓகஸ்ட் மாதம் 28ஆம் திகதி கலஹா வைத்தியசாலையின் சொத்துக்களுக்கு சேதம் விளைவித்த சம்பவம் தொடர்பில் மேலும் 5 சந்தேகநபர்கள் நேற்று முன்தினம் கலஹா பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த ஐவரும் தெஹிவளை, எந்தலை ஆகிய பிரதேசங்களில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில், இதுவரை 12 பேர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள நிலையில், மேலும் ஐவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கலஹா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட ஒன்றரை வயது குழந்தையொன்று உயிரிழந்ததையடுத்து, ஏற்பட்ட பதற்றமான சூழ்நிலையால் பிரதேசவாசிகளால் வைத்தியசாலை சொத்துக்களுக்கு சேதம் விளைவிக்கப்பட்டது. இதனால் கடந்த 2 மாதங்களாக கலஹா வைத்தியசாலை மூடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# பிறந்த எண்களின் அதிர்ஷ்ட இரகசியம்

## பிறப்பு எண் 8 விதி எண் 3


சனி, குரு ஆதிக்கத்தில் பிறந்த இவர்கள் கலை உணர்வு கொண்ட தோற்றமுடையவர்கள். சிலர் உயரம் குறைவாகவும், ஓரளவு உயரமாகவும் காணப்படுவார்கள். ஆரம்ப வாழ்க்கையில் பல்வேறு சோதனைகளைச் சந்தித்தாலும் இவர்களைப் பெரிய அனுபவசாலிகள் என்று அழைக்கலாம். பார்ப்பதற்கு மிகவும் அழகாக முன் பற்கள் இரண்டும் மற்றதைக் காட்டிலும் பெரிதாக இருக்கும். இளமையிலேயே முடி உதிரும். நேர்மை, நீதி இவற்றில் நம்பிக்கை உடையவர்கள். இளமையிலேயே பல்வேறு சோதனைகளைச் சந்தித்து எதிர் நீச்சல் போட்டு வெற்றி பெறுவார்கள். எங்கு சென்றாலும் வெற்றி பெறுவார்கள்.

நல்ல பெயரெடுப்பார்கள். குரு மார்க்கம், பக்தி மார்க்கம் தெரிந்தவர்கள். பல புண்ணிய பிரயாணங்கள் மேற்கொள்வார்கள். நல்லறிவும், பொது அறிவும் நிரம்பியவர்கள். மனதில் பட்டதை உடனே கூறி விடுவார்கள். தேச பக்தியும், தெய்வீகப் பக்தியும் நிரம்பியவர்கள். நாட்டு நலனில் அக்கறை உடையவர்கள். எதிர்ப்பைத் தகர்த்தெறிவார்கள். புத்தகம் படிப்பதில் மிகவும் பிரியமானவர்கள். புத்தகத்தில் படித்த விடயங்களை வாழ்க்கையில் கடைப்பிடிப்பார்கள். கலைஞானிகள் என்று பெயரெடுப்பார்கள். ஓரளவு நெற்றியும், வசீகரப் பார்வையும் இருக்கும். இவர்களின் குடும்ப வாழ்க்கை குழப்பங்கள் நிறைந்ததாகவே இருக்கும். தன்னைச் சார்ந்த நாட்டிற்கும், சமூகத்திற்கும் நல்லது செய்ய வேண்டுமென்று எண்ணுவார்கள்.

கடுமையான மொழிகளில் பேசுவார்களே தவிர கெட்டவர்கள் அல்ல. ஒளிவு மறைவு இன்றித் தனது மனதில் பட்டதைக் கூறுவார்கள். இதனால் பலரது பகையும் உருவாகும். ஆண்டவன் அனுக்கிரகம் உடைய இவர்களுக்கு எந்த வழியிலும் செல்வம் சேரும். ஆனால் மனம் அமைதியில்லாது போகும். வெற்றி தோல்வி பற்றிக் கவலைப்படமாட்டார்கள். போராடிக்கொண்டேயிருப்பார்கள். ஆபத்து வரும் போது மீனைப்போல நழுவி விடுவார்கள். சவால் விட்டுக் காரியத்தைச் சாதிக்க முற்படுவார்கள். திறமைசாலிகளை மதிப்பார்கள். சுய நலம் மிகுந்திருக்கும்.

பொதுநலவாதிகள் போலக் காட்டிக் கொள்வார்கள். தனக்குப் பொறுக்க முடியாத அளவு துன்பங்கள் வரும் போது இறைவன் சந்நிதிக்குச் சென்று அழுது விடுவார்கள். இளமையில் தானடைந்த கஷ்டத்தையும், துன்பங்களையும் மற்றவர்களிடம் கூறிக் கொண்டேயிருப்பார்கள். தான் இந்த உலகில் கஷ்டப்படவே பிறந்தோம் என்று எண்ணுவார்கள். இப்படியே காலம் கடந்து போய் விடுமோ, முன்னேறவே மாட்டோமா என்ற ஏக்கத்துடன் வாழ்வார்கள். வாழ்க்கைத் துணையைத் தொல்லைகள் என்றே எண்ணுவார்கள். ஆன்மீக விடயங்களில் குழந்தைத் தனமாக நடந்து கொள்வார்கள். மற்றவர்களின் வாழ்க்கையில் தலையிட்டு பிரச்சினைகளில் மாட்டிக் கொள்வார்கள். தனக்குப் பிடித்த விடயங்கள் பற்றியே மற்றவர்களிடம் புகழ்ந்து பேசிக் கொண்டிருப்பார்கள்.

நாணயமாக நடந்து கொள்வார்கள். இவர்கள் மனம் கலை, கலாசாரம், மருந்துகள், ஜோதிடம் பற்றியே ஆராய்ச்சி செய்து கொண்டிருக்கும். முன்கோபமும், மூர்க்கததனமும் இவர்களின் வளர்ச்சிக்குத் தடையாக இருக்கும். உலக விடயங்கள் அனைத்தும் அறிந்த இவர்களின் பேச்சும், எழுத்தும் கண்டிப்புடன் இருக்கும். காரியவாதிகள். சமய சந்தர்ப்பங்களைச் சரியாகப் பயன்படுத்தி வெற்றி பெறுவார்கள். தன் தகுதிக்கு அதிகமாக ஆசைப்பட்டு துன்பமடைவார்கள். பிறருடைய யோசனையைக் கேட்காமல் தன்னுடைய யோசனைப் படியே காரியங்கள் ஆற்றுவார்கள். பல கலைகளைக் கற்ற ஆசான்கள். வாகனப் பிரியர்கள். பயமற்றவர்கள். தான் ஒரு சமுதாய சீர்திருத்தவாதியாகவே வாழ ஆசை




ப்படுவார்கள். பணத்தைச் சிலநேரங்களில் சம்பந்தமில்லா வழிகளில் செலவழிப்பார்கள். கலைகளைக் கற்கும் ஆர்வத்துடன் இருப்பார்கள். தன்னைப் பற்றித் தாழ்வாக யாரும் பேசிவிடக் கூடாது என்று எண்ணும் இவர்கள் மற்றவர்கள் பற்றி முழுநேரமும் புறங்கூறிக் கொண்டிருப்பார்கள்.

தங்களின் குறைகளை மற்றவர்களிடம் கூறி உதவிகள் கேட்க மாட்டார்கள். மற்றவர்களுக்கு உதவிகள் செய்வதில் தாமதம் இருக்கும். குற்றம் செய்தவர்களை மற்றவர்களை விடவும் கடுமையாக திட்டவும், தண்டிக்கவும் செய்வார்கள். மனதில் ஒருவித மேதாவித்தனமிருக்கும். புகழ்மிக்க வாழ்க்கையே இவர்களைப் பெரிதும் கவரும். முன்னோர்களைப் பின்பற்றி நடக்கும் இவர்களை நம்பிப் பலர் தங்களுடைய உடைமைகளையும், பணத்தையும் ஒப்படைப்பார்கள். எப்போதும் தூய்மையாகவே இருக்க விரும்பும் இவர்கள் பிறருடைய உண்மையான மனநிலையை அறிந்த பின்னரே ஆழ்ந்த நட்பு வைத்துக் கொள்வார்கள். இறையுணர்வு மிகுந்து காணப்படும். அழகை இரசிப்பார்கள்.

கோவில்கள், மலைப்பிரதேசங்கள், பறவைகள், விலங்கினங்கள் என்று அனைத்தையும் இரசிப்பார்கள். பேச்சும் எழுத்தும் பொருள் ஈட்டும். குழந்தைகள் மீது பாசமுடையவர்கள். பிறருக்கு அறிவுரை கூறுவதில் ஆசான்கள். ஆன்மீக சம்பந்தப்பட்ட விடயங்களை கற்று வைத்து பிறருக்குப் போதித்துக் கொண்டிருப்பார்கள். வாழ்க்கையை ஏகாந்தமாக அனுபவிக்க ஆசையிருக்கும். தூரதேச ஆன்மீகப் பயணங்கள் சென்றவண்ணமிருப்பார்கள். இவர்கள் இறையுணர்விலும் பக்தி சிந்தனையிலும் மூழ்கியிருந்து வெற்றி மேல் வெற்றிகள் பெறலாம். போலியான வாக்குறுதிகள் மூலம் பலரைக் கவருவார்கள்.

இல்லாத ஒன்றை இருப்பதுபோலக் காட்டி மற்றவர்களையும் நம்பச் செய்வார்கள். ஆன்மீகம், இல்லறம் என்று வாழ்க்கை இரு புறமும் இழுக்கும். கூட்டு வழிபாட்டு முறைகளைச் செவ்வனே செய்வார்கள். யோகம், தியானம், மந்திரங்கள் சித்தியாகும். காடுகள், மலைகளில் சென்று தவமியற்றுவார்கள். பிடிவாத குணமுடையவர்கள். பெரிய மனிதர்களை மதிக்கும் சுபாவமிருக்கும். ஏதோ ஒரு ஏக்கத்திலேயே எப்போதும் இருப்பார்கள். பலரைத் தன்னுடைய தெய்வீக முறைகளைக் கடைப்பிடிக்கச் சொல்லி வற்புறுத்துவார்கள். உலகத்தில் நடக்கும் அக்கிரமங்களைப் பார்த்து மன முடைந்து போவார்கள். ஆண், பெண் இருபாலாருக்கும் அடிக்கடி இடையூறுகள் வந்து நீங்கும். உள்ளத்தில் ஆன்மீக ஒளி குடிகொண்டிருக்கும். நல்ல நண்பர்கள் சிலரால் வாழ்க்கையில் தன்னம்பிக்கையும், தைரியமும் கிடைக்கப் பெற்று வாழ்க்கையை உற்சாகத்துடன் நடத்துவார்கள்.

உலகப் புகழ் பெறும் ஆசையிருக்கும். தொண்டு நிறுவனங்கள் நடத்த ஆர்வம் இருக்கும். அனைவருக்கும் மனதார விருந்தளிக்கும் உயர்ந்த குணமுடையவர்கள். செய்வதறியாது சில தவறுகள் செய்துவிட்டுப் பின்னர் மனம் வருந்துவார்கள். இவர்களின் இறைநம்பிக்கை என்றென்றும் இவர்களுக்குக் கைகொடுக்கும்.

அதிர்ஷ்டக் குறிப்புகளை முறையாகக் கையாண்டு வந்தால் அதிர்ஷ்டமான வாழ்க்கை நிச்சயம் சித்திக்கும்.

அதிர்ஷ்ட திகதிகள்
3,12,21,30,1,10,19,28,5,14,23

துரதிர்ஷ்ட திகதிகள்
6,15,24,8,17,26,

அதிர்ஷ்ட நிறங்கள்
வெளிர்நீலம், மஞ்சள், ரோஸ், ஒரேஞ், கத்தரிப்பூ நிறம், வெள்ளை.

துரதிர்ஷ்ட நிறங்கள்
கறுப்பு, பச்சை, சிவப்பு, இருண்ட நிறங்கள்.

அதிர்ஷ்ட இரத்தினங்கள்
கனகபுஷ்பராகம், மஞ்சள் புஷ்பராகம், தங்க புஷ்பராகம், எமிதிஸ்ட், நீலக்கல், இந்திர நீலம், அக்கோமரின்.


(தொடரும்....)

# இலங்கையில் தமிழர்

## ஒரு முழுமையான வரலாறு (கி.மு.300- கி.பி.2000)

76

கலாநிதி மு.குணசிங்கம்



சிதம்பரம் ஆலயம்

“போர்த்துக்கீசர் உணவிற்கு சைவ மதத்தின் தெய்வீகப் பிராணி எனக் கருதப்பட்ட பசுவைக் கொன்று, வீட்டுக்கு ஒன்று என்ற வீதத்தில் வழுங்க வேண்டும் என்ற போர்த்துக்கீசத் தளபதியின் கட்டளையை ஞானப்பிரகாசர் என்ற சைவத்தமிழர் வெளிப்படையாக மீறி யாழ்ப்பாணத்தை விட்டு இரவோடு இரவாகத் தமிழகம் சேர்ந்து, அங்கு சில காலம் இருந்து சிதம்பரத்தில் சைவக் கோவிலும், ஒரு மடமும் அதனருகே ஒரு கேணியும் கட்டிவிட்டு, காசியிற் போய் மரணித்தார்”

## போர்த்துக்கீசர் ஆக்கிரமிப்பும் தமிழர் பிரதேசங்களின் அழிவும் (கி.பி. 1505-கி.பி. 1658)

தமிழ்ப் பிரதேசங்களில் கத்தோலிக்க மதப்பரம்பலுக்கு மேற்படி உடன்படிக்கை தமிழ் மக்களின் மதமான சைவத்தின் கதவுகளை முழுமையாகத் திறந்துவிட்டது என்றே கொள்ள வேண்டும். மேலும் இப்போர் நடவடிக்கையின்போது போர்த்துக்கீசப் போர்வீரர்கள் தமது பிரதான உணவாகச் சைவ மக்கள் புனிதமாகக் கருதும் பசுக்களைக் கொன்றது சைவர்களை உலுக்கிய சம்பவமாகவும் இதுவரை அறிந்திராத நிகழ்வாகவும் இருந்தது.

அத்தோடு சைவக்கோவில்களிலிருந்த விலைமதிப்பற்ற பொருட்கள் சூறையாடப்பட்டு, அங்குள்ள ஆவணங்கள், ஏனைய யாவும் தீக்கிரையாக்கப்பட்டு பல நூற்றுக்கணக்கான சைவக் கோவில்கள் எரித்துச் சாம்பலாக்கப்பட்டன.

மேற்கூறப்பட்ட சம்பவம் தொடர்பாக பின்வரும் குறிப்பு மிக முக்கியமான ஆதாரமாக அமைகின்றது.

“அரசன் இல்லாத வேளையில், போர்த்துக்கீசரும் அவர்களின் வாலிபர்களும், மாலுமிகளும் மக்களின் பொருட்களை அபகரித்தும், அவர்களுடைய பசுக்களைக் கொன்று அந்த மாமிசத்தில் புதிய கறிகளை ஆக்கியும் மக்களு டைய வீடுகளுக்குள் நுழைந்து மனைவிமார்களையும் புதல்விகளையும் மனப்பாங்கப்படுத்தியும் குற்றச் செயல்கள் புரிந்தார்கள் என்பதனால் மக்கள் புரட்சி செய்தனர் என மக்கள் ஓலைச் சுவடியில் தமது அரசனுக்கு எழுதினார்கள். இச் செயல்களுக்காக அவர்கள் கண்டிக்கப்படவோ, தண்டிக்கப்படவோ இல்லை.”

ஆத்திரமடைந்த சைவமக்கள் பல போர்த்துக்கீச போர்வீரர்களைக் கொன்றனர். போர்த்துக்கீச பாதிரி டொம் ஜோர்ஜ் த ரெமுடே (Dom.Jorge de Temudo) என்பவரும் கொல்லப்பட்டார். நல்லூர்க் கோவிலை இடித்தவர்களையும் கொன்றனர்.

இக்குறுகியகாலச் சண்டையின் போது கட்டாயத்தின் பேரில் கத்தோலிக்க மதத்துக்கு மாறிய தமிழர்கள் 300க்கு அதிகமானவர்களும் கொல்லப்பட்டனர். இந் நிகழ்வு யாழ்ப்பாண மண்ணில் இதுவரை காலமும் ஏற்பட்டிராத ஒரு பாரிய நிகழ்வாகும்.

தமிழ்ப் பிரதேசத்தின் அழிவின் ஆரம்பம் இங்குதான் முதன்முதலில் தொடங்கியிருக்கின்றது. இந்த அழிவுக்கு காரணியாக இருந்தவர்கள் அந்நியரான போர்த்துக்கீசர்களாகும் என்பதனைத் தமிழ்த்தேசம் என்றும் மறந்து விடாது என்பதை எவராலும் மறுக்கமுடியாது.

பிரகன்சா யாழ்ப்பாணத்தில் ஒரு கத்தோலிக்கக் கோவிலைக் கட்டிவிட்டுத் தனது பார்வையை மன்னார்ப் பக்கம் திரும்பினான். யாழ்ப்பாணத் தேசத்தைத் தம்வசமாக்க மன்னார் ஒரு கேந்திர ஸ்தானமாகப் போர்த்துக்கீசத் தளபதி த பிரகன்சாவுக்குத் தோன்றியது. மேலும் பல்வேறு வகைகளில் மன்னாரின் முக்கியத்துவத்தையும் போர்த்துக்கீசர் அறிந்திருந்தனர். யாழ்ப்பாணத்தில் ஏற்பட்ட உடன்படிக்கையைத் தொடர்ந்து மன்னாரிலுள்ள கத்தோலிக்கர்களைப் பாதுகாக்கவும், தமது நலன்களைப் பேணவும் பிரகன்சா முதன்முதலாக ஒரு கோட்டையை 1561 இல் கட்டினான்.

அங்கு தனது படையினரில் ஒரு பகுதியை அமர்த்திவிட்டுக் கொச்சினை நோக்கிப்புறப்பட்டான். மேற்படி நிகழ்வு, போர்த்துக்கீசரின் நிலையான இருக்கையைத் தமிழ்ப் பிரதேசத்தில் உறுதிப்படுத்திய நடவடிக்கையாகவும், கத்தோலிக்க மதம் அரச பாதுகாப்புடன் தமிழர் தேசங்களில் பரவப்போகின்றது என்பதனையும் தெளிவாக எடுத்துக் காட்டும் நிகழ்வாகவும் அமைகின்றது.

அதுமட்டுமல்லாது, போர்த்துக்கீசரின் எதிர்கால நடவடிக்கைகளுக்கு மன்னாரிலுள்ள கத்தோலிக்கர்கள் மிக வலுவான சக்தியாக இருப்பார்கள் என்பதையும் சுட்டிக் காட்டி நிற்கின்றது. எல்லாவற்றிற்கும் மேலாக, தமிழர்களின் புராதன சைவக் கோவிலாகிய திருக்கேதீஸ்வரம் இக் காலகட்டத்திலேயே போர்த்துக்கீசரினால் இடித்து அழிக்கப்பட்டதாகவும் அறிய முடிகிறது.

யாழ்ப்பாண மன்னன் முதலாவது சங்கிலி போர்த்துக்கீசரையும், அவர்கள் மதத்தையும் தமிழ்ப் பிரதேசத்தில் நிலைகொள்ளாமல் தடுத்து நிறுத்துவதற்கு தன்னால் ஆன முயற்சிகளை எல்லாம் மனவுறுதியோடு செய்தான்.

ஆனால் அவனுடைய மரணத்திற்குப் பின்னர் சங்கிலிபோல் துணிவும், தேசப்பற்றும், மதப்பற்றுமுள்ள மன்னன் போர்த்துக்கீசர் ஆட்சிக்காலத்தில் தமிழ்த் தேசத்திற்குக் கிடைக்காமற் போய்விட்டதைக் காணமுடிகிறது.

1560களில் நடைபெற்ற போரின் பின்னர் ஏற்பட்ட உடன்படிக்கையின்படி யாழ்ப்பாணப் பிரதேசத்திலும் தீவுப் பகுதிகளிலும் மன்னாரிலும் ஏனைய தமிழ்ப் பிரதேசங்களிலும் கத்தோலிக்க மதம் எவ்விதத் தடையுமின்றி மிசனரிமாரால் பரப்பப்பட்டது.

போர்த்துக்கீசர்களுக்கு ஆதரவு நல்க மறுத்த காசி நயினார் போன்ற மன்னார்கள் கொலை செய்யப்பட்டார்கள். பெரிய புள்ளை போன்ற கைப்பொம்மை மன்னர்கள் (1570-1581) போர்த்துக்கீசர், தமது மத நடவடிக்கைகளுக்கு நன்றாகப் பயன்படுத்தினர்.

பல மேல்மட்டத்திலுள்ள முதலிமார்களும், யாழ்ப்பாண அரசுக்கு எதிரானவர்களும் கிறிஸ்தவ மதத்திற்கு மாறினர். தமிழர்கள் கட்டாயத்தின் பேரிலும், விரும்பியும் கத்தோலிக்க மதத்தைத் தழுவுகின்ற நிகழ்ச்சிகள் நாளுக்கு நாள் அதிகரித்தது.

பாதிரிமார்களினதும், போர்த்துக்கீசப் போர்வீரர்களினதும், கிறிஸ்தவ மிசனரிமார்களினதும் தொடர்ச்சியான அச்சுறுத்தல்களுக்கும் கடுமையான சட்ட திட்டங்களுக்கும் ஆளான தமிழ் மக்கள் தாங்கொணாத் துயரை அனுபவித்தனர்.

கத்தோலிக்க மதத்திற்கு மாற மறுத்தவர்கள் தண்டிக்கப்பட்டார்கள். பலர் சிறையில் அடைக்கப்பட்டனர். கத்தோலிக்க மதத்திற்கு மாற விரும்பாதவர்களும், கத்தோலிக்க மத முறையின்படி மரணமான பின் மண்ணிற் புதைக்கப்படும் வழக்கத்தை ஏற்றுக் கொள்ள முடியாத சைவ மக்களுமாக எண்ணிக்கையில் பலர் யாழ்ப்பாண மண்ணைவிட்டு நிரந்தரமாக வன்னிப் பெருநிலப் பரப்புக்கும், தென்னிந்தியாவுக்கும் ஓடித் தப்பினர். உதாரணமாக,

“போர்த்துக்கீசர் உணவிற்கு சைவ மதத்தின் தெய்வீகப் பிராணி எனக் கருதப்பட்ட பசுவைக் கொன்று, வீட்டுக்கு ஒன்று என்ற வீதத்தில் வழங்க வேண்டும் என்ற போர்த்துக்கீசத் தளபதியின் கட்டளையை ஞானப்பிரகாசர் என்ற சைவத்தமிழர் வெளிப்படையாக மீறி யாழ்ப்பாணத்தை விட்டு இரவோடு இரவாகத் தமிழகம் சேர்ந்து, அங்கு சில காலம் இருந்து சிதம்பரத்தில் சைவக் கோவிலும், ஒரு மடமும் அதனருகே ஒரு கேணியும் கட்டிவிட்டு, காசியிற் போய் மரணித்தார்.”

அடுத்த முக்கிய நிகழ்வாக இடம்பெறுவது போர்த்துக்கீசக் கைப்பொம்மை அரசனாகிய பெரிய புள்ளையைத் தொடர்ந்து 1582 சங்கிலியின் மகன் புவிராச பண்டாரம் யாழ்ப்பாண மன்னனாகப் பதவியேற்றமையாகும்.

இவன், கத்தோலிக்கமத நடவடிக்கைகளை எதிர்க்காதவனாகவும், சைவத்தை விட்டுக் கொடுக்காதவனாகவும், போர்த்துக்கீசரை எவ்வாறாயினும் மண்ணிலிருந்து அகற்ற வேண்டும் என்று, போர்த்துக்கீச எதிர்ப்பாளர்களுடன் இணைந்து செயற்பட்ட ஒரு மன்னனாகக் காணப்பட்டான்.

(தொடரும்)

## எல்லைதாண்டி மீன்பிடித்த 16 இந்திய மீனவர்கள் சிறைபிடிப்பு



(அகமதாபாத்)

பாகிஸ்தான் கடலோர பாதுகாப்பு படையினர் எல்லை தாண்டி மீன்பிடித்ததாக கூறி இந்திய மீனவர்கள் 16 பேரை சிறைபிடித்தனர்.

குஜராத் மாநிலம் தேவ் பூமி துவாரகா மாவட்டத்தில் இருந்து 2 படகுகளில் 16 மீனவர்கள் அரபிக் கடலில் மீன்பிடிக்க சென்றனர். அவர்கள் சர்வதேச கடல் எல்லையில் மீன் பிடித்து கொண்டிருந்தனர்.

அப்போது அங்கு வந்த பாகிஸ்தான் கடலோர பாதுகாப்புப் படையினர் எல்லை தாண்டி மீன்பிடித்ததாக கூறி அவர்களை சிறைபிடித்தனர். அவர்களின் படகுகளையும் பறிமுதல் செய்தனர். (7)

# நீதிமன்ற அவமதிப்பு வழக்கு; மன்னிப்புக் கேட்டார் எச்.ராஜா

(சென்னை)

பா.ஜ.க.வின் தேசிய செயலாளர் எச்.ராஜா மன்னிப்பு கேட்டதையடுத்து, அவருக்கு எதிரான நீதிமன்ற அவமதிப்பு வழக்கு முடித்து வைக்கப்பட்டுள்ளது.

அவருக்கு எதிராக நீதிமன்றம் தானாக முன்வந்து தொடர்ந்த வழக்கு, நேற்று திங்கட்கிழமை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது எச்.ராஜா நீதிமன்றிடம் மன்னிப்பு கோரியதால், இந்த வழக்கு முடித்து வைக்கப்பட்டுள்ளது.

புதுக்கோட்டை மாவட்டம் திருமய்யத்தில் இடம்பெற்ற விநாயகர் சதுர்த்தி விழாவில், மேடையமைத்து பேசுவதற்கு அனுமதி மறுக்கப்பட்டதால் பொலிஸார் மற்றும் எச்.ராஜா இடையே வாக்கு வாதம் ஏற்பட்டது.

அப்போது எச்.ராஜா நீதிமன்றம் மற்றும் பொலிஸார் குறித்து தரக்குறைவான வார்த்தைகளால் விமர்சனம் செய்தது காணொளி மூலம் சமூக வலைத்தளங்களில் பரவியது.

இதையடுத்து, செப்டெம்பர் 17 ஆம் திகதி, நீதிமன்றம் தானாக முன்வந்து, அவர் மீது நீதிமன்ற அவமதிப்பு வழக்கு தொடர்ந்தது.

இந்நிலையில், ஒக்டோபர் 22 ஆம் திகதிக்குள் இது தொடர்பாக விளக்கமளிக்க எச்.ராஜாவிற்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது.

இத்தகைய நிலையில், நேற்று இடம்பெற்ற வழக்கில் ஆஜராகிய எச்.ராஜா, அவரது சட்டத்தரணி ஊடாக நீதிமன்றில் மனு ஒன்றை தாக்கல் செய்தார்.

அதில் மேடையமைத்து பேசுவதற்கு அனுமதி வழங்கப்படாததால், கோபமடைந்து வார்த்தைகளை கொட்டிவிட்டதாகவும்,

பின்னர் காணொளியை பார்த்த போதே தான் செய்த தவறை உணர்ந்ததாகவும் கூறிய அவர், தனது தவறுக்கு எல்லையற்ற மன்னிப்பு கோருவதாக மனுவில் குறிப்பிட்டிருந்தார்.

இதனால் எச்.ராஜாவிற்கு மன்னிப்பளித்து, நீதிமன்றம் குறித்த வழக்கை முடித்து வைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (7)

## மெக்ஸிகோவில் மரணத்தின் தினம் அனுஷ்டிப்பு

(மெக்ஸிகோ சிட்டி)

மெக்ஸிகோவில் அனுஷ்டிக்கப்பட்ட மரணத்தின் தினத்தை (Day of the Dead) முன்னிட்டு நூற்றுக் கணக்கான மக்கள் முகத்தில் நிறப் பூச்சுகளை இட்டு, விநோதமான உடைகளை அணிந்து பேரணியாக சென்றுள்ளனர்.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மெக்ஸிகோ எலும்புக்கூட்டு அடையாளங்களான "லா கெட்ரினா" அல்லது "எலிகன்ட் ஸ்கல்" ஆகியவற்றை பிரதிபலிக்கும் வகையில் மாறு வேடம் அணிந்து சென்றனர்.

குடும்பங்கள் தங்கள் இறந்தவர்களை நினைவில் வைத்து இந்த நிகழ்வில் ஈடுபடுவதுடன், வாழ்வின் தொடர்ச்சியை கொண்டாடும் ஒரு பாரம்பரிய நிகழ்வாகவும் கருதப்படுகிறது. (7)

## சீனாவில் பிறந்த விநோதமான ஆபிரிக்க காட்டுப் பூனைக்குட்டிகள்



(பீஜிங்)

சிறுத்தை போன்ற கம்பீரத் தோற்றமுடைய மூன்று ஆபிரிக்க காட்டுப்பூனைக் குட்டிகள் சீனாவின் ஷாங்காய் விலங்கினகாட்சிச் சாலையில் பிறந்துள்ளன. அவை அண்மையில் பொது மக்களுக்கு அறிமுகம் செய்து வைக்கப்பட்டுள்ளன.

குறித்த ஆபிரிக்க புதர் பூனைக்குட்டிகள் பார்ப்பதற்கு சிறுத்தைப் புலி போன்றே காட்சியளிப்பதுடன், அதன் நீண்ட காதுகள் மற்றும் பெரிய காதுகள் கம்பீரமான தோற்றத்தை அளிக்கின்றன.

இந்த புதிய அறிமுகம் தொடர்பாக அங்கு வந்த சுற்றுலாப் பயணிகள் மிகவும் ஆச்சரியத்துடன் பார்வையிட்டுச் சென்றனர்.

இதுபற்றி விலங்கினக் காட்சிச்சாலைக்கு வந்த சுற்றுலாப் பயணி ஒருவர் கூறுகையில், இந்த புதிய வகை புதர் பூனைகளை பார்த்த போது நான் மிகவும் ஆச்சரியமடைந்தேன், இதற்கு முன்னர் இப்படியொரு உயிரினத்தை நான் பார்த்ததில்லை என்று" அவர் கூறினார்.

ஷாங்காய் விலங்கின காட்சிச்சாலை பராமரிப்பாளர்கள் குட்டிகள் தொடர்பாக கூடிய கவனம் செலுததி வருகின்றனர். இதன் பொருட்டு மரமேறிச் செல்வதற்கான சட்டங்கள் மற்றும் மரத்திலான தகடுகள் என்பன பொருத்தப்பட்டுள்ளன.

அத்துடன், வெளிப்புற கண்காட்சிப் பகுதிகள் குழந்தைகள் எதிர்பாராத விதமாக இடைவெளிகளில் தவறி வீழ்வதை தடுக்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, புதிதாக பிறந்த குட்டிகளுக்கு விற்றமின்கள், கல்சியம் வில்லைகள் மற்றும் ஏனைய ஊட்டச்சத்துள்ள உணவுகளை நாளாந்தம் கிரமமாக வழங்கி வருவதாக பராமரிப்பாளர் ஒருவர் தெரிவித்தார். (7)

## நிலக்கரி சுரங்கம் இடிந்தது; 2 பேர் பலி; 18 பேர் சிக்கித்தவிப்பு



(பீஜிங்)

சீனாவில் நிலக்கரி சுரங்கம் இடிந்து விழுந்ததில், இடிபாடுகளில் சிக்கி 2 தொழிலாளர்கள் உயிரிழந்தனர். தொடர்ந்து மீட்புப் பணி நடைபெறுகிறது.

சீனாவின் யுன்செங் கவுண்டியில் லாங்யுன் நிலக்கரி சுரங்கம் உள்ளது. இங்கு கடந்த வியாழக்கிழமை இரவு ஷிப்டில் 334 தொழிலாளர்கள் வேலை செய்துகொண்டிருந்தனர்.

அப்போது தண்ணீர் வடிகால் சுரங்கத்தில் திடீரென வெடிப்பு ஏற்பட்டது. விபத்து ஏற்பட்டதும் சுரங்கத்தினுள் வேலை செய்துகொண்டிருந்த தொழிலாளர்கள் அவசரம் அவசரமாக வெளியேற்றப்பட்டனர்.

சுரங்கம் இடிந்து விழுந்த பகுதியில் 22 பேர் சிக்கிக் கொண்டனர். அவர்களை மீட்கும் பணி முடுக்கி விடப்பட்டது.

மீட்புக்குழுவைச் சேர்ந்த 170 பேர் மீட்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டனர்.

2 தொழிலாளர்கள் பலியானதுடன் மேலும் இருவர் உயிருடன் மீட்கப்பட்டனர். பலத்த காயமடைந்திருந்த அவர்கள் வைத்திய சாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். மீதமுள்ள 18 பேரை மீட்கும் முயற்சி தொடர்ந்து நடைபெறுகிறது. அவர்களின் நிலை என்ன? என்பதும் தெரியவில்லை. இந்த விபத்து குறித்து விசாரணை நடைபெற்று வருகிறது.

கடந்த ஒகஸ்ட் மாதம் தெற்கு சீனாவில் ஏற்பட்ட சுரங்க வெடிவிபத்தில் 12 பேர் உயிரிழந்தது குறிப்பிடத்தக்கது. (7)

## துருக்கியில் கொல்லப்பட்ட ஊடகவியலாளரின் உடல் எங்கிருக்கிறது என்று தெரியாது

### சவுதி அரேபியா கைவிரிப்பு

(ரியாத்)

துருக்கியில் கொல்லப்பட்ட ஊடகவியலாளர் உடல் எங்கிருக்கிறது என்று தெரியாது என சவுதி அரேபியா கூறியுள்ளது.

துருக்கி நாட்டில் ஊடகவியலாளராக இருந்தவர் ஜமால் கஷோக்கி. இவர் சவுதி அரேபியா நாட்டில் மன்னராட்சி நடைபெறுவதை கடுமையாக விமர்சித்து அடிக்கடி கட்டுரைகள் எழுதி வந்தார்.

இந்த நிலையில் கடந்த 2ஆம்திகதி துருக்கி இஸ்தான்புல்லில் உள்ள சவுதி அரேபிய தூதரகத்திற்கு சென்றார். அதன்பிறகு அவரை காணவில்லை.

அவருடைய கதி என்ன ஆனது என்று தெரியாமல் இருந்தது. அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகள் அவரை பற்றிய விபரங்களை கேட்டு வந்தன.

அவரை சவுதி அரேபியா இளவரசர் தான் திட்டமிட்டு கொன்றுவிட்டதாக புகார் கூறப்பட்டது. இதை சவுதி அரேபியா மறுத்து வந்தது. அவர் இறந்ததை உறுதிப்படுத்தவும் இல்லை.

இப்போது ஜமால் கஷோக்கி. இறந்துவிட்டதாக சவுதி அரேபியா கூறியுள்ளது. யாரோ தூண்டி விட்டதால் கூலிப் படையினர் அவரை கொன்றதாக சவுதி அரேபியா கூறியிருக்கிறது. ஆனால் இந்த கொலைக்கும், தங்களுக்கும் சம்பந்தம் இல்லை எனக் கூறியது.

ஜமால் கஷோக்கி கொலை செய்யப்பட்டதை உறுதி செய்தாலும் அவரது உடல் எங்கு இருக்கிறது என்ற விபரத்தை சவுதி அரேபியா சொல்லவில்லை. அவர் கொலை செய்யப்பட்டதைத் தான் நாங்கள் கண்டுபிடித்துள்ளோம். அவரது உடல் எங்கு இருக்கிறது என்று தெரியாது என்று சவுதி அரேபியா கூறியுள்ளது.

இது சம்பந்தமாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் கூறும்போது, சவுதி அரேபியா இந்த விடயத்தில் பொய் சொல்கிறது. உண்மையை மறைக்கப் பார்க்கிறார்கள் என்று தெரிவித்துள்ளார். (7)

# தாய்வானில் புகையிரதம் தடம்புரள்வு 22 பேர் பலி; 170 பேர் படுகாயம்



(பாங்கொக்)

தாய்வான் நாட்டின் இலான் பகுதியில் எக்ஸ்பிரஸ் ரயில் தடம் புரண்டு விபத்துக்குள்ளானதில் 22 பேர் உயிரிழந்ததுடன் 170 பேர் படுகாயமடைந் துள்ளதாக அந்நாட்டு செய்திகள் தெரி வித்துள்ளன.

தாய்வானின் தாய்பேய் நகரிலிருந்து டைட்டுங் நகரை நோக்கி பயணித்த எக்ஸ்பிரஸ் ரயிலே நேற்று மாலை சுமார் 5 மணியளவில் க்சின்மா ரயில் நிலையத்தின் அருகேயுள்ள டுங்ஷான் பகுதியை நெருங்கியபோது தண்டவாளத்திலிருந்து விலகி தடம்புரண்டு விபத்துக்குள்ளாகியுள்ளது.

குறித்த ரயிலின் முன் பகுதியில் இருந்த 8 பெட்டிகள் முற்றிலுமாக சரிந்து விழுந்த நிலையில் இருந்தன.

360 இற்கும் அதிகமான பயணிகளை ஏற்றி வந்த அந்த ரயில் விபத்துக்குள்ளானதில் 22 பேர் உயிரிழந்ததுடன் 170 பேர் படுகாயமடைந்த நிலையில் சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (7)

# நைஜீரியாவில் இரு மதத்தினர் மோதல்

# 60 பேர் உயிரிழப்பு; 22 பேர் கைது

## ஊரடங்கு உத்தரவு பிறப்பிப்பு

(அபுஜா)

நைஜீரியாவில் இரு தரப்பு மத ஆதரவாளர்கள் இடையே ஏற்பட்ட மோதலில் 60 பேர் பலியாகினர்.

நைஜீரியா நாட்டின் வட பகுதியில் உள்ள கடுனா மாகாணத்தில் கசுவான் மாகாணி நகரில் ஒரு சந்தை உள்ளது. இந்த சந்தையில் இரு வெவ்வேறு மதங்களை சேர்ந்த சுமை தூக்குகிறவர்கள் இடையே பிரச்சினை இருந்து வந்ததாக கூறப்படுகிறது.

இந்த பிரச்சினை தொடர்பாக, இரு தரப்பு மத ஆதரவாளர்கள் இடையே கடும் மோதல் ஏற்பட்டது. இந்த மோதலில் 60 பேர் பலியாகினர்.

இந்த மோதல் தொடர்பாக 22 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்என மாகாண பொலிஸ் ஆணையாளர் தெரிவித்தார். மேலும் அந்த நகரத்தில் ஊரடங்கு உத்தரவும் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இந்த மத மோதல்கள் குறித்து அந்த நாட்டின் ஜனாதிபதி முகமது புகாரி கவலை தெரிவித்துள்ளார்.

இதுபற்றி அவர் தெரிவிக்கையில்,


எந்த மதமும் அல்லது கலாசாரமும் வன்முறையை ஆதரிப்பது இல்லை. சமூகத்தின் முன்னேற்றத்துக்கு அமைதியும், நல்லிணக்க மும் நிலவுவது அவசியம் என்று தெரிவித்தார்.

மேலும், "வெவ்வேறு மத நம்பிக்கை உள்ள மக்களிடம் நல்லிணக்கம் இல்லாத வரையில், நமது அன்றாட பணிகளை நாம் செய்து முடிப்பது சாத்தியம் இல்லாமல் போய் விடும்.

இந்தப் பிரச்சினையில், மதத்தலைவர்கள் சகிப்புத் தன்மையை ஊக்குவிக்க வேண்டும். வேற்றுமையை முடிவுக்கு கொண்டு வர வேண்டும் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (7)



## சவுதிக் கூட்டுப்படைகள் தாக்குதல்
## 46 கிளர்ச்சியாளர்கள் கொன்றுகுவிப்பு



(சனா)

ஏமன் நாட்டில் ஹவுதி கிளர்ச்சியாளர்களை குறிவைத்து, சவுதி அரேபிய கூட்டுப்படைகள் நடத்திய வான்வெளி தாக்குதலில் 46 பேர் கொன்று குவிக்கப்பட்டனர்.

ஏமன் நாட்டில் கடந்த 2015ஆம் ஆண்டு முதல் ஜனாதிபதி மன்சூர் ஹாதி படைகளுக்கும், ஹவுதி கிளர்ச்சியாளர்களுக்கும் இடையே போர் நடந்து வருகிறது.

இதில் ஹவுதி கிளர்ச்சியாளர்களை ஈரான் ஆதரிக்கிறது. அதே நேரத்தில் ஜனாதிபதி ஆதரவு படைகளுக்கு ஆதரவாக சவுதி கூட்டுப் படைகள் களம் இறங்கி தாக்குதல் நடத்தி வருகின்றன.

இது ஹவுதி கிளர்ச்சியாளர்களுக்கு சவுதி அரேபியா மீது தீராப்பகையை உண்டாக்கியுள்ளது. இதனால் அண்மைக்காலமாக சவுதி அரேபியா நகரங்களை குறி வைத்து ஹவுதி கிளர்ச்சியாளர்கள் ஏவுகணைகளை வீசி தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

இந்நிலையில் நேற்று முன்தினம் ஹவுதி கிளர்ச்சியாளர்களை குறிவைத்து, சவுதி அரேபிய கூட்டுப்படைகள் நடத்திய வான்வெளி தாக்குதல்களில் ஹவுதி கிளர்ச்சியாளர்கள் 46 பேர் கொன்று குவிக்கப்பட்டனர். (7)

## சவுதி ஊடகவியலாளர் படுகொலை

## விரிவான விசாரணை நடத்தக்கோரும் இங்கிலாந்து, பிரான்ஸ், ஜேர்மன்

(லண்டன்)

ஊடகவியலாளர் ஜமால் கஷோக்கி படுகொலை தொடர்பாக விரிவான விசாரணை நடத்தப்பட வேண்டும் என இங்கிலாந்து, பிரான்ஸ், ஜேர்மன் உள்ளிட்ட நாடுகள் கோரிக்கை விடுத்துள்ளன.





சவுதி மன்னர் சல்மானின் முடியாட்சியை பற்றி கடுமையாக விமர்சித்து வந்தவர், அந்த நாட்டின் ஊடகவியலாளர் ஜமால் கஷோக்கி (59). அண்மையில் இஸ்தான்புல் நகரில் உள்ள சவுதி அரேபிய துணைத் தூதரகத்துக்கு கடந்த 2ஆம் திகதி சென்ற அவர் மாயமானார்.

அவர் அந்த தூதரகத்துக்குள் வைத்து சவுதி அரேபிய முகவர்களால் கொல்லப்பட்டு விட்டார் என்று பலதரப்பிலும் குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

ஆனால் இந்தக் குற்றச்சாட்டை இதுவரை சவுதி அரேபியா மறுத்து வந்தது.

ஊடகவியலாளர் ஜமால் கஷோக்கி மாயமானது தொடர்பாக மன்னர் சல்மான் விசாரணைக்கு உத்தரவிட்டார். சவுதி அரேபிய அதிகாரிகளின் அனுமதி பெற்று, துருக்கி பொலிஸ் அதிகாரிகள் இஸ்தான்புல் துணைத் தூதரகம் சென்று விசாரித்தனர்.

இதற்கிடையே, இஸ்தான்புல்லில் உள்ள சவுதி அரேபிய துணைத் தூதரகத்தில் ஜமால் கஷோக்கி கொல்லப்பட்டார் என சவுதி அரேபியா உறுதி செய்தது. இதற்கு அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் கடும் கண்டனத்தை தெரிவித்துள்ளன.

இந்நிலையில், சவுதி ஊடகவியலாளர் ஜமால் கஷோக்கி படுகொலை தொடர்பாக விரிவான விசாரணை நடத்தப்பட வேண்டும் என இங்கிலாந்து, பிரான்ஸ் மற்றும் ஜேர்மன் உள்ளிட்ட நாடுகள் கோரிக்கை விடுத்துள்ளன. (7)

## வன்முறைக்கு இடையே தேர்தலில் வாக்களித்த ஆப்கானிஸ்தானியர்களுக்கு இந்தியா பாராட்டு

(டில்லி)

வன்முறைக்கு இடையே நடைபெற்ற தேர்தலில் வாக்குச்சாவடிக்கு வந்து வாக்களித்த ஆப்கானிஸ்தானியர்களுக்கு இந்தியா பாராட்டுகளை தெரிவித்துள்ளது.



ஆப்கானிஸ்தானில் தலிபான்கள் அரசுக்கு எதிராக தொடர்ந்து வன்முறையில் ஈடுபட்டு வருகின்றனர். அங்கு தற்போது பாராளுமன்ற தேர்தல் நடந்து வரும் நிலையில், அதற்கு எதிர்ப்பு தெரிவித்து பல்வேறு தாக்குதல்களை தொடர்ந்து நடத்தி வருகின்றனர்.

இந்நிலையில், வன்முறைக்கு இடையே நடந்த தேர்தலில் வாக்குச்சாவடியில் வாக்களித்த ஆப்கானிஸ்தானியர்களுக்கு இந்தியா பாராட்டுகளை தெரிவித்துள்ளது. (7)

## ஜெருசலேம் ஆளுநர் அத்னன் காயித் இஸ்ரேல் பொலிஸாரால் அதிரடி கைது

(ஜெருசலேம்)

ஜெருசலேம் ஆளுநர் அத்னன் காயித்தை இஸ்ரேல் பொலிஸ் படையினர் அதிரடியாக கைது செய்தனர்.

ஜெருசலேம் ஆளுநராக அத்னன் காயித் இருந்து வந்தார். கடந்த சனிக்கிழமை பெயித் ஹனினா நகரில் இருந்து ஆக்கிரமிப்பு ஜெருசலேமின் வடபகுதிக்கு காரில்சென்று கொண்டிருந்தார்.

அப்போது அவரது காரை இஸ்ரேல் பொலிஸ் படையினர் 3 கார்களில் சென்று வழி மறித்தனர். அதைத் தொடர்ந்து ஆளுநர் அத்னன் காயித்தை பொலிஸ் படையினர் அதிரடியாக கைது செய்தனர்.

அவரை ரகசிய இடத்துக்கு அவர்கள் கொண்டு சென்றனர். அத்னன் காயித் கைது செய்யப்பட்டதன் பின்னணி என்ன என்பது குறித்து எந்த தகவலும் இல்லை.

முன்னதாக ஜெருசலேமில் பாலஸ்தீன உளவுத்துறை தலைவர் ஜிகாத் அல் பாகிஹ், தனது பணிக்கு சென்று கொண்டிருந்தபோது, அல் ஜ"தெய்ரா கிராமத்தில் கைது செய்யப்பட்டார். அவர் ஜெருசலேமுக்கு விசாரணைக்காக கொண்டு செல்லப்பட்டார். இவர் எதற்காக கைது செய்யப்பட்டார் என்பதுவும் அறிவிக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (7)

## பாகிஸ்தானில் கோரவிபத்து
## 20 பேர் உயிரிழப்பு

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானின் தேரா காஜி கான் நகரில் இரு பேருந்துகள் மோதிய விபத்தில் 20 பேர் பரிதாபமாக பலியாகினர்.




பாகிஸ்தான் நாட்டின் தேரா காஜிகான் நகரில் சென்று கொண்டிருந்த இரு பேருந்துகள் திடீரென மோதிக் கொண்டன. இந்த விபத்தில் சம்பவ இடத்திலேயே உடல் நசுங்கி 16 பேர் பரிதாபமாக இறந்தனர். மேலும் 40க்கு மேற்பட்டோர் படுகாயம் அடைந்தனர்.


தகவலறிந்து அங்கு சென்ற மீட்புப் படையினர் காயம் அடைந்தவர்களை மீட்டு அருகிலுள்ள வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்தனர். அங்கு சிகிச்சை பலனின்றி மேலும் 4 பேர் இறந்தனர். இதையடுத்து, விபத்தில் இறந்தவர்களின் எண்ணிக்கை 20 ஆக அதிகரித்துள்ளது.

பேருந்துகள் மோதிய விபத்தில் 20 பேர் பலியானது குறித்து அறிந்த பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கான் மற்றும் ஜனாதிபதி ஆரிப் அல்வி ஆகியோர் பலியானோர் குடும்பத்துக்கு தங்களது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துள்ளனர். (7)

# சிறுவர் அரங்கம்

## வாசிப்பு மாதம் ஒக்டோபர் - 2018

# நண்டுகளின் தீர்மானம்



### கதை

உலகிலுள்ள எல்லா உயிரினங்களும் முன் பக்கமாகவே நடக்கும். ஆனால் நண்டுகள் மட்டும் பக்கவாட்டாகவே நடக்கும். இது பற்றி நண்டுகளுக்கு அடிக்கடி கவலை ஏற்படும். தங்களுக்குள் கதைத்துக் கவலைப்பட்டு விட்டுச் சென்று விடும். ஒரு நாள் நண்டுகள் ஒரு கூட்டம் ஏற்பாடு செய்தன. அக்கூட்டத்தில் இனிமேல் நாங்கள் பக்கவாட்டாக நடப்பதில்லை. நேராகவே நடப்போம் என்று தீர்மானம் எடுத்தன. நண்டுகளின் தலைவரும் இதனை வலியுறுத்தினார். எல்லா நண்டுகளும் இதனை ஏற்றுக் கொண்டன. கூட்டம் முடிந்தது. எல்லா நண்டுகளும் கலைந்து சென்றன. கலைந்து செல்லும் போது எந்த நண்டுமே நேராக நடக்கவில்லை. எல்லாமே பக்கவாட்டாகவே கலைந்து சென்றன.

### கதை கூறும் கதை

நீங்கள் உங்களுக்குள் சிரிக்கின்றீர்கள் அல்லவா? சிலர் சிலரை நினைத்துச் சிரிக்கலாம். சிலர் உங்களையும் நினைத்துச் சிரிக்கலாம். நாம் எந்தத் தீர்மானத்தையும் எடுப்பது முக்கியமல்ல.

அதனை நடைமுறைப் படுத்துவதுதான் முக்கியம். சில மாணவர்கள் பரீட்சையில் குறைந்த புள்ளிகள் பெற்றால் பெற்றோர் அவர்களைத் தண்டிப்பார்கள். அப்போது மாணவர்கள் சில உறுதி மொழிகளை அளிப்பார்கள்.

1.இனிமேல் தினமும் இரவு 10.00 மணிவரை படிப்போம்.

2.இனிமேல் ரி.வி.பார்க்க மாட்டோம்.

3.நண்பர்களுடன் விளையாடச் செல்ல மாட்டோம்.

4.பாடசாலைக்கு ஒழுங்காகச் செல்வோம்.

பெற்றோரும் சில உறுதி மொழிகளை எடுப்பார்கள்.

1.எந்தக் காரணத்துக்காகவும் பிள்ளைகளை பாடசாலைக்குச் செல்லாமல் மறிக்க மாட்டோம்.

2.நாங்களும் இனிமேல் ரி.வி.பார்க்க மாட்டோம். எங்களுக்கு இப்போதைக்கு ரி.வி. வேண்டாம்.

3.நாங்களும் ஒவ்வொரு நாளும் பிள்ளைகளின் பாட விடயங்களைக் கவனிக்க வேண்டும்.

நாட்கள் செல்லச் செல்ல பிள்ளைகளும் உறுதி மொழிகளை விடுத்து விளையாட்டுத்தனத்துடன் நடக்க ஆரம்பித்து விடுவர். பெற்றோரும் தொடர் நாடகத்தின் நிலைமையை அறிந்து அது பார்க்கத்தான் வேண்டும் என்று ரி.வி.பார்க்க ஆரம்பித்து விடுவர். இக் காரணத்தால் பிள்ளைகளின் உறுதி மொழிகளை அவர்கள் பெரிதுபடுத்தாமல் விட்டு விடுவர்.

பெற்றோர்களே! பிள்ளைகளின் கல்விக்காக இவைகளைத் தவிர்த்துக் கொள்ளுங்கள். உங்களுக்குள்ள ஏகப்பட்ட பிரச்சினைகளை விட தொடர்நாடகத்தில் வரும் சித்திரிக்கப்பட்ட பிரச்சினைகள் உங்கள் மனதைக் குடைந்து கொண்டே இருக்கும்.

உங்கள் பிரச்சினைக்கு நீங்கள் சிந்தித்துத் தீர்வு கண்டுவிடலாம். ஆனால் அதற்கும் உங்களுக்கு நேரமில்லாது போய் விடும். இல்லை அதனைவிட அது உங்களுக்கு இரசனை ஊட்டுகின்றதெல்லாம் உங்கள் பிள்ளைகளுக்காக அதனைத் தியாகம் செய்து விடுங்களேன்!...

நித்தம் எடுத்த உறுதி மொழியில் உறுதியாக இருங்கள். நீங்கள் வழுவாதிருந்து அவர்களும் வழுவாமல் பார்ப்பீர்களாக இருந்தால் முன்னேற்றம் நிச்சயம்.

தவணைப் பரீட்சைகளின் நோக்கம் ஒவ்வொரு மாணவனிடத்தும் இந்த முன்னேற்றத்தை ஏற்படுத்துவதுதான். அந்தச் சந்தர்ப்பங்களைச் சரிவரப் பயன்படுத்தி பிள்ளைகளின் வாழ்வை வளப்படுத்துங்கள். பிள்ளைகளால் பெருமைகளைத் தேடுங்கள்.

## பெண் பிள்ளையும் நரியும்



ஒரு தாய் தனது சிறிய மகள் அழும் போதெல்லாம் உன்னை நான் நரியிடம் பிடித்துக் கொடுப்பேன் என்று பயம் உறுத்தினாள். இதை அந்த வழியால் போகும் நரி ஒன்று அடிக்கடி கேட்டது.

மகள் அழகாக ஒரு பெண்ணாக வளர்ந்த போது ஒரு நாள் நரியானது அவளைக் கூட்டிச் செல்ல அங்கு வந்தது. அப்போது அவளுடைய தந்தை நரியிடம் நாங்கள் இப்போது அவளை உனக்குக் கொடுக்க முடியாது.

ஏனெனில் அவளுக்கு சீதனத்தையும் நாங்கள் கொடுக்க வேண்டும் என்றான். சிறிது காலத்திற்கு பின்பு நரி மீண்டும் அங்கு வந்தது. தாய், தந்தையர் ஒரு பெரிய பை நிறைய சீதனத்தையும் மகளையும் நரியிடம் ஒப்படைத்தனர். நரி கையைத் தூக்கித் தோளில் போட்டுக் கொண்டு பெண்ணையும் கூட்டிக் கொண்டு சென்றது. போகும் வழியில் பொறுமையின்றி பையினுள் என்ன இருக்கும் என்பதைப் பார்க்க ஆவல் கொண்டது.

ஒரு மரத்தடிக்குச் சென்று பையை அவிழ்த்தது. அப்போது பையிலிருந்து ஒரு பெரிய கறுப்பு நாய் பெரும் சத்தத்துடன் வெளியில் பாய்ந்தது. உடனே நரி ஒரே ஓட்டமாக ஓடித் தப்பியது. அது திரும்பி வரவேயில்லை.

## உடைந்த பேனாவின் சுயசரிதை



குழந்தைகளே நான் யார் என்று உங்களுக்கு தெரிகிறதா?

நான் தான் உடைந்த பேனா.

நான் கொழும்பில் உள்ள பேனா தொழிற்சாலையில் ஒரு அழகான பேனாவாக காட்சியளித்தேன்.

என்னை வியாபாரி ஒருவர் வாங்கிக்கொண்டு யாழ்ப்பாணத்தில் உள்ள



அவரது கடைக்குக் கொண்டு சென்றார்.

அவர் தனது கடையில் என்னைக் காட்சியளிக்க வைத்தார்.

ஒரு நாள் என்னை குமாரின் அப்பா வாங்கிக் கொண்டு சென்றார். அவர் குமாரின் பிறந்தநாளுக்கு பரிசாகக் கொடுத்தார்.

குமாருக்கு மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது. அவன் என்னை தனது நண்பர்களுக்கும் காட்டி மகிழ்ந்தான்.

ஒரு நாள் எனது பேனாவில் உள்ள மை மிகவும் குறைந்து குறைந்து சென்று முடிந்து விட்டது. என்னை குமார் அவனது பாடசாலை மைதானத்தில் எறிந்து விட்டான்.

என்னை ஒரு நாய் ஒன்று நடுவீதியில் வைத்து விட்டுச்சென்றது. வாகனங்கள் எல்லாம் என் மீது ஏறிச் சென்றன.

இன்னொரு நாள் ஒரு நாய் பல மைல் தூரத்தில் உள்ள மைதானத்திற்கு இழுத்துச் சென்று விட்டு விட்டுச் சென்றது.

என்னை குழப்படிக்கார சிறுவன் தனது நண்பர்களோடு உதைத்து விளையாடி விட்டுச் சென்றான். அப்படியே பல வருடங்கள் கழிந்தன என்று கூறி தனது இறுதி மூச்சை காட்டில் விட்டு இறந்தது.

சாயிக்ஷா வெற்றிவேல்,
தரம் 6, யா/கொக்குவில் இந்து கல்லூரி,
சிறுவர் பகுதி வாசகர்.

நீங்கள் அனைவரும் பெரிய காரியங்களைச் செய்ய பிறந்தவர்களே என்ற நம்பிக்கை கொள்ளுங்கள்.
– விவேகானந்தர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## தேசம் காத்த சிறுவன் போல் நம் இனம் காக்க வாரீர்!

நெதர்லாந்தின் புவியியல் அமைப்பு கடல் மட்டம் உயர்வாகவும் தரைமட்டம் தாழ்வாகவும் கொண்டது.

ஒரு நாள் சிறுவன் ஒருவன் அந்த அணை வழியாகச் செல்கிறான். அங்கே ஒரு துவாரத்தால் கடல் நீர் தரைக்குள் வருவதை அவதானித்தான்.

உடனடியாக தன் கையினால் அந்தத் துவாரத்தை அடைக்கின்றான். முடியவில்லை. நீர்க்கசிவு கட்டுப்படாதிருக்க, தன் முதுகை அணையோடு ஒட்டிக் கொண்டு நீர்க்கசிவைத் தடுக்கின்றான்.

மகனைக் காணாத தந்தை அவனைத் தேடிச் செல்கிறார். கொட்டும் பனியில் இருள் சூழ்ந்த அந்த வேளையில் தன் மகன் கடல் அணையோடு தன் முதுகை வைத்தபடி கிடப்பதைக் கண்டார். நிலைமையை உணர்ந்து கொண்ட அவர் ஊருக்குள் சென்று விடயத்தைக் கூறுகிறார்.

ஊர் மக்கள் திரண்டு வந்து நீர்க்கசிவு ஏற்பட்ட அந்த அணையை அடைத்து விடுகின்றனர்.

அன்று அந்தச் சிறுவன் செய்த தியாகம் நெதர்லாந்து தேசத்தை காப்பாற்றியது. நமக்கு என்ன வென்று அந்தச் சிறுவன் நினைத்திருந்தால் அந்தத் தேசம் அழிந்திருக்கும்.

ஆக, எப்போதும் நமக்கென்ன என்ற சிந்தனைக்கு யாரும் இடம்கொடுக்கக்கூடாது. இந்தச் சிந்தனையே எங்களை வாழ வைக்கும் என்று சிலர் நினைக்கலாம். ஆனால் இத்தகைய குறுகிய சிந்தனைகள் மற்றவர்களையும் அழித்து எங்களையும் துன்பக் கடலில் வீழ்த்திவிடும்.

ஆகையால் எங்களுக்கு இருக்கக்கூடிய கடமையை, எங்களால் செய்யக்கூடிய கடமையை உரிய நேரத்தில் செய்வது புண்ணியமான கருமம் என்பது நிதர்சனமான உண்மை.

அந்தவகையில், இன்றைய சூழ்நிலையில் தமிழினம் இன்னமும் இந்த மண்ணில் துன்பப்பட்டு வாழ்கிறது.

எனினும் அந்தத் துன்பத்தை அவருக்கென்றும் இவருக்கென்றும் பகிர்ந்து கொடுத்துவிட்டு நாம் நிம்மதியாக இருப்போம் என்று யார் நினைத்தாலும் அது தர்மமாகாது.

ஆகையால் என்ன காரணத்தால் எங்கள் இனம் கஷ்டங்களையும் இழப்புகளையும் இன்னமும் சந்தித்து வருகிறதோ அந்தக் காரணங்களைக் கண்டறிந்து ஒரு சரியான பாதையை – வியூகத்தை அமைத்துக் கொள்வதுதான் ஒரே வழி.

எனவே நாளைய தினம் தமிழ் மக்கள் பேரவையின் ஏற்பாட்டில் நல்லூரில் நடைபெறவுள்ள மாபெரும் மக்கள் எழுச்சிக் கூட்டத்தில் அனைவரும் பங்கேற்பதன் மூலம் எங்களின் கோரிக்கை என்ன? நாங்கள் எத்தகைய அரசியல் தலைமையை விரும்புகிறோம் என்பதை வெளிப்படுத்த வேண்டும்.

இந்த வெளிப்படுத்தல் என்பது பல்லாயிரக் கணக்கில் தமிழ் மக்கள் அணி திரள்வதன் மூலம் சாத்தியமாகும் என்பதால்,

தமிழினத்தின் நன்மை கருதி நாளைய தினம் தமிழ் மக்கள் அனைவரும் ஒன்றுகூடுவது நம் இனத்துக்குச் செய்யும் பேருதவி யாகும்.

## பட்டினியில் வாடும் 120 குடும்பங்கள்

அநுராதபுரம் மாவட்டத்தின், கல்னேவ பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட, வெட கொலுவாகம மற்றும் ஹபரவத்த ஆகிய கிராமங்களைச் சேர்ந்த 120 குடும்பங்கள் உணவு மற்றும் அடிப்படை வசதிகளின்றி மிகவும் வறுமையில் வாழ்ந்து வருகின்றன.

தாம் உரிய முறையில் விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட முடியாதுள்ளதாகவும், மழை நீரை மாத்திரம் பயன்படுத்தி விவசாய நடவடிக்கைகளில் ஈடுபடுவதாகவும் தெரிவிக்கும் அப்பகுதி மக்கள், இந்நிலைமை காரணமாக உணவுப் பற்றாக்குறையை எதிர்நோக்குவதாகவும் உரிய காலத்துக்கு மழை பெய்யாதமையின் காரணமாக நீண்ட காலமாக இவ்வாறான பாதிப்புகளை எதிர்நோக்கி வந்துள்ளதாகவும்,

தற்போது மழை பெய்கின்றபோதிலும்பயிர்ச்செய்கை நடவடிக்கைகளில் ஈடுபடுமளவுக்கு பொருளாதார வசதி தமக்கு இல்லை எனவும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

குறித்த கிராமங்களைச் சேர்நத சில குடும்பங்களைத தவிர பெரும்பாலானோர் வீடு வசதிகளின்றியும் அடிப்படை வசதிகளின்றியும் உள்ளனர்.

குறித்த கிராமங்களுக்கு செல்லும் வீதிகளும் செப்பனிடப்படாத நிலையிலேயே காணப்படுவதாகவும், இரவு நேரங்களில் காட்டு யானைகளின் அச்சுறுத்தல் காணப்படுவதாகவும் அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

தங்களின் வறுமை நிலை குறித்து அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டும் எனவும், உண்பதற்கு உலர் உணவுகளையேனும் தந்துதவுமாறு அம்மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (இ-7)

### மாலைதீவில் மறு தேர்தல்

## முன்னாள் ஜனாதிபதியின் மனு உச்சநீதிமன்றத்தில் தள்ளுபடி

(மாலே)

மாலைதீவு ஜனாதிபதி பதவிக்கான தேர்தலில் முகமது சோலி வெற்றி பெற்றதாக அறிவித்ததை இரத்து செய்ய கோரிய முன்னாள் ஜனாதிபதி அப்துல்லாயாமீனின்மனுவை உச்ச நீதிமன்றம் தள்ளுபடி செய்தது.

இந்திய பெருங்கடல் பகுதியில் அமைந்துள்ள மாலைதீவில் கடந்த செப்டெம்பர் மாதம் 23ஆம் திகதி ஜனாதிபதி பதவிக்கான தேர்தல் நடைபெற்றது.

மாலைதீவு முன்னேற்றக் கட்சி சார்பில் போட்டியிட்ட தற்போதைய ஜனாதிபதி அப்துல்லா யாமீன், எதிர்க்கட்சியான மாலைதீவு ஜனநாயக கட்சி வேட்பாளர் இப்ராகிம் முகமது சோலியிடம் தோல்வியடைந்தார்.

இந்நிலையில், புதிய ஜனாதிபதியாக பொறுப்பேற்கவுள்ள முகமது சோலியின் தேர்தல் வெற்றிக்கு எதிராக முன்னாள் ஜனாதிபதி அப்துல்லா யாமீன் கட்சி சார்பில் உச்ச நீதிமன்றில் கடந்த பத்தாம் திகதி வழக்கு தொடரப்பட்டது.

வாக்குப்பதிவின்போது நிகழ்ந்த வன்முறை சம்பவங்கள் மற்றும் வாக்கு எண்ணிக்கையில் நடந்த தில்லுமுல்லுவினால் முகமது சோலி 58.4 சதவீதம் வாக்குகளை பெற்றதாக அறிவித்த தேர்தல் கமிஷனின் உத்தரவுக்கு எதிராக இந்த வழக்கு தொடரப்பட்டது.

இவ்வழக்கை விசாரித்து வந்த உச்ச நீதிமன்றின் 5 நீதிபதிகள் கொண்ட அமர்வு நேற்று தீர்ப்பளித்தது. தேர்தலில் தில்லுமுல்லு செய்து முகமது சோலி வெற்றி பெற்றதாக வழக்கு தொடர்ந்த அப்துல்லா யாமீன் அதற்கான உரிய சாட்சியங்களை நிரூபிக்காததால் இந்த வழக்கை தள்ளுபடி செய்வதாக நீதிபதிகள் தெரிவித்துள்ளனர். (7)

## கூரைமீது ஏறிய கைதிகளின் போராட்டம் கைவிடப்பட்டது

(கொழும்பு)

அங்குணுகொலபெலஸ்ஸ சிறைச்சாலையின் கூரை மீது ஏறி சில சிறைக் கைதிகள் நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுத்த நிலையில் குறித்த போராட்டம் கைவிடப்பட்டுள்ளது. குறித்த எதிர்ப்பு போராட்டத்தில் 50 சிறைக்கைதிகள் ஈடுபட்டனர்.

பொலிஸ் அதிரடிப் படையினரின் சோதனை நடவடிக்கைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்தே இந்த எதிர்ப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பில் ஆராய்வதற்கு சிறைச்சாலை புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த 45 பேர் கொண்ட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

கடந்த 17ஆம் திகதி முதல் அங்குணுகொலபெலஸ்ஸ சிறைச்சாலையின் வெளிப்புற பாதுகாப்புக்காக பொலிஸ் விசேட அதிரடிப் படை அதிகாரிகளை ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது

அவர்கள் சிறைச் சாலையின் உள்விவகாரங்களில் தலையிடுவதில்லை என்பதுடன், வெளிப்பகுதிகளில் பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுவதாகவும் பொலிஸ் விசேட அதிரடிப்படை தெரிவித்துள்ளது.

இந்நிலையில் குறித்த போராட்டமானது நேற்று பிற்பகல் கைவிடப்பட்டுள்ளதாக சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது. (இ-7)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை புதன்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணி வரை யாழ்.பிரதேசத்திலகலிகை, தாமரைக்குளத்தடி, வெலிகந்தோட்டம் துன்னாலை, இந்திர அம்மன் கோவிலடி ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும். (இ-9)

## பாகிஸ்தானைவிட இலங்கை மிகவும் மோசமான நாடு

### சீமான் ஆவேசம்

பாகிஸ்தானை விட இலங்கை மிகவும் மோசமான நாடு என நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் தெரிவித்துள்ளார்.

சீமானால் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை வெளியிடப்பட்டுள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில், எல்லைத்தாண்டும் தமிழக மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் சிறை பிடிக்கப்பட்டு, அவர்களுக்கு பெருமளவான அபராதங்கள் விதிக்கப்படுகின்றன.

இவ்வாறான ஒரு செயலை பாகிஸ்தான்கூட தமிழக மீனவர்கள் மீது தொடுப்பதில்லை. ஆகவே, இந்த விவகாரத்தில் மத்திய அரசாங்கம் உடனடியாகத் தலையிட வேண்டும்.

இலங்கை சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள மீனவர்களை மீட்டெடுப்பதற்குரிய துரித நடவடிக்கைகளை அரசாங்கம் முன்னெடுக்க வேண்டும்.

அத்துடன், இலங்கை அரசாங்கத்தால் கொண்டு வரப்பட்டுள்ள புதிய கடல் தொழில் சட்டத்தை விலக்கி கொள்ள இலங்கை அரசாங்கத்திற்கு இந்திய மத்திய அரசாங்கம் அழுத்தம் கொடுக்க வேண்டும் எனவும் வலியுறுத்தப்பட்டுள்ளது. (இ-7)

## செயல்முறைகளைச் செயற்படுத்தும் முறை!

- எல்லாவற்றையுமே திட்டமிட்டு தொடங்க வேண்டும். நாளை நாளையென்று நாட்களைத் தள்ளிப் போடாதீர்கள்.
- நல்லவைகளை உடனே செய்யுங்கள். முன்னெச்சரிக்கையுடன் முழு முயற்சியுடன் செயல்களைச் செயற்படுத்துங்கள்.
- நம்பிக்கையுடன் தெளிவாகச் செய்யுங்கள். அனுபவமிக்க ஆலோசகரிடம் கலந்து விசாரித்து வேலைகளைத் தொடங்குங்கள்
- தவறாக யோசித்து ஒருமுறைக்கு இருமுறை ஆய்வு செய்து செயல்களைச் செய்தால் நம் செயற்பாடுகள் அனைத்துமே வெற்றியின் வெளிப்பாடுகளாகும்.

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



- நன்மை செய்யவும். நல்லவர்களாக வாழவும் விரும்புபவர்களுக்கு உங்களால் இயன்ற உதவிகளைச செய்யுங்கள்.
- உண்மை எதற்கும் தலை வணங்கத் தேவையில்லை. மனித சமூகம் தான் உண்மைக்குத் தலை வணங்க வேண்டும்.
- எல்லாவிதமான அறிவும் மனிதனுக்குள்ளேயே இருக்கிறது. அதை விழித்து எழச் செய்வதே நல்லாசிரியரின் கடமை.
- இன்றைய கல்வித்திட்டம் மனிதனை இயந்திரமாக மாற்றிக் கொண்டிருக்கிறது. ஒழுக்கம், மன வலிமை, பரந்த அறிவு இவற்றை புகட்டுவதாக கல்வித்திட்டம் மாற வேண்டும்.
- மனிதர்கள் விலங்குகளை விட அதிக ஒழுக்கமானவர்களாக இல்லை. சமுதாயக் கட்டுப்பாடு என்ற சாட்டையால் மனிதன் அடக்கி வைக்கப்பட்டிருக்கிறான்.
- கற்புநெறியில் இருந்து பிறழும் போது, மனித சமூகம் முடிவை நோக்கி நெருங்கிக் கொண்டிருக்கிறது என்பது தெளிவாகும்.
- நாம் வாழும் சூழ்நிலைக்கு ஏற்ப வாழ்வை அனுசரித்து அமைத்துக் கொள்வது தான் வெற்றி வாழ்வுக்கான ரகசியம்.

# கிரேட் ஸ்ரார் அணி சம்பியனாகியது சொந்த மண்ணில் தோல்வி கண்ட பாடும்மீன்





அதிகப்படியான பந்துப் பரிமாற்றங்களை தம் வசம் மேற்கொண்ட போதும், சரியான முடித்தல் இல்லாமையால் கோல்கள் அடிக்கும் வாய்ப்புக்களைப் பெறாமல் பாடும்மீன் அணி தடுமாற, இறுதி நேரத்தில் இரண்டு கோல்களை அடித்து கிரேட் ஸ்ரார்ஸ் அணி சம்பியனாகியது.

இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனத்தின் பிரிவு- 11 அணிகளுக்கிடையிலான பிறீமியர் லீக் சுற்றுப் போட்டியின், இறுதிப் போட்டியானது 21 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இரவு யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெற்றது.

இறுதிப்போட்டியில், யாழ்ப்பாணம் குருநகர் பாடும்மீன் அணியை எதிர்த்து பேருவளை கிரேட் ஸ்ரார்ஸ் அணி மோதியது.


முதல்பாதியில் இரு அணிகளும் எவ்வித கோல்களையும் பதிவு செய்யவில்லை. இரண்டாவது பாதியில் பாடும்மீன் அணியிடம் அதிக நேரம் பந்து இருந்த போதும், கிரேட் ஸ்ரார்ஸ் அணியின் கவிந்து முதல் கோலை பதிவு செய்தார்.

தொடர்ந்து, கிரேட் ஸ்ரார்ஸ் அணியின் பைனாஸ் அணிக்கான இரண்டாவது கோலை அடித்தார். சுதாகரித்தாடிய பாடும்மீன் அணிக்கு, கீதன் பதில் கோலைப் பெற்றுக் கொடுத்தார்.

தொடர்ந்தும், மிகக்கடுமையாக பாடும்மீன் அணி ஆடிய போதும், மேலதிக கோல் எதனையும் பதிவு செய்ய முடியவில்லை. முடிவில், கிரேட் ஸ்ரார்ஸ் அணி, 02:01 என்ற கோல்கள் கணக்கில் வென்றது.

இறுதிப்போட்டியில் விளையாடிய இந்த இரண்டு அணிகளும் தற்போது, பிரிவு - 1 அணிகளுக்குள் உள்நுழைந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (க-26)

# கே.சி.சி.சி. கூடைப்பந்தாட்டம் சம்பியனாகியது ஜொலிஸ்ரார்





கே.சி.சி.சி. விளையாட்டுக் கழகத்தால் வட மாகாண ரீதியில் நடத்தப்பட்ட ஆண்கள், பெண்களுக்கான கூடைப்பந்தாட்ட சுற்றுப் போட்டியின் இறுதிப்போட்டி கடந்த சனிக்கிழமை கொக்குவில் இந்துக் கல்லூரி கூடைப்பந்தாட்ட திடலில் நடைபெற்றது.

பெண்களுக்கான இறுதிப் போட்டியில் கே.சி.சி.சி.பெண்கள் அணியை எதிர்த்து பமிலியன்ஸ் விளையாட்டுக்கழக அணி மோதியது.

இந்தப் போட்டியில் 2 புள்ளிகள் வித்தியாசத்தில் பமிலியன்ஸ் விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்றது.

ஆண்களுக்கான இறுதிப் போட்டியில்சென்றலைட்ஸ்அணியை (யாழ்.மத்திய கல்லூரி) எதிர்த்து ஜொலிஸ்ரார் அணி (யாழ் இந்துக் கல்லூரி) மோதியது.

போட்டியின் ஆரம்பம் முதலே ஆதிக்கம் செலுத்தி வந்த ஜொலிஸ்ரார் அணி 50:53 என்ற புள்ளிக் கணக்கில் அபார வெற்றியை பெற்று கிண்ணத்தை வென்றது.

இந்த போட்டியின் ஆட்ட நாயகனாக சென்றலைட் அணியின் கர்சன் தெரிவுசெய்யப்பட்டார்.

இந்த தொடரின் சிறந்த வீரனாக ஜொலிஸ்ரார் அணியின் கௌரிசங்கர் தெரிவுசெய்யப்பட்டார்.

வடமாகாணத்தில் கடைசியாக நடைபெற்ற 5 கூடைப்பந்தாட்ட இறுதிப் போட்டிகளிலும் ஜொலிஸ்ரார், மற்றும் சென்றலைட்ஸ் அணிகளே மோதியிருந்தமை குறிப்பிடத்தக்க விடயமாகும். (க)

# இறுதி நேரத்தில் வெற்றிக்கோல் நாவாந்துறை சென்.மேரிஸ் வெற்றி



யாழ்ப்பாணக் கால்பந்தாட்ட லீக் ஆரம்பிக்கப்பட்டு 75 ஆண்டுகள் நிறைவு பெறுவதையொட்டி, லீக்கின் ஏற்பாட்டில் கால்பந்தாட்டச் சுற்றுப்போட்டிகள் அரியாலை உதைபந்தாட்ட பயிற்சி மைதானத்தில் கடந்த 14 ஆம் திகதி முதல் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

யாழ்ப்பாணம் லீக்கில், ஏ பிரிவு அணிகள் என ஒரு பிரிவும், பி பிரிவு அணிகள் என ஒரு பிரிவும் காணப்படுகின்றன. இவற்றுக்கு தனித்தனியாக சுற்றுப் போட்டியானது நடத்தப்படுகின்றது.

இதில் ஏ பிரிவு அணிகளுக்கிடையிலான போட்டிகள் லீக் முறையில் இடம்பெற்று வருகின்றன.

19 ஆம் திகதி நடைபெற்ற லீக் ஆட்டமொன்றில் நாவாந்துறை சென்.மேரிஸ் அணியை எதிர்த்து ஆனைக்கோட்டை யூனியன் அணி மோதியது. முதற்பாதியில் இரண்டு அணிகளும் எவ்வித கோல்களையும் அடிக்கவில்லை.

இரண்டாவது பாதியின் இறுதி தருணத்தில் சென். மேரிஸ் அணியின் யுனிற்றன் ஒரு கோலை அடித்தார்.

முடிவில் சென்.மேரிஸ் அணி, 01:00 என்ற கோல் கணக்கில் வென்றது. (க-26)

# உடுப்பிட்டி நவஜீவன்ஸ் அணியை வீழ்த்தி இறுதிக்குள் நுழைந்தது றேஞ்சர்ஸ் அணி




இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தின் 5 ஆவது ஆண்டு நிறைவையொட்டி, வட மாகாண ரீதியில் கால்பந்தாட்டச் சுற்றுப்போட்டியொன்று இளவாலை ஹென்றியரசர் கல்லூரி மைதானத்தில் நடத்தப்பட்டு வருகின்றது.

இந்தச் சுற்றுப்போட்டியில் 24 கழகங்கள் பங்குபற்றுவதுடன், போட்டிகள் விலகல் முறையில் இடம்பெற்று வருகின்றன.

இந்தச் சுற்றுப்போட்டியின் அரையிறுதியாட்டங்கள் தற்போது நடைபெறுகின்றன. 20 ஆம் திகதி நடைபெற்ற முதலாவது அரையிறுதியாட்டத்தில் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் அணியை எதிர்த்து கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் அணி மோதியது.

போட்டி நேரத்தில் இரண்டு அணிகளும் தலா ஒரு கோலைப் பெற்றிருந்தன. வெற்றியாளரைத் தீர்மானிக்க சமநிலை தவிர்ப்பு உதை நாடப்பட்டது. அதில் றேஞ்சர்ஸ் அணி, 4:2 என்ற கோல்கள் கணக்கில் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது. (க-26)

# புதிய பயங்கரவாத தடைச்சட்டமூலம் குறித்து மனித உரிமை கண்காணிப்பகம் கரிசனை

(கொழும்பு)

இலங்கையின் புதிய பயங்கரவாத தடைச்சட்ட மூலம் குறித்து சர்வதேச மனித உரிமை கண்காணிப்பகம் கரிசனை வெளியிட்டுள்ளது.

புதிய பயங்கரவாத தடைச்சட்டம் குறித்த இலங்கையின் நகல்வடிவம் தற்போதைய பயங்கரவாத தடைச்சட்டத்தை விட முன்னேற்றகரமானதாக காணப்படுகின்ற போதிலும் மனித உரிமை மீறல்களிற்கு எதிரான மேலதிக ஏற்பாடுகள் அவசியம் என மனித உரிமை கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.

நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நகல் வடிவத்தில் காணப்படும் மேலதிக ஏற்பாடுகளை பயன்படுத்தி அமைதியான ஆர்ப்பாட்டங்களை தடை செய்ய முடியும், அரச சார்பற்ற அமைப்புகளை தடைசெய்ய முடியும் எனவும் மனித உரிமை கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.

பொலிஸாருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் போதிய அளவிற்கு கட்டுப்படுத்தப்படவில்லை எனவும் மனித உரிமை கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.

இலங்கை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணம் முழுமையான சர்வதேச தராதரத்தை உடையதாக மாறுவதை இலங்கையின் நாடாளுமன்றம் உறுதி செய்ய வேண்டும் என வேண்டுகோள் விடுத்துள்ள சர்வதேச மனித உரிமை கண்காணிப்பகம் சீர்திருத்தங்களை கைவிடுமாறு கொடுக்கப்படும் அழுத்தங்களிற்கு நாடாளுமன்றம் அடிபணியக்கூடாது எனவும் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இலங்கை அரசாங்கம் சித்திரவதைகளை உள்ளடக்கிய பயங்கரவாத தடைச்சட்டத்திற்கு தீர்வை காண்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டுள்ளது எனினும் உத்தேச சட்டம் மனித உரிமைகளை பாதுகாப்பதற்கான வலுவான ஏற்பாடுகளை கொண்டிருப்பது அவசியம் என சர்வதேச மனித உரிமை கண்காணிப்பகத்தின் பயங்கரவாதம் குறித்த ஆராய்ச்சியாளர் லெட்டா டெய்லர் தெரிவித்துள்ளார்.

புதிய சட்ட மூலத்தில் துஷ்பிரயோகத்திற்கு வழிவகுக்க கூடிய பிரிவுகளை சேர்ப்பதை இலங்கை நாடாளுமன்றம் தவிர்த்துக்கொள்ளவேண்டும் என அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

பல வருடங்களிற்கு பின்னர் இலங்கை தனது அவப்பெயரை சந்தித்துள்ள பயங்கரவாத தடைச்சட்டத்தை கைவிடும் நிலையிலுள்ளது எனகுறிப்பிட்டுள்ள டெய்லர் புதிய பயங்கரவாத தடைச்சட்டத்தை வலுப்படுத்துவதன் மூலம் கடந்த கால துஷ்பிரயோகங்களில் இருந்து விடுபடுவதற்கான தனது விருப்பத்தை இலங்கை அரசாங்கம் வெளிப்படுத்தவேண்டும் எனவும் கேட்டுக்கொண்டுள்ளார். (ம)

# அம்மாச்சி என்ற பெயரை மாற்றப்போவதாக கூறவில்லை

## பிரதி அமைச்சர் அங்கஜன் இராமநாதன் மறுப்பு

(யாழ்ப்பாணம்)

அம்மாச்சி என்ற பெயரை மாற்றப் போவதாக நான் கூறவில்லை. இனிவரும் உணவகங்கள் இவ்வாறு அம்மாச்சி என்ற பெயரில் வருமா தெரியவில்லை என்றே ஊடகவியலாளர்களிடம் தெரிவித்தேன் என விவசாய பிரதி அமைச்சர் அங்கஜன் இராமநாதன் தெரிவித்துள்ளார்.

நேற்று திங்கட்கிழமை நுணாவில் பகுதியில் இடம்பெற்ற நுணாவிற் குள புனருத்தாரண அங்குரார்ப்பண நிகழ்வின் போதே அவர் இதனைத் தெரிவித்திருந்தார்.

மேலும் அவர் இது தொடர்பாக கருத்து தெரிவிக்கையில்,

வடமாகாணத்தில் கடந்த காலத்தில் அம்மாச்சி என்ற பெயரில் உணவகங்கள் உருவாக்கப்பட்டிருந்தன. இந்த உணவகங்கள் மத்திய அரசின் திட்டம். வடமாகாண சபைத் திட்டம் அல்ல என்றே ஊடகவியலாளர்களிடம் தெரிவித்திருந்தேன்.

நான் சொன்னது தெளிவில்லையோ அல்லது அவர்கள் தெளிவாக புரிந்து கொள்ளவில்லையோ தெரியவில்லை. அவர்கள் நான் அம்மாச்சி என்ற பெயரை மாற்றப் போவதாக கூறி இருக்கிறார்கள்.

அம்மாச்சி என்ற பெயரை மாற்றுவதற்கான நோக்கமோ, தேவையோ இல்லை. இருக்கின்ற அம்மாச்சி உணவகங்கள் மக்கள் மத்தியில் நிச்சயமாக செல்வாக்கினைப் பெற்றிருக்கின்றன. நான் சொல்லவந்த விடயம் இந்த அம்மாச்சி உணவகம் மாகாண சபையின் திட்டம் அல்ல.

இது மத்திய அரசின் திட்டம். இது எங்களுடைய முன்னாள் பணிப்பாளர் நாயகம் டாக்டர் றொகானுடைய கருத்திட்டம். அந்தக் கருத்திட்டம் ஊடாக நாடு முழுவதும் "ஹல போயு" என்ற பெயரில் உருவாக்கப்பட்டது.

வடக்கில் ஒரு சிலர் தமக்குரிய திட்டம் என்ற போர்வையில் அம்மாச்சி என்று வைத்துள்ளார்கள். அது பிரச்சினை இல்லை. ஆனால் வேறு ஒருவருடைய திட்டத்தை தங்களுடைய திட்டம் என்று சொல்வது எங்களுக்கு அவமானமாக உள்ளது. இந்த வருடமும் புதிய அம்மாச்சி போன்ற உணவகங்கள் வர உள்ளன.

ஆனால் அவை அம்மாச்சி என்ற பெயரில் வருமா என்று தெரியவில்லை. ஆனால் நிச்சயமாக தமிழ்ப் பெயரில் வரும் என்ற உத்தரவாதத்தைத் தருவேன் என்றே நான் சொல்லியிருந்தேன். அதனையே போதிய தெளிவு இல்லாமல் மாற்றப் போகிறேன் என்று சொல்லி உள்ளார்கள். இதனை நான் தெளிவு படுத்த விரும்புகிறேன் என மேலும் அவர் தெரிவித்திருந்தார். (ம-30)

# நீதித்துறை தொடர்பில் மக்கள் கவனம் செலுத்த வேண்டும்

## பிரதம நீதியரசர் நளின் பெரேரா தெரிவிப்பு

(கொழும்பு)

மக்கள் எதிர்நோக்கும் சட்டரீதியான பிரச்சினைகள் தொடர்பான முறைப்பாடுகளை அனுப்புமாறும், அவற்றிற்கு உடன் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் பிரதம நீதியரசர் நளின் பெரேரா தெரிவித்துள்ளார்.

இலங்கையின் 46ஆவது பிரதம நீதியரசராக நியமிக்கப்பட்ட நளின் பெரேராவை வரவேற்கும் நிகழ்வு, உச்ச நீதிமன்றில் நேற்று திங்கட்கிழமை இடம்பெற்றது.

புதிய பிரதம நீதியரசரை சட்டமா அதிபரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான ஜயந்த ஜயசூரிய மற்றும் இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் யு.ஆர்.டி.சில்வா ஆகியோர் வரவேற்றனர். இந்நிகழ்வில் உரையாற்றிய போதே பிரதம நீதியரசர் மேற்குறித்தவாறு குறிப்பிட்டார்.

அத்தோடு, பொதுமக்களின் நம்பிக்கைக்கு பாத்திரமாகவும், நீதித்துறையின் சுயாதீனத்தை பாதுகாக்கவும் உறுதியுடன் செயற்படுவதாக அவர் இதன்போது உறுதியளித்தார்.

அதேபோல் நீதித்துறையின் செயற்பாடுகள் தொடர்பாக பொதுமக்களும் கவனம் செலுத்துவது அவசியமென நீதியரசர் வலியுறுத்தினார்.

இதேவேளை, தன்னை பிரதம நீதியரசராக நியமித்தமைக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிற்கு நன்றி தெரிவிப்பதாகவும் குறிப்பிட்டார்.

இந்நிகழ்வில் ஜனாதிபதி சட்டத்தரணிகள், உச்ச நீதிமன்றம், மேல் நீதிமன்றம், மேன்முறையீட்டு நீதிமன்றம் உள்ளிட்ட கொழும்பின் முக்கிய நீதிமன்றங்களின் நீதிபதிகள் கலந்துகொண்டனர். (ம)

# மலேரியா நோய் மீண்டும் பரவக் கூடிய அபாயம்

(கொழும்பு)

இரண்டு வருடங்களுக்கு முன்னர் நாட்டில் ஒழிக்கப்பட்ட மலேரியா நோய் மீண்டும் பரவக் கூடிய அபாயம் நில்வுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மலேரியா ஒழிப்பு இயக்கத்தின் மருத்துவர் மனோநாத் மாரசிங்க இதனை தெரிவித்துள்ளார்.

நாட்டிற்கு குடியேறுபவர்கள் மூலம் இந்த நோய் மீண்டும் பரவக் கூடிய அபாயம் நிலவுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தியா உள்ளிட்ட ஆசிய நாடுகள், ஆபிரிக்க மற்றும் அமெரிக்க நாடுகளில் இந்த நோய் பரவலாக காணப்படுகிறது.

இந்தநிலையில் அந்த நாடுகளில் இருந்து வருகை தந்து நாட்டில் குடியேறுகின்றவர்கள் மூலம் இந்த நோய் தொற்றக் கூடும் என மலேரியா ஒழிப்பு இயக்கத்தின் மருத்துவர் மனோநாத் மாரசிங்க தெரிவித்துள்ளார். (ம)

# கஞ்சா தூள் கலந்த பீடிகளுடன் கொக்குவிலில் மூவர் கைது

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் நந்தாவில் அம்மன் ஆலயப் பகுதியில் கஞ்சா தூள் கலந்த பீடிகளை வைத்திருந்த மூன்று இளைஞர்களை சிறப்பு அதிரடிப் படையினர் கைது செய்து ஒப்படைத்தனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

வாள்வெட்டு வன்முறையில் ஈடுபடும் கும்பல்களைக் கட்டுப்படுத்தும் நோக்கில் சிறப்பு அதிரடிப்படையினர் சுற்றுக்காவல் நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளனர்.

கொக்குவில் நந்தாவில் அம்மன் ஆலயப் பகுதியில் நேற்று திங்கட்கிழமை சுற்றுக் காவல் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த சிறப்பு அதிரடிப் படையினர், அந்தப் பகுதியில் சந்தேகத்துக்கிடமாக நின்றிருந்த மூன்று இளைஞர்களை விசாரணைக்குட்படுத்தியுள்ளனர்.

அதன்போது, அவர்களிடமிருந்து பீடிகள் சில மீட்கப்பட்டன. அவற்றில் கஞ்சா போதைப் பொருள் தூள் கலந்திருந்தன. அதனால் இளைஞர்கள் மூவர் கைது செய்யப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர் என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ம)

## கொலைச் சதி தொடர்பில்

# நாலக டி சில்வாவிடம் நேற்றும் விசாரணை

(கொழும்பு)

பயங்கரவாத விசாரணை பிரிவின் முன்னாள் பிரதி பொலிஸ் மா அதிபர் நாலக டி சில்வாவிடம் தொடர்ந்தும் குற்ற விசாரணை திணைக்கள அதிகாரிகள் வாக்குமூலம் பெறுவதாக தெரிவிக்கப்படுகிறது.

நேற்று காலை 9 மணிக்கு குற்றப்புலனாய்வு திணைக்களத்தில் முன்னிலையான நாலக டி சில்வாவிடம் சுமார் 9 மணித்தியாலத்திற்கும் மேலாக வாக்குமூலம் பெறப்பட்டதாக தெரியவருகிறது.

கடந்த வெள்ளிக்கிழமை அவர் குற்ற விசாரணை திணைக்களத்தில் முன்னிலையாகியிருந்தார்.

இதன்போது அவரிடம் 9 மணி நேர வாக்குமூலம் பதிவுசெய்யப்பட்டிருந்தது.

அத்துடன், கடந்த வியாழக்கிழமையும் அவர் அங்கு முன்னிலையாகியிருந்த நிலையில், அன்றைய தினமும் அவரிடம் 9 மணி நேர விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ ஆகியோருக்கு எதிரான கொலை முயற்சி சதி திட்டம் தொடர்பில் நாலக டி சில்வாவிடம் வாக்குமூலம் பெறப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம)

## கோண்டாவில் தாக்குதல்

# 18 வயது இளைஞன் சந்தேகத்தில் கைது

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் மேற்கு தாவடி உப்புமடம் சந்திப் பகுதியில் உள்ள வர்த்தக நிலையம் மற்றும் அங்கு தரித்து நின்ற முச்சக்கர வண்டி மீது தாக்குதல் மேற்கொண்டார் என்ற குற்றச்சாட்டில் நேற்றையதினம் அதிரடிப் படையினரால் 18 வயது இளைஞன் ஒருவர் கைது செய்யப்பட்டு யாழ்ப்பாணம் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

விசேட அதிரடிப்படையினருக்கு வழங்கப்பட்ட மோட்டார் சைக்கிளின் இலக்கத்தினை வைத்தே மேற்படி சந்தேக நபரை கைது செய்துள்ளதாக அறியமுடிகிறது.

கைது செய்யப்பட்டவர் நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ம-101)

# யாழ்.மாதகல்...

யாழ்ப்பாணம் மாதகல் கடற்பரப்பில் வைத்து கேரள கஞ்சா பொதியுடன் இரு சந்தேக நபர்களை கைது செய்த கடற்படையினர் அவர்களை காங்கேசன்துறை பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர். கைது செய்யப்பட்ட இருவரும் நேற்று சந்தேகத்திற்கு இடமாக படகொன்றில் பொதிகளை ஏற்றுவதாக கிடைக்கப்பெற்ற தகவலை அடுத்து அங்கு சென்று கைது செய்ததாக கடற்படையினர் கூறினர்.

இவ்வாறு கைதாகிய நபர்கள் வசம் இருந்த சுமார் 150 கிலோவிற்கும் அதிகமாக கேரளா கஞ்சா மீட்கப்பட்டுள்ளதுடன் கைதானவர்கள் மாதகல் பகுதியை சேர்ந்தவர்களாவர். மேலும் கைதாகிய சந்தேக நபர்கள் மற்றும் மீட்கப்பட்ட கேரளா கஞ்சா குறித்து காங்கேசன்துறை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ம)












## வீடு புகுந்து...

சின்னத்துரை சதீஸ்தரன் நேற்று தீர்ப்பளித்தார்.

யாழ்ப்பாணம் செப்பல் வீதியிலுள்ள வீடொன்றுக்குச் சென்ற ஒருவர், தண்ணீர்த் தாகமாகவுள்ளதாகத் தெரிவித்து குடிதண்ணீர் கேட்டுள்ளார். அவருக்கு அந்த வீட்டின் உரிமையாளரால் குடிதண்ணீர் வழங்கப்பட்டது. அதனைக் குடித்துவிட்டு போத்தல் ஒன்று தருமாறு அவர் கேட்டுள்ளார். அதனால் வீட்டின் உரிமையாளர் போத்தல் ஒன்றை வழங்கியுள்ளார்.

அந்தப் போத்தலால் வீட்டின் உரிமையாளரையும் அவரது மனைவியையும் தாக்கிய கொள்ளையர், அவர்களிடமிருந்த நகை மற்றும் பணத்தைக் கொள்ளையிட்டுத் தப்பித்தனர். இந்தச் சம்பவம் 2017ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் இடம்பெற்றது.

சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் பாதிக்கப்பட்டவர்களால் முறைப்பாடு வழங்கப்பட்டது. அதனடிப்படையில் விசாரணைகளை முன்னெடுத்த யாழ்ப்பாணம் பொலிஸார் சந்தேகநபர்கள் இருவரைக் கைது செய்தனர்.

சந்தேகநபர்கள் இருவராலும் நகைக் கடை ஒன்றில் விற்பனை செய்யப்பட்ட நிலையில் கொள்ளையிடப்பட்ட நகைகள் மீட்கப்பட்டன. சந்தேகநபர்கள் இருவரும் குறிப்பிட்ட காலப்பகுதிக்கு யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றால் விளக்கமறியலில் வைக்கப்பட்டு பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

இந்த நிலையில் சந்தேகநபர்களுக்கு எதிராக கொள்ளை மற்றும் இருவரைத் தாக்கிய உட்பட நான்கு பிரிவுகளில் குற்றச்சாட்டுக்களை முன்வைத்து யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றில் பொலிஸார் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்தனர். அதனடிப்படையில் விசாரணைகள் இடம்பெற்று வந்தது.

இந்த நிலையில் முதலாவது சந்தேகநபரை நான்கு குற்றச்சாட்டுக்களிலும் குற்றவாளியாகக் கண்ட நீதிமன்று, அவருக்கு 2 ஆண்டுகள் கடூழியச் சிறைத் தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தது. அத்துடன், இரண்டாவது சந்தேகநபரை முதலாவது சந்தேகநபருக்கு உதவிய குற்றத்துக்காக 10 ஆண்டுகள் ஒத்திவைக்கப்பட்ட ஒரு ஆண்டு கடூழியச் சிறைத் தண்டனையை மன்று வழங்கியது.

இரண்டு குற்றவாளிகளும் தலா 4 ஆயிரம் ரூபாய் தண்டப்பணத்தைச் செலுத்த வேண்டும். தவறின் ஒரு மாத சிறைத் தண்டனையை அனுபவிக்க நேரிடும் என்று நீதிமன்று உத்தரவிட்டது.

அத்துடன், சான்றுப்பொருளாகச் சமர்ப்பிக்கப்பட்ட நகைகளை உரிய நடைமுறைகளின் அடிப்படையில் பாதிக்கப்பட்டவர்களின் கையளிக்க பதிவாளருக்கு நீதிமன்று கட்டளையிட்டது.

இதேவேளை, முதலாவது குற்றவாளிக்கு எதிராக கொலை மற்றும் கொள்ளை தொடர்பான மற்றொரு குற்றச்சாட்டு வழக்கு நிலுவையில் உள்ளது. ஆனைக்கோட்டைப் பகுதியில் மூதாட்டி ஒருவரைக் கொலை செய்து அவரது காதுகள் இரண்டையும் அறுத்தெடுத்து தோடுகளைக் கொள்ளையிட்ட சம்பவத்திலேயே அந்தக் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது. (ம-9)

வேலைவாய்ப்பு

இனிப்பு வகை மிக்சர் தயாரிக்கும் நிறுவனத்தில் பணிபுரிய முகாமையாளர், மேற்பார்வையாளர், தயாரிப்பு வேலை செய்வோர், பொதியிடுவோருடன் கடையில் விற்பனைப் பகுதிக்கும் ஆட்கள் தேவை. (6149)

தொடர்புகளுக்கு:
0774014328, 0773432522

விரைவு பொதிகள் சேவை
விசேட விலை குறைப்பு
(C-4106)



UK - 550 /=Kg
கனடா - 900 /=Kg
ஜேர்மனி - 700 /=Kg
நெதர்லாந்து - 700 /=Kg
(நிபந்தனைகளுக்குட்பட்டது)
DELIVERY IN 3-5 DAYS
0768226240
● மானிப்பாய் ● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி ● நெல்லியடி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை
V2 TRAVELS

## மரபணு இரசாய...

அமைக்கப்படும் முதலாவது மரபணு ஆய்வுகூடம் இதுவாகும்.

இதுதொடர்பில் சுகாதார அமைச்சின், சுகாதார தகவல் தொடர்பாடல் பிரிவின் பணிப்பாளர் மருத்துவர் ஏ.ஐ.ஜாகொட தெரிவித்ததாவது,

மரபணுத் தொழில்நுட்பம் தொடர்பில் உயர்கல்வியைத் தொடரும் மருத்துவர்கள், உள்நாடு, வெளிநாடுகளில் உள்ள மருத்துவ நிபுணர்களின் ஒத்துழைப்புடன் இந்த மரபணு இரசாயனகூடம் ஆரம்பிக்கப்படுகிறது.

அரச வைத்தியசாலைகளில் இலத்திரனியல் மருத்துவச் சான்றிதழை அறிமுகப்படுத்தும் வேலைத்திட்டத்தில் 80 சதவீதப் பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன.

நோயாளர்களின் மரபணு அறிக்கையும், மரபணு விடயமும் இலத்திரனியல் மருத்துவச் சான்றிதழில் உள்ளடக்க எதிர்பார்க்கப்பட்டுள்ளது என்றார்.

இதேவேளை, மரபணு ஆய்வுகூடத்தை தற்போது தனியார் நிறுவனமான ஜின் டெக் நிறுவனமே நடத்திவருகிறது. அந்த நிறுவனத்தினால்தான் நீதிமன்றங்களால் வழக்கு நடவடிக்கைகளுக்கு கோரப்படும் மரபணு ஆய்வறிக்கைகள் வழங்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம)

## அரசியலமைப்பு...

னைத் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 27 ஆம் திகதி சபாநாயகர் கரு ஜயசூரிய வெளிநாட்டு பயணமொன்றினை மேற்கொள்ளவுள்ளார்.

இதன்காரணமாக அதற்கு முன்னர் பொலிஸ் ஆணைக்குழு உள்ளிட்ட சிவில் பிரதிநிதிகளின் நியமனத்துக்காக முன்னெடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து தீர்மானங்களை மேற்கொள்ளும் நோக்கில் நாளை மறுதினம் வியாழக்கிழமை அரசியலமைப்புச் சபை கூடவுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை, தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் ஆயுட்காலம் கடந்த 14 ஆம் திகதியுடன் நிறைவடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

ஆங்கில வகுப்பு

தரம் 02,03,04,05,06,07,08,09,10 ஆம், O/L, A/L மற்றும் பல்கலைக்கழக மாணவர்களுக்கும் தொழில் புரிபவர்களுக்குமான English Spoken with Grammar வீட்டுக்கு வந்து கற்பிக்கப்படும். (6147)
தொடர்புகளுக்கு:
0767070069 M.Suren

## வட மாகாண...

டன் முடிவுக்கு வரவுள்ளது. அந்த வகையில் இன்று இறுதி அமர்வு இடம்பெறவுள்ளது.

கடந்த 2013 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதத்தில் நடைபெற்ற மாகாணசபை தேர்தலின் அடிப்படையில் 36 உறுப்பினர்களை உள்ளடக்கி முதலாவது அமர்வு ஒக்டோபர் மாதம் 25-ம் திகதி கைதடியில் உள்ள மாகாண சபை கட்டடத்தில் ஆரம்பித்தது. அந்த வகையில் 134-வது அமர்வுடன் 5 வருட ஆட்சிக் காலத்தை கொண்ட மாகாணசபையின் ஆட்சிக்காலம் நாளையுடன் நிறைவடைகிறது.

இன்றைய அமர்வில் பிரேரணைகள் எவையும் எடுத்துக்கொள்ளப்படாது. ஒவ்வொரு உறுப்பினர்களுக்கும் 3 தொடக்கம் 5 நிமிடங்கள் பேசுவதற்கு நேரம் வழங்கப்படும. அத்துன் தேநீர் உபசாரத்துடன் சபை நிறைவடையவுள்ளது.

அத்துடன் இன்றைய தினம் வடக்கு முதலமைச்சருடைய பிறந்த தினம் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-9)

## வவுனியாவில்...

மேலும் தெரியவருகையில், நேற்று இரவு 7 மணியளவில் கனகராயன்குளம், மன்னகுளம் பகுதியில் வீதி ஓரத்தில் கைக்குண்டு, மகசீன் அதற்குரிய ரவைகள் 30 என்பன இருப்பதாக பொலிஸாருக்கு பொது மக்களினால் தகவல் வழங்கப்பட்டுள்ளது.

சம்பவ இடத்திற்குச் சென்ற பொலிஸார் அதனைப்பார்வையிட்டுள்ளதுடன் எவ்வாறு எங்கிருந்து கொண்டுவரப்பட்டுள்ளது என்பது தொடர்பாக அப்பகுதியில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றதாகத் தெரிவித்துள்ளனர். (ம-281)

## போதைப்பொரு...

அறிவிக்க விசேட தொலைத் தொடர்பு வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகம் தெரிவித்துள்ளது.

அதன்படி 011 302 4820, 011 302 4840 என்ற தொலைபேசி இலக்கங்கள் ஊடாகவும் 011 243 0912 என்ற தொலைநகல் இலக்கத்தினூடாகவும் தொடர்பு கொண்டு போதைப்பொருள் நடவடிக்கை குறித்து அறிவிக்க முடியுமென பொலிஸ் ஊடகப் பிரிவு பொதுமக்களை கேட்டுக்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

## மாமியார் உயிரி...

சுகவீனம் காரணமாக உயிரிழந்துள்ளார்.

அவ்ரின் இழப்பு தாங்க முடியாமல் சோகத்தில் மூழ்கியிருந்த 53வயதுடைய மருமகள் அன்றைய தினம் இரவு மயக்கமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்நிலையில் அவருக்கு தீவிர சிகிச்சையளிக்கப்பட்டுள்ள நிலையில் மூளையிலுள்ள நரம்பில் வெடிப்பு ஏற்பட்டு மறுநாள் 19 ஆம் திகதி மருமகளும் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இவ்வாறு ஒரு வீட்டில் அடுத்தடுத்து மாமியும் மருமகளுமாக இருவர் உயிரிழந்துள்ளது அப்பகுதியை பெரும் சோகத்தில் ஆழ்த்தியுள்ளது. (ம-281)

## இந்தியாவிலிரு...

தனது இந்திய விஜயம் குறித்து பிரதமர் ஜனாதிபதிக்கு தெளிவுபடுத்தியுள்ளார்.

இந்தியாவின் நிதியுதவியுடன் இலங்கையில் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தி திட்டங்கள் குறித்தே பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இலங்கையில் முன்னெடுக்கப்படும் இந்தியாவின் அபிவிருத்தி திட்டங்கள் குறித்து இந்திய பிரதமர் வெளியிட்டுள்ள கருத்துக்கள் காரணமாக சிறிசேன குழப்பமடைந்துள்ளார் என்பதற்கான சமிக்ஞையே இந்த சந்திப்பு என அரசியல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இலங்கை பிரதமருடனான சந்திப்பின் போது இந்திய பிரதமர் இலங்கையில் இந்தியா முன்னெடுக்கும் அபிவிருத்தி திட்டங்களின் வேகம் குறித்து கடும் ஏமாற்றம் வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

## அநாமதேய...

குழப்புகின்ற நோக்கத்தைக் கொண்டதாகும். இத்தகைய செயலில் யார் ஈடுபட்டாலும் இவை அநாகரிகமானவை. இத்தகைய செயற்பாட்டின் உள்நோக்கத்தை எங்கள் தமிழ் மக்கள் நன்கு புரிந்து கொள்வர்.

யார் எந்தக் குழப்பத்தைச் செய்ய முற்பட்டாலும் தமிழ் மக்கள் பேரவையின் ஏற்பாட்டில் நாளை 24-ம் திகதி மாபெரும் மக்கள் எழுச்சிக் கூட்டம் நடைபெறும். இக் கூட்டத்தில் அனைத்து தமிழ் மக்களையும் பங்கேற்குமாறு தமிழ் மக்கள் பேரவை அன்புரிமையுடன் வேண்டி நிற்கின்றது என அவ்வறிக்கையில் தெரிக்கப்பட்டுள்ளது. (ம-9-101)

## வடக்கு காணிக...

ற்றம் குறித்த கலந்துரையாடல் நேற்று முற்பகல் ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்ற போதே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இந்த பணிப்புரையினை விடுத்துள்ளார்.

சகல மாகாணங்களினதும் ஆளுநர்கள், முதலமைச்சர்கள் மற்றும் பிரதம செயலாளர்கள் உள்ளிட்டோர் இந்த கலந்துரையாடலில் பங்குபற்றினர்.

மாகாண சபைகளின் நிதி மற்றும் பௌதிக முன்னேற்றங்கள் வெற்றிடங்களை பூரணப்படுத்துதல் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பாக இதன்போது கலந்துரையாடப்பட்டன.

கிராமிய மக்களின் வறுமையை இல்லாதொழிப்பதற்காக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள செயற்திட்டங்களை வெற்றிகரமாக செயற்படுத்துவதற்கு தமது பூரண ஒத்துழைப்பினை வழங்குமாறு ஜனாதிபதி இதன்போது மாகாண முதலமைச்சர்களுக்கு பணிப்புரை விடுத்தார்.

வறுமையை இல்லாதொழிப்பதற்காக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள முதன்மை செயற்திட்டமான கிராமசக்தி தேசிய செயற் திட்டத்தின் குறிக் கோள்களை உரியவாறு நிறைவு செய்ய சகலரும் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டியதன் முக் கியத்துவத்தையும் ஜனாதிபதி இதன்போது சுட்டிக்காட்டினார். (ம)

வெளிநாடுகளுக்கான துரித பொதிகள் சேவை

11 Kg மேற்பட்ட பொதிகளுக்கு
1 Kg க்கான கட்டணம்
UK - 550/=,
France - 700/=
Germany - 650/=
Swiss - 750/=
Canada - 950/=
ஏனைய நாடுகளுக்கும் விசேட விலைக் கழிவு. பொதிகள் அனுப்பி வைக்கப்படும்
சகல நாடுகளுக்குமான விசா விண்ணப்ப ஏற்பாடுகள் நிபுணத்துவம் வாய்ந்தவர்களூடாக செய்து கொடுக்கப்படும். 077 755 4528
திருமுருகன் கொம் நெற் (பிறைவெட்) லிமிடெட்
321, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.(முட்டாஸ் கடை சந்தி அருகாமையில்)
46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி. DHL aramex SKYNET
04, மத்திய மகா வித்தியாலய வீதி, நெல்லியடி. கிளிநொச்சி, மன்னார். (6121)
3-5 Working Days

அமெரிக்க லொத்தர் விசா



2020-ம் ஆண்டுக்கான அமெரிக்க லொத்தர் விசா விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. நிரந்தர குடியேற்றத்திற்கான ஓர் அரிய சந்தர்ப்பம். (18 வயதுக்கு மேற்பட்டோர் தனியாக விண்ணப்பிக்கலாம்.)
2002-ம் ஆண்டு தொடக்கம் மேற்கொள்ளப்பட்டு வரும் இச்சேவையினூடாக 100க்கும் அதிகமானோர் அமெரிக்கா சென்றுள்ளனர். இச்சந்தர்ப்பத்தை நழுவ விடாது உங்கள் அதிர்ஷ்டத்தை தட்டிச் செல்லுங்கள்
தொடர்புகளுக்கு: 077 755 4528/ 070 375 0001-7
திருமுருகன் கொம் நெற் பிறைவெட் லிமிடெட்
321, கே.கே.எஸ் றோட், யாழ்ப்பாணம். (6121)
திருநெல்வேலி, நெல்லியடி, முல்லைத்தீவு

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

அமெரிக்க அதிஸ்ட விசா- இதுவே இறுதி வருடம் கிடைத்த வாய்ப்பை எப்படியாவது பயன்படுத்துங்கள்
நீங்களும் அதிஸ்டசாலியாகலாம்!





18 வயதிற்கு மேற்பட்ட யாரும் விண்ணப்பிக்கலாம்.
இலவசமாக குடும்பத்துடன் நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேற இரண்டு வாய்ப்புக்கள்
உங்களுக்கு விசா கிடைத்தால் உங்களுடன் சேர்த்து உங்கள் (காதலன்/காதலி) எதிர்கால வாழ்க்கைத்துணையையும் அழைத்துச்செல்லலாம்
இளைஞர்களே,யுவதிகளே வெளிநாடு செல்ல காசில்லையா? இலட்சக்கணக்கான காசை கொடுத்து ஏமாறுவதற்கு பதில் இலவசமாக கிடைக்கும் அதிஸ்ட வாய்ப்பை தவறவிடுவானேன்?
படித்தவர்கள், பட்டதாரிகள், அரச வேலை செய்பவர்கள், தனியார் துறையில்வேலை செய்பவர்கள், வேலையில்லா பட்டதாரிகள், A/L பரீட்சை எடுக்கும் மாணவர்கள், வெளிநாட்டில் படிக்க விரும்பும் மாணவர்கள் அனைவருக்கும்
55000 இலவச விசாக்கள்
0768226243
கடந்த காலங்களில் எமக்கூடாக விண்ணப்பித்து அமெரிக்கா சென்ற 60 வெற்றியாளர்களின் விபரங்களை ஆதாரத்துடன் எமது அலுவலகங்களில் பார்வையிடலாம்.
அலுவலர்களின் நன்மை கருதி சனி மற்றும் ஞாயிறு உட்பட மாலை 7 மணிவரை பதிவுகள் மேற்கொள்ளப்படும்
யாழ்ப்பாணத்தில் இருந்த வேலையற்ற யுவதிகளில் நானும் ஒருத்தி V2TRAVELS இல் பதிந்து விசா கிடைத்ததும் எனக்கு பதிவுத்திருமணம் நடந்து கணவரையும் நிரந்தர விசாவில் அமெரிக்காவிற்கு கூட்டிச்சென்றேன். மிகத்துல்லியமாக வழிநடத்திய V2TRAVELS க்கு நெஞ்சார்ந்த நன்றிகள்.
2017 ல் எமக்கூடாக 77 பேர் விசா வாய்ப்பை பெற்றுள்ளார்கள்
குடும்பத்தினருக்கு இரண்டு விசா சந்தர்ப்பங்கள்



(C-4077)
திருச்செல்வம்-மரியரோகினி
அமெரிக்கா விசா வெற்றியாளர்
இறுதி சந்தர்ப்பம் அடுத்த வருடம் இல்லை
V2 TRAVELS
யாழ்ப்பாணம் 0768226243 | கிளிநொச்சி 0768226240 | நெல்லியடி 0776699892 | சாவகச்சேரி 0768226242 | திருகோணமலை 0768226237
மானிப்பாய் 0768226238 | சுன்னாகம் 0764550670 | யாழ்ப்பாணம் 0768226241 | பருத்தித்துறை 0768226230 | வல்வெட்டித்துறை 0776697960

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 23.10.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.